பக்கங்கள்: 24
Saba. Pushpanathan
THURKA BOOKSHOP CHUNNAKAM
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

கண்கவர் ஆடைத்
தெரிவுகளுக்கு
சரவணா
ரெக்ஸ்
இல.526,529 பருத்தித்துறை வீதி,
நல்லூர்,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0778448045
இல.171, பிரதான வீதி,
நெல்லியடி.
தொ.பே.: 021 226 2992

விழுயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | பங்குனி 27, ஞாயிற்றுக்கிழமை 09.04.2017 | கதிர் 155

## ஜனாதிபதிக்கு மனோ கடிதம்

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு பிணை, புனர்வாழ்வு, விடுதலை ஏதாவது ஒன்றை வழங்குங்கள்!

## புத்தாண்டு, சர்வதேச வெசாக்கை ஒட்டிக் கோரிக்கை



கொழும்பு, ஏப்ரல் 09

**நீண்டகாலமாகச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை, ஒன்றில் பிணையில் விடுவியுங்கள். அல்லது புனர்வாழ்வுக்கு அனுப்பி விடுவியுங்கள். அப்படி இல்லையேல் முற்றாக விடுதலை செய்யுங்கள்.**

**இது, தமிழ் - சிங்களப் புத்தாண்டுக் காலம். அடுத்த மாதம் இலங்கையில் சர்வதேச வெசாக் பண்டிகை.**

**- இந்த இரண்டையும் ஒட்டி இந்த விடுவிப்பு நடவடிக்கையை முன்னெடுங்கள்.**

**- இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை எழுத்து மூலம் கோரியிருக்கின்றார் அமைச்சர் மனோகணேசன்.**

நீண்ட காலமாகச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள், தமக்கு பிணை அல்லது புனர்வாழ்வு அல்லது விடுதலை ஆகிய தெரிவுகளில் ஏதாவது ஒன்றை பெற்றுத்தரும்படி கோருகிறார்கள். பொது எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவுக்குப் பிணை வழங்கல், சட்ட மா அதிபர் தரப்பு அதற்கு ஆட்சே

பக்கம் 22 »

# யுத்தக் குற்றங்களுக்கு நீதி என்றோ ஒரு நாள் கிட்டும்!

## அதனை மறைத்துவிட முடியாது என்கிறார் சுமந்திரன்



கொழும்பு, ஏப்.09

"நான் ஒரு விடயத்தைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். யுத்தக் குற்றங்கள், மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் இழைக்கப்பட்ட எந்த இடத்திலும் (அந்த விடயங்கள்) நீர்த்துப் போனது கிடையாது. என்றோ ஒரு நாள் நீதி கிட்டும்."

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன்.

கொழும்பில் தனியார் தொலைக்காட்சி ஒன்றின்

பக்கம் 22 »

# பாக்கு நீரிணையில் இந்திய ரோந்தை அதிகரிக்கக் கோருகிறது இலங்கை!

## தமிழக மீனவர் ஊடுருவலைத் தடுக்கவாம்

சென்னை, ஏப்.09

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் சட்ட விரோதமாக அத்துமீறி நுழைகின்றமையைத் தடுப்பதற்காக பாக்குநீரிணையை ஒட்டி இந்தியாவின் ரோந்தை அதிகரிக்குமாறு இலங்கை, இந்தியாவைக் கோரியிருக்கின்றது.

பக்கம் 22 »

## ஜெனீவாத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த

# கால அட்டவணை தமிழ்க் கூட்டமைப்பு தயாரித்து வழங்கும்!

கொழும்பு, ஏப்.09

ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு மீளவும் வழங்கப்பட்டுள்ள இரண்டு வருடகால அவகாசத்தில் இலங்கை முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் தனியான கால அட்டவணை ஒன்றைத்

பக்கம் 22 »

# மஹிந்தவுக்காகத் திரளும் சனக் கூட்டம்; அதனால்தான் தேர்தல் ஒத்திவைப்பாம்!



இரத்தினபுரி, ஏப். 09

தனது கூட்டங்களுக்குத் திரளும் சனக் கூட்டத்தைப் பார்த்து அரசாங்கம் தேர்தலை ஒத்திவைத்து வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நேற்று சிறி லங்கா பொதுஜன முன்னணியின் அலுவலகம் ஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

"நான் வரும்போது

பக்கம் 22 »

### அளப்பு அருணாசலம்



அந்த என்றோ ஒரு நாள், எப்ப என்டதுதான் கேள்வி பாருங்கோ...!

# சுன்னாகத்தில் இளம் தம்பதியர் மின்சாரம் தாக்கி பரிதாபப் பலி!

சுன்னாகம், ஏப்.09

சுன்னாகம் பகுதியில் வீட்டில் மின்சாரம் தாக்கி இளம் கணவன் - மனைவி உயிரிழந்தனர்.

இந்தப் பரிதாபச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு சுன்னாகம் ஐயனார் கோவிலடிப் பகுதியில் இடம்பெற்றிருக்கின்றது.

அதே இடத்தைச் சேர்ந்த குணதாசன் (வயது - 24), மாக்கிரட் ஜோர்ஜ் சுகந்தி ஆகிய இருவரே உயிரிழந்தனர். அவர்களுக்கு ஏழு வயதிலும், ஒன்

பக்கம் 22 »

# 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை நல்லூர் தேர்த் திருவிழா தினத்தில்

யாழ்ப்பாணம், ஏப்.09

இந்தவருடத்துக்குரிய 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை ஓகஸ்ட் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூர்த் தேர்த்திருவிழா வன்று நடத்தப்படவிருக்கின்றமை குறித்து யாழ். பெற்றோர்கள் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

நல்லூர்த் தேர்த் திருவிழா யாழ்ப்பாண மக்களுக்கு மிகவும் முக்கியமான சமய வழிபாட்டுத் தினமாகும். இந்நாளில் புலமைப் பரிசில் பரீட்சையை நடத்துவது அப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் உள்ள வீடுகளில் பெரும்நெருக்கடியைக் கொண்டு வரும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

பக்கம் 22 »

புதிய நதியா நகை மாடம் பெருமையுடன் வெளியிட்ட



கவிஞர் வேலணையூர் சுரேஷின்
இரண்டு படைப்புக்களான
போக மறுத்த வீரகத்தி விநாயகர்
(இசை இறுவட்டு, கைநூல்)
பாட்டாலே பரவசம்
(இசை இறுவட்டு, பாடலாக்கத் தொகுப்பு)

என்பவற்றின் வெளியீட்டு விழாவுக்கு உரிய நேரத்துக்குக் கலந்து கொண்டு நிகழ்வையும் சிறப்பித்து, எம்மையும் மகிழ்வித்த தங்களின் பேரன்பிற்கு எல்லாம் வல்ல வெள்ளைப் புற்றடி சிறி வீரகத்தி விநாயகர் அருள் சித்திக்கப் பிரார்த்திக்கின்றோம்.

அத்துடன் எம்மால் வெளியிடப்பட்ட படைப்புக்களைப் பெற விரும்புவோர் மேற்படி ஆலயத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்பதையும் அறியத் தருவதுடன் எக் காரணம் கொண்டும் இவ் வெளியீடுகள் வெளி இடங்களில் விலைக்கு விற்கப்படவில்லை என்பதால் எவரும் ஏமாற வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கின்றோம்.

மண்கும்பானூர் கண்ணன் - புதிய நதியா நகை மாடம்,
73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு புத்தாண்டுக்கு முன்னர் ரூ. 10 ஆயிரம்

சித்திரைப் புதுவருடத்துக்கு முன்னதாக வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயக் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா பத்தாயிரம் ரூபா நிதியுதவி வழங்கப்படவுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவென்று கமத்தொழில் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

வறட்சியால் பயிர்கள் பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமன்றி, வறட்சியை முன்னிட்டு பயிரிடாதவர்களும் இந்த விசேட நிதியுதவியைப் பெறத் தகுதி பெறுவார்கள் என்றும் அமைச்சர் கூறியுள்ளார். பருவ மழை பொய்த்த நிலையில் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை எதிர் கொண்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புத்தாண்டுக்குப் பின்னர் வலுவான வேலைத் திட்டம்



**சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு ஜனாதிபதி மைத்திரிபால செவ்வி**

கொழும்பு, ஏப்.09

புத்தாண்டுக்குப் பின்னர், குறைகள், தாமதங்களை போக்கி நாட்டை முன்னோக்கி இட்டுச் செல்ல வலுவான வேலைத் திட்டத்தை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

அரசை வலுவாக முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான பிரதான தேவையெனக் கருதி அமைச்சரவையில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படும்.

அரசின் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்க அமைச்சரவை மாற்றம் மட்டும் போதுமானதல்ல என்பதால், மேலும் சில நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அரசை ஆட்சிக்குக் கொண்டு வந்த மக்கள் அரசின் மூலம் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியும் என்று தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

மக்கள் இந்த நம்பிக்கையை இழக்கும் முன்னர் புதிய வேலைத் திட்டத்துடன் புதிய பயணத்தை ஆரம்பிப்போம். தூய்மையான அரசியல் அமைப்பொன்று தேவை என்ற தாகத்தில் இலங்கை தவித்து வருகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இளமையான வலுவைச் சேர்த்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசு ஒன்றை ஏற்படுத்த தலைமைத்துவத்தை வழங்குவேன்.

தற்போது எவர் மீதும் குற்றங்களை சுமத்தி பயனில்லை. கடந்த ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட சகல பிரச்சினைகளுக்கும் நாங்கள் தீர்வு காண வேண்டும்.

இரு கட்சிகள் இணைந்த இணக்க அரசு என்ற வகையில் அர்ப்பணிப்புடன் மக்களின் எதிர்பார்ப்புக் களை நிறைவேற்றுவோம்.

இந்த வருடத்தின் இறுதியில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படும்.- என்றார். (ஐ)

## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய கைலாச வாகன வெள்ளோட்டம் நாளை

வரலாற்றுப் புகழ் மிக்க மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய புதிய கைலாச வாகன வெள்ளோட்ட விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

23 அடி உயரமும் 9 அடி அகலமும் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்தக் கைலாச வாகனம் முக்கலசங்களையும் மூன்று வாயில்களையும் எட்டு யாழிகளையும் ஏழு அடி இராவணனையும் கொண்டுள்ளமை விசேட அம்சமாகும்.

நாளை காலை 7 மணிக்குக் கலசங்களுக்கு அபிஷேகம், பூசை, தேரடிப் பொங்கல் என்பன இடம்பெற்று நண்பகல் 12 மணியளவில் கலசங்களுடன் சுவாமி வீதிவலம் வருதல் இடம்பெறும்.

12.45 மணியளவில் கலச ஸ்தாபனம் இடம்பெற்று ஒரு மணிக்கு வெள்ளோட்டம் இடம்பெறும்.

தொடர்ந்து கலைஞர் கௌரவிப்பு இடம்பெறும்.

நிகழ்வில் ஆசியுரைகளை மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ப.ஜெயக்குமாரக் குருக்கள், நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் நிகழ்த்துவர்.

வாழ்த்துரைகளை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் க.கௌரிகாந்தன் ஆகியோர் வழங்குவர். (ஐ)



## வயோதிபர் இல்லங்களை இல்லாதொழிக்க 60 வயதுக்கு மேல் ஓய்வூதியம் வழங்குக!

### இக்கோரிக்கையுடன் வவுனியா இளைஞன் இலங்கையைச் சுற்றி சைக்கிள் ஓட்டம்

வவுனியா, ஏப்.09

வவுனியாவை சேர்ந்த கலைஞரான தர்மலிங்கம் பிரதாபன் என்ற இளைஞன் இலங்கையில் வயோதிபர் இல்லங்களை இல்லாதொழிக்க 60 வயதுக்கு மேல் அனைவரும் ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து இலங்கையைச் சைக்கிளில் சுற்றிவரவுள்ளார்.

வவுனியா கந்தசுவாமி கோவில் முன்பாக நேற்றுச் சனிக்கிழமை காலை 8 மணிக்கு தனது பயணத்தை ஆரம்பித்த இவர் ஆயிரத்து 515 கிலோ மீற்றர் தூரத்துக்குச் சைக்கிளில் பயணித்து இலங்கையைச் சுற்றிவரவுள்ளார்.

வவுனியாவில் இருந்து தனது பயணத்தை ஆரம்பித்துள்ள இவர் சுமார் 11 நாள்களில் இலங்கையைச் சுற்றிவருவதற்கான கால எல்லையை நிர்ணயித்து தனது பயணத்தைத் தொடங்கியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் இதற்கான ஆதரவை வழங்கியுள்ளது.

இந்தச் சாதனைப் பயணத்தின் ஆரம்ப நிகழ்வில் வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வட மாகாணசபை உறுப்பினர்களான ஜி.ரி. லிங்கநாதன், எம். தியாகராசா, செ. மயூரன் உட்பட பலரும் கலந்துகொண்டிருந்தனர். (ஐ-100)

## நீராவியடி விநாயகர் மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப்.09

நீராவியடி ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன புனராவர்த்தன பஞ்சகுண்ட பட்சமகாகும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.15 மணி தொடக்கம் 10.08 மணி வரையுள்ள சுப நேரத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8.15 மணிக்குப் பஞ்ச தள இராஜ கோபுர கும்பாபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து மூலஸ்தான மூர்த்திக்கு 9.15 மணிக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் நடைபெறும். மாலை 6 மணிக்கு விஷேட வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று சுவாமி வீதியுலா வருவார். (ஐ)

(சிறப்பிதழ் 12,13 ஆம் பக்கங்களில்)

## 'நிலமெகவர' வேலைத்திட்டத்தில் வவுனியாவில் நடமாடும் சேவை

### நெரிசலில் சிக்கி மயக்கமடைந்த குழந்தைகள் மீட்பு

ஜனாதிபதியின் மக்கள் சேவை தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் 'நிலமெகவர' என்னும் பெயரிலான நடமாடும் சேவை வவுனியாவில் இரு இடங்களில் நேற்று இடம் பெற்றது.


வவுனியா பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மக்களுக்காக வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திலும், வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மக்களுக்காக காமினி மகா வித்தியாலயத்திலும் இடம்பெற்றது.

வவுனியாவில் காணிப்பிரச்சினை மற்றும் காணி உறுதிப் பத்திரங்கள் அற்ற ஆயிரக் கணக்கான மக்கள் இந்த நடமாடும் சேவையில் பங்குபற்றியிருந்தனர். இருந்த போதும் வவுனியா பிரதேச செயலக ஏற்பாட்டில் நடைபெற்ற நடமாடும் சேவை நன்குதிட்டமிடப்படாமையால் கடும் வெயில் மற்றும் சன நெரிசல் காரணமாக இரு குழந்தைகள் உட்பட மூவர் உடல்சோர்வடைந்து மயக்கமுற்ற நிலையில் அங்கு செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட ஊடகவியலாளர்களால் நெரிசலில் இருந்து மீட்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இந்த நடமாடும் சேவையில் ஏற்கனவே காணி உறுதிப்பத்திரங்களுக்கு விண்ணப்பித்து உறுதிப் பத்திரங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளவர்கள் வரவழைக்கப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டனர் என்றும் சிலரது காணிப் பிரச்சினை தொடர்பில் பின்னர் பிரதேச செயலகம் வருமாறு திருப்பி அனுப்பப்பட்டனர் என்றும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலகம் ஒரு திட்டமிடல் இன்றி இதனை மேற்கொண்டதால் நடமாடும் சேவைக்கு வந்த பலரும் தீர்வோ உரிய பதிலோ கிடைக்காமையால் அதிகாரிகளுடன் முரண்பட்டுக் கொண்டும் அங்கிருந்து வெளியேறினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-100)







காரைநகர் ஈழத்துச் சிதம்பர பங்குனி உற்சவ தேர்த் திருவிழா நேற்றுநடைபெற்றது. தேர்வலம்வருவதைப்படத்தில்காணலாம்.

# இலங்கை மீனவர்கள் எழுவரையும் இந்தியா விடுதலை செய்யவேண்டும்

## கடற்றொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர இந்தியாவிடம் கோரிக்கை

'கவீ புதா' என்ற மீன்பிடிப் படகிலிருந்த ஏழு இலங்கை மீனவர்களும் இந்தியக் கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டமை நியாயமற்றது என்பதனால் அவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்தியாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கடற்றொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர, இலங்கையிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகருக்கு அறிவித்துள்ளார்.

அமைச்சர் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில் –

'கவீ புதா' மீன்பிடிப் படகிலிருந்த இலங்கை மீனவர்கள் ஏழுபேரும் இந்திய கடல் எல்லையில் மீன் பிடிக்கவில்லை. அவர்கள் வெகு தொலைவில் ஆழ் கடல்மீன்பிடிப்பில்ஈடுபட்டுவிட்டு இலங்கை திரும்பும் வழியிலேயே இந்திய கடலோரக் காவற்படையினரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இந்தியக்கடல்எல்லைக்குள் மீனவர்கள் அத்துமீறாத நிலையில் அவர்களை கைது செய்திருப்பது நியாயமற்றது. அவர்களை உடன் விடுதலை செய்ய வேண்டும்.

இலங்கை மீனவர்கள் பயணம் செய்த 'கவீ புதா' எனும் மீன்பிடிப் படகு பயணம் செய்த கடல் வழிப்பாதை வி.எம்.எஸ். தொழில்நுட்பத்தின் மூலம் ஒளிப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி இந்தியாவுக்கு கீழே இந்த தரவுகள் மற்றும் வரைப்படங்களை இந்திய உயர் ஸ்தானிகராலயத்துக்கூடாக இந்திய அரசாங்கத்துக்கு வழங்குவதற்கும் அமைச்சர் அமரவீர நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதேவேளை, இந்தியக் கரையோரக் காவற்படையினரால் கைதுசெய்யப்பட்ட இலங்கை மீனவர்களை எதிர் வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு இராமநாதபுரம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம)

# மயங்கி வீழ்ந்தவரின் பணம் உறவினர்களிடம் ஒப்படைப்பு

## திருகோணமலையில் சம்பவம்

வவுனியா, ஏப்.09

வவுனியாவிலிருந்து திருகோணமலை நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்தவர் வெயில் காரணமாக மயக்கமுற்று விழுந்த நிலையில் அவரின் பயணப் பொதியிலிருந்த 3 இலட்சத்து 7 ஆயிரம் ரூபா பணத்தை மீட்டு அவரது உறவினர்களிடம் ஒப்படைத்த சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

திருகோணமலை, உட்துறைமுக வீதியைச் சேர்ந்த முத்துத்தம்பி விக்னராசா(வயது 49) என்பவரே மயக்கமுற்றவர் எனத் தெரியவருகின்றது. அவர் ஹொறவப்பொத்தான ரத்மலைப் பகுதியைச் சேர்ந்த எம். சாரிப் என்பவரின் வீட்டுக்கு முன்னால் மயக்கமுற்று விழுந்து கிடந்த வேளை அவரின் பயணப் பொதியில் இருந்த 3 இலட்சத்து 7 ஆயிரம் ரூபா பணமும், தங்க ஆபரணமும் கண்டெடுக்கப்பட்டு அவரது மனைவி, பிள்ளைகள் மற்றும் உறவினர்களிடம் திருகோணமலைப் பொதுவைத்தியசாலையில்வைத்து ஒப்படைத்தனர்.

மோட்டார் சைக்கிளில் சென்றவர் மயக்கமுற்றபோது அவரது தலையில் காயம் ஏற்பட்டுள்ளமையினால் மஹதிவுல்வெவப்பிரதேசவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிகசிகிச்சைக்காக திரு கோணமலைப் பொது வைத்திய சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# மருதங்கேணியில் வாள்வெட்டு

யாழ்ப்பாணம்மருதங்கேணி பகுதியில் வாள்வெட்டுத் தாக்குதலுக்கு இலக்கான ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மருதங்கேணி பகுதியில் புடவைக் கடை நடத்தி வந்த வேலையற்ற பட்டதாரிஒருவர்மீதே இந்ததாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

32 வயதான தவராசா நிமல்ராஜ்என்பவரேசம்பவத்தில் காயமடைந்துள்ளார்எனவும், சம்பவம் தொடர்பில் பளைப்பொலிஸாருக்கு முறைப்பாடு செய்திருந்தபோதிலும்எவ்விதநடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து, 119 என்ற அவசர இலக்கத்திற்கு வழங்கிய முறைப்பாட்டைத் தொடர்ந்தே குறித்த பகுதிக்கு பொலிஸார் வருகை தந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ)

# இலங்கை அரசியலில் சில பூனைகள் அடிக்கடி மியா மியா என கத்துகின்றன

## ஜே.வி.பி தொழிற்சங்கத் தலைவர் லால்காந்த கிண்டல்

கொழும்பு, ஏப்.09

இலங்கை அரசியலில் சில பைத்தியக்கார பூனைகள் உருவாகியுள்ளன. அதில் ஒருவர் அமைச்சர் ராஜித சேனாரத்ன, அடுத்தது எஸ்.பீ. திஸாநாயக்க. இந்த இருவரும் அடிக்கடி 'மியா மியா' எனச் சத்தமிடுகின்றனர் என மக்கள் விடுதலை முன்னணியின் தொழிற்சங்க ஊழியர்கள் அமைப்பின் தலைவர் லால்காந்த கிண்டலடித்துள்ளார்.

மிருக வைத்தியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடும்போது அமைச்சர்கள் எவரும் நோய் வாய்படாதிருக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாம் நேற்று முன்தினம் அமைச்சர்களுக்கு ஒரு முக்கிய அறிவித்தலைக் கூறினோம். நேற்றைய தினம் சகல மிருக வைத்தியர்களும் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். எனவே, அமைச்சர்கள் யாரும் நோய் வாய்ப்படாதிருக்க வேண்டும் எனக் கூறினோம், என்றும் அவர் கிண்டலடித்தார். (ம)

# மாணவனுக்கு 'பிளேட்' வெட்டு

பருத்தித்துறை, ஏப். 09

தனியார்கல்விநிலையத்துக்குச் சென்றுகொண்டிருந்த மாணவனை வழிமறித்து மோட்டார் சைக்கிளில் பலவந்தமாக ஏற்றிச் சென்ற இருவர் அம்மாணவனைப் பிளேட்டினால் வெட்டிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று சனிக்கிழமை மாலை 5 மணியளவில் பருத்தித்துறைப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. இன்பருட்டியைச் சேர்ந்த சேகர் திருராஜ் (வயது 17) என்ற மாணவனே பிளேட்டினால் வெட்டப்பட்டவனாவான்.

வீட்டில் இருந்து தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்றுகொண்டிருந்த மாணவனைத் தம்பசிட்டிப் பகுதியில் வைத்து 'அப்பாச்சி' மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பலவந்தமாக ஏற்றிச் சென்றனர். அவனை சுப்பர் மடம் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றிற்கு அருகில் வைத்துப் பிளேட்டினால் வெட்டியுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

இது தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், அம்மாணவன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளான். (ம–40)

# புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் உற்சவம் இன்று

## விசேட போக்குவரத்து ஏற்பாடுகள்



(எஸ். நிதர்ஷன்)

கிளிநொச்சி – கரைச்சி புளியம்பொக்கணைநாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இந்தப் பொங்கல் உற்சவத்துக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியாகியுள்ளன என ஆலய நிர்வாகத்தினர் நேற்று அறிவித்தனர்.

வருடா வருடம் இந்தப் பொங்கல் உற்சவத்துக்குத் தமிழர் தாயகத்தின் பல பாகங்களிலும் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ஒன்றுகூடுவது வழமை. அதேபோன்று, இந்த வருடம் அதிக எண்ணிக்கையான பக்தர்கள்வருகை தருவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பக்தர்களின் நன்மை கருதி யாழ். மத்திய பேருந்து நிலையம், பருத்தித்துறைப் பேருந்து நிலையம் மற்றும் பல பேருந்து நிலையங்களில்இருந்து இன்று விசேட போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, பக்தர்கள் அதிகளவில் ஒன்றுகூடுவதால் திருடர்களின் தொல்லைகளும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் இம்முறை அதிகளவு பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்படுவர் என ஆலயநிர்வாகம்தெரிவித்தது.

எனினும், பக்தர்கள் வீண் அசௌகரியங்களைத் தவிர்க்கும் முகமாக பெறுமதிமிக்க தங்க நகைகள் அணிந்து வருவதைத் தவிர்க்கவேண்டும்என வும் ஆலய நிர்வாகம் மேலும் கேட்டுக்கொண்டுள்ளது. (ம)

# வட்டார செயற்குழுக்கள் ஊடாகவே மக்கள் பிரச்சினையைத் தீர்க்கமுடியும்

## ஈ.பி.டி.பி. நிர்வாக செயலாளர் குகேந்திரன் தெரிவிப்பு



ஊர்காவற்றுறை, ஏப்.09

மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடையாளம் அவற்றைத்தீர்ப்பதற்கு வட்டார செயற்குழுக்கள் அவசியம். அவ்வாறான குழுக்கள் மூலமே பிரதேச மக்களுக்கான அபிவிருத்திகளையும் திறம்பட மேற்கொள்ள முடியும். எனவேதான் நாம்வட்டாரச்செயற்குழுக்களை அமைத்து வருகின்றோம் என, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட நிர்வாகச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சா.வே.குகேந்திரன் தெரிவித்தார்.

தீவகம் – எழுவைதீவிற்கு நேற்றுச் சென்ற ஈ.பி.டி.பியின் குழுவினர் அங்குள்ள மக்களைச்சந்தித்துக்கலந்துரையாடினர். இதன்போது அங்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

எழுவைதீவிற்கான இறங்குதுறை, பிரதானவீதி நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாதிருந்த நிலையில் இப்பகுதி மக்கள் எமது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர். அதனடிப்படையில் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கு அமைவாக வீதி தற்போது புனரமைக்கப்பட்டுள்ளது.

இப்பாதை புனரமைப்பு மட்டுமல்லாது இப் பகுதியின் பல்வேறுபட்ட உட்கட்டுமான மற்றும் ஏனைய அபிவிருத்திகளைக் கடந்த காலத்தில் நாம் முன்னெடுத்திருந்தோம். இவற்றிற்கு நாம் அப்போது அங்கம் வகித்துக் கொண்டிருந்த இணக்க அரசியல் பெரும் பலமாக இருந்தது. - என்றார்.

மேலும், தீவகத்தில் அபிவிருத்தியை முன்கொண்டு செல்வதற்கு மக்கள் தமது ஒன்றிணைந்த ஆதரவை வழங்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். (ம)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மஹிந்தர் புராணம்

'செல்லும், செல்லாதவை எல்லாவற்றுக்கும் செட்டியாரே பொறுப்பு' - என்ற பேச்சுமொழி நம்மத்தியில் உண்டு.

தென்னிலங்கை அரசியலிலும் இப்போது செல்லும் செல்லாத விடயங்கள் எல்லாவற்றுக்கும் செட்டியார் போல ஒருவரைத்தான் காட்டுகின்றார்கள். அவர் வேறு யாருமல்லர். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவேதான்.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்தாமல் இழுத்தடிப்பதா? காரணம் மஹிந்த ராஜபக்ஷதான். தேர்தலை நடத்தினால் அதைப் பயன்படுத்தி மஹிந்த ராஜபக்ஷ விஸ்வரூபம் எடுத்து விடுவார். ஏற்பட்டுள்ள சமாதான நிலைமை குழம்பி விடும். எல்லாம் மோசமாகிப் போகும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதா? ஐ...ஐயோ... நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை இல்லாமல் போய் அந்த அதிகாரம் மைத்திரிபால சிறிசேனவிடம் இருந்து நழுவினால், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியையும் மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரியிடம் இருந்து பறித்து விடுவார்...!

அதிகாரப் பரவலாக்கத்துக்கு வழி செய்யும் அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டுவருவதா? கூடவே கூடாது. அதற்கு முயற்சித்தால் அதைப் பயன்படுத்தியே நாட்டில் பெரும் இனக் குரோதத்தைத் தூண்டி விட்டு, குழப்பத்தை ஏற்படுத்தி, களேபரத்தை உண்டு பண்ணி, நாட்டையே கெடுத்துக் குட்டிச் சுவராக்கி விடுவார் மஹிந்த ராஜபக்ஷ.

நல்லிணக்கம், நல்லாட்சி போன்றவற்றுக்கு வழி செய்யும் அரசமைப்பைக் கொண்டு வருவதா? செய்யவே கூடாது. சரியான - நியாயமான - சகலரையும் ஒரே விதமாக மதிக்கின்ற - நீதியான - உரிய அதிகாரப் பரவலாக்கலைக் கொண்ட - ஓர் அரசமைப்புத் தேவை என்றால், அதற்குப் புதிய அரசமைப்பைத்தான் கொண்டு வர வேண்டும். புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதாயின், நாட்டில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும். சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதா? அவ்வளவுதான். அதைப் பயன்படுத்தி நல்லாட்சி அரசை வீட்டுக்கு அனுப்பி, அதிகாரத்தைக் கைப்பற்றி, நிலைமையைத் தலைகீழாக்கி விடுவார் மஹிந்த ராஜபக்ஷ.

யுத்த கால மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்ற மீறல்கள் குறித்து நீதியான விசாரணை நடத்துவதா? சீ...! அதற்கு இடமே இல்லை.

யுத்தக் குற்றம் என்ற கதையைப் பேசினாலேயே இந்த அரசை மஹிந்த சுலபமாகக் கவிழ்த்து விடுவார். இந்த நல்லாட்சி அரசின் கதை கந்தலாகிவிடும்.

இப்படி தென்னிலங்கை அரசியல் தலைமையிடம் எந்த நீதியான விவகாரத்தைச் செய்யச் சொல்லி வற்புறுத்தினாலும், அதைச் செயற்படுத்தாமல் இருப்பதற்கு நல்ல, வாய்ப்பாக மஹிந்த ராஜபக்ஷ என்ற 'அரசியல் விரோதி' தென்னிலங்கை அரசுத் தலைமைக்குக் கிடைத்திருக்கின்றது.

தெற்கில் எந்தப் பிரச்சினையைப் பார்த்தாலும் - எங்கு திரும்பினாலும் - மஹிந்த என்ற மாயையைக் காட்டி, அதற்கு எதிராக அரசியல் செய்யும் குழுக்களை - கட்சிகளையே - காணமுடிகிறது.

இதைத்தான் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் சீற்றத்துடன் சிவசக்தி ஆனந்தன் எம்.பி. சுட்டிக் காட்டினார்.

"மஹிந்தவைக் காரணம் காட்டி, நல்லாட்சி அரசு தமிழரை நடுவீதிக்குக் கொண்டு வந்து விட்டது." - என்று அவர் சொல்லியதும் இதைத்தான்.

2015 ஜனவரித் தேர்தலில் தோற்றதும் மஹிந்த ராஜபக்ஷ வீட்டுக்குச் சென்றுவிடுவார், அடங்கிப் போய்விடுவார், அரசியலிலிருந்து ஒதுங்கிவிடுவார் என்றுதான், பலரும் எதிர்பார்த்தனர்.

தமிழ்த் தலைவர்களும் கூட அப்படித்தான் கருதினார்கள்.

ஆனால், தாம் செலவிடப்பட்ட சக்தி அல்ல, இன்னும் செல்வாக்கு உள்ள சக்தியே என்று திட உறுதியுடன் செயற்பட்டுத் தமது அரசியல் செல்வாக்கையும், திடமான - பலமான - உறுதியான - மனதுடன் அரசியலில் இருக்கின்றார் என்பதையும் மஹிந்தர் நிரூபித்து வருகின்றார்.

மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் பலமான சக்தியாக எழுகின்றமையை விரும்பாத, கொழும்பில் உள்ள சில அரசியல் தூதரகங்கள் கூட, மஹிந்தவை மண்டியிட வைப்பதற்கான வாய்ப்புகள் குறித்து பல தரப்பினருடனும், பல மட்டங்களிலான செயற்பாடுகளில், அந்த தூதரகங்களின் மூத்த அதிகாரிகள் சிலர் மூலம் முனைப்பாக எடுத்துவருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

மஹிந்தவிலிருந்து அவரது சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷவைப் பிரித்து ஒதுக்கிவிட்டால், மஹிந்தவின் அரசியல் செல்வாக்கு பெருமளவு குறையும் எனக் கணக்குப் போட்ட சில வெளிவிவகாரத் தரப்புகள் அதற்கான முன் முயற்சிகள், பேச்சுகளில் ஈடுபடத் தொடங்கிவிட்டன என்றும் கூறப்படுகின்றது.

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த வெற்றி என்ற பெருமையையும் - சிங்கள, பௌத்தம் என்ற பேரினவாதம் என்ற பெரும்பூத மாயையையும் -

கையில் வைத்திருக்கும் வரை, மஹிந்த ராஜபக்ஷ என்ற தென்னிலங்கை அரசியல்வாதியை வீழ்த்துவது மிகக் கஷ்டமான காரியம்.

ஆனால், தென்னிலங்கை அரசியல் தலைமையிடம் இவற்றை எல்லாம் வெற்றி கொள்ளக் கூடிய அரசியல் அறம், நீதியான பண்பியல்பு, நேர்மையான செயற்போக்கு, வெளிப்படையான பேச்சு ஆகியவற்றுடன் நியாயம் செய்யும் அரசியல் துணிச்சலும் இருக்குமாயின் மஹிந்தரை நிரந்தரமாக ஒதுக்குவது அப்படி ஒன்றும் கஷ்டமான காரியமே அல்ல.

# வேறு எந்த அரசையும் விட எங்கள் அரசு விவசாயத்திற்கு முக்கியத்துவம் அளிக்கிறது

## மார் தட்டிக் கூறுகின்றார் ஜனாதிபதி மைத்திரி

கொழும்பு, ஏப்.09



நாட்டின் விவசாயத்துறையையும் விவசாயிகளின் பொருளாதாரத்தையும் மேம்படுத்துவதற்காகத் தற்போதைய அரசாங்கம் வேறு எந்தவொரு அரசாங்கமும் முன்னெடுக்காத பணிகளை முன்னெடுத்துள்ளது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் ஜய ஸ்ரீ மகா விஹாரையில் நேற்று முற்பகல் இடம்பெற்ற தேசிய புத்தரிசி விழாவில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

விவசாயி ஒருவரை நாட்டின் ஜனாதிபதி பதவிக்கு கொண்டு வந்த நாட்டு மக்கள், தன் மீது கொண்ட எதிர்பார்ப்பை தான் நிறைவேற்றுவார் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

அத்துடன், வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான நிவாரண உதவிகளை வழங்கத் தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்துள்ள திட்டங்கள், இதுவரை எந்தவொரு அரசாங்கத்தினாலும் முன்னெடுக்கப்படாதவை எனவும் அவர் நினைவூட்டியுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காகச் சித்திரைப் புத்தாண்டிற்கு முன்பாக அவர்களின் வங்கிக் கணக்குகளில் சேமிப்புக்களை மேற்கொள்வதற்காக அரசாங்கம் எழுநூறு கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது எனவும் ஜனாதிபதி கூறினார். (ம)

# இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கான வரிச் சலுகைக் காலம் மேலும் நீடிப்பு

கொழும்பு, ஏப்.09

இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கான வரிச்சலுகைக்கான காலம் நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 31 ஆம் திகதி முடிவடையவிருந்த வரிச்சலுகை அடுத்த மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ அரிசிக்கு ஐந்து ரூபாவை மாத்திரம் விசேட வரியாக விதிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

சலுகை வழங்கப்பட்டுள்ள நிலையிலும் கூடுதலான விலைக்கு அரிசியை விற்பனை செய்ய சிலர் முயன்று வருகின்றமை தொடர்பான தகவல்களும் கிடைத்துள்ளன.

கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக அரிசியை விற்பனை செய்ய இடமளிக்கப்படமாட்டாது என்று அரசு வலியுறுத்தியுள்ளது. இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ சம்பா அரிசி 80 ரூபாவுக்கும், ஒரு கிலோ நாட்டரிசி 72 ரூபாவுக்கும், சிவப்பு அரிசி 70 ரூபா வுக்கும் விற்பனை செய்யப்படுவது அவசியமாகும்.

கட்டுப்பாட்டு விலையின் கீழ் விற்பனை செய்யப்படும் அரிசியின் விலையை பண்டிகைக் காலத்தில் அதிகரிக்கும் எந்தத் தேவையும் அரசுக்குக் கிடையாது என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவிய வறட்சியான காலநிலையால் நெல் அறுவடை பாதிக்கப்பட்டது. இதனைத் தடுப்பதற்காக தீர்வையற்ற முறையில் அரிசியை இறக்குமதி செய்ய அரசு அங்கீகாரம் அளித்துள்ளது. இதன் கீழ் இரண்டு லட்சத்து 17 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பொதுமக்களது நிலங்களில் இருந்து படையினர் வெளியேற வேண்டும்

## மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் தெரிவிப்பு

முள்ளிக்குளம் மக்களின் நில மீட்புப் போராட்டம் தொடர்ச்சியாக நகர்ந்து கொண்டிருக்கின்ற போதும் இலங்கை அரசு தொடர்ந்தும் பாராமுகமாக உள்ளது. பொதுமக்களது நிலங்களில் இருந்து படையினர் உடன் வெளியேற வேண்டும்.

-இவ்வாறு மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன் தெரிவித்தார்.

முள்ளிக்குளம் மக்களின் போராட்டத்தில் கலந்து கொண்டு அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

மக்களின் நியாயமான கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. நூற்றாண்டுகளுக்கு மேலாக வாழ்ந்த பூர்வீக நிலங்களை விடுவிப்பதற்கான வழிவகைகள் எவையும் மேற்கொள்ளப்படாது, அவர்களது வீடு, ஆலயம், பாடசாலை போன்ற பூர்வீக இடங்களை விடுவிக்காது அபகரித்து வைத்துள்ளனர்.

இரண்டு ஆண்டுகள் மனித உரிமைகள் ஆணையகத்தில் கால நீடிப்புப் பெற்றுக் கொண்டமைக்கு அமைவாகக் கூட பொது மக்களின் நிலங்களில் இருந்து படையினர் வெளியேற வேண்டும் என்னும் சரத்தும் உள்ளீர்க்கப்பட்டுள்ளது.

அதற்கு இணங்கிய இலங்கை அரசு அந்தக் கோரிக்கையை ஏற்றாவது இந்த நிலங்களில் இருந்து வெளியேறுவதற்கு உரிய வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும்.-என்றார். (ஐ)



## வீதி விபத்துக்களைத் தவிர்ப்போம்!

சிறுவர்களை இயலுமானவரை சைக்கிள் பின் கரியரில் ஏற்றிச் செல்வதைத் தவிர்ப்போம். செல்ல வேண்டிய கட்டாயம் இருக்குமாயின், அவர்கள் சப்பாத்துக்கள் அணிந்திருப்பதனை உறுதி செய்வோம்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை/ மாநகரசபை, யாழ்ப்பாணம்.

### நாளை

10.04.2017
திங்கட்கிழமை

நட்சத்திரம்: அத்தம் பி.இ. 3.37 வரை
திதி: சதுர்த்தசி மு.ப. 10.39 வரை

சுபநேரம்: 12.06 – 1.36 வரை
இராகுகாலம்: 7.36 – 9.06 வரை

# ஐ.தே.கவின் விற்பனைத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் சுதந்திரக் கட்சி

கொழும்பு, ஏப்.09

அரச நிறுவனங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதார வேலைத் திட்டத்துக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் இந்தக் கொள்கை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைக்கு பாதிப்பானது என்பதால், உடனடியாக இதில் தலையிடுமாறு சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுக்கவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை 99 ஆண்டுகளுக்கு சீன நிறுவனத்துக்கு குத்தகைக்கு கொடுக்கவும் திருகோணமலை துறைமுகத்தில் உள்ள எண்ணெய் தாங்கிகளை இந்திய எண்ணெய் நிறுவனத்துக்கு வழங்கவும் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனங்கள் உட்பட அரச வளங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்குவதன்மூலம் நாடு சர்வதேசமயமாகி வருவதால், பொது மக்களின் மத்தியில் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது என்றும் இது குறித்து அமைச்சர்கள் ஜனாதிபதிக்கு விடயங்களை தெளிவுபடுத்த உள்ளனர் என்றும் அரசியல் தரப்பில் பேசப்படுகிறது என்று அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ஐ)

# மதுபான வருமான நிதியால் நாடு அபிவிருத்தியடையாது

## மனித வளம் நாசமாகும் என்று ஸ்ரீநேசன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப்.09

மனித வளத்தை நாசமாக்கும் மது வருமான நிதியால் நாட்டை அபிவிருத்தியடையச் செய்ய முடியாது.

-இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் மதுவரிக் கட்டளைச்சட்டம், புகையிலை, மதுசாரம் மீதான ஒழுங்கு விதிகள் தொடர்பான விவாதம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்துள்ளவை வருமாறு:-

அபிவிருத்திக்கான வளங்களாக மனிதவளம், பௌதிகவளம், நிதிவளம், காலவளம், தகவல் வளம் போன்றவற்றைக் குறிப்பிட முடியும். இந்த வளங்களில் மிக முக்கியமானது மனிதவளமாகும்.

மனிதவளத்தை மேலும் வளப்படுத்துவதன் மூலமாகவும், பலப்படுத்துவதன் மூலமாகவும் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும்.

மாறாக, மனித வளத்தை மதுசாரம், புகையிலை போன்ற போதைப் பொருள்களால் நாசமாக்கி விட்டு, அந்த நாசமாக்குவதன் மூலமாகக் கிடைக்கும் நிதிவளத்தைக் கொண்டு நாட்டையும் மக்களையும் கட்டியெழுப்பமுடியாது.



அதாவது மது, போதைவஸ்துப் பாவனையால் உற்பத்திக்குப் பயன்படுத்தக்கூடிய மனித வளத்தில் கணிசமான அளவு நாட்டுக்குப் பயனற்றதாகவும், நாட்டுக்குச் சுமையாகவும் மாறிவிடுகின்றது.

எனவே, மனித வளத்தை நாசமாக்கிவிட்டு அபிவிருத்தியை அடைந்துவிடமுடியாது. கண்களை விற்று விட்டு, ஓவியங்களை வாங்குவதால் பயனில்லை அது போன்றுதான் மனிதவளத்தை அழிக்கும் மது நிதி வருமானத்தால் நாட்டைக்கட்டியெழுப்ப முடியாது.

மது, போதைவஸ்துகளால் கிடைக்கும் வருமானத்தை விட, அதனால் பாதிக்கப்பட்டு நோயாளிகளாகின்றவர்களைப் பரிகாரம் செய்வதற்காகவும், பராமரிப்பதற்காகவும் அதிகம் செலவு செய்யப்படுகின்றது என்பதை அரசு விளங்கிகொள்ள வேண்டும்.

போதையற்ற தேசத்தை உருவாக்கப்போவதாக ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அடிக்கடி கூறி வருகிறார்.

அதேவேளை, நாட்டில் மதுச் சாலைகள், மதுப்பாவனைகள் அதிகரித்த வண்ணம் உள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் 58 மதுவிற்பனை நிலையங்கள் இருக்கின்றன என அறியப்பட்டுள்ளன.

இதனால் மதுப்பாவனைகள் நுகர்வுகள் இளைஞர்கள் மாணவர்கள் மத்தியிலும் அதிகரித்த வண்ணம் உள்ளது. இந்நிலைமை நாட்டின் எதிர்காலத்தைச் சூனியமாக்கிவிடும் என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் மது விற்பனை நிலையங்கள் அதிகரித்துக் கொண்டு செல்ல, வடமாகாணத்தில் கேரளக் கஞ்சாக் கடத்தல்கள், பாவனைகள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன.

அதேபோல் நாட்டின் பல பாகங்களிலும் மதுசாரம், போதைப் பொருள்கள் சட்டபூர்வமானவையாகவும், சட்டவிரோதமானவையாகவும் விற்பனையாகின்றன.

இந்த விடயத்தில் கூடிய கவனம் எடுத்துக் கட்டுப்படுத்தாவிடின் எமது நாடு அதல பாதாளத்துக்குள் சென்றுவிடும்.-என்றார். (ஐ)

# அத்தியாவசியப் பொருள்கள் போதியளவு கையிருப்பில்!

## நிதியமைச்சர் ரவி, வர்த்தக அமைச்சர் ரிஷாத் கூட்டாகத் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.09

தமிழ் - சிங்களப் புதுவருடம் நெருங்கிவரும் நிலையில், போதுமான அளவு அத்தியாவசியப் பொருள்கள் கையிருப்பில் உள்ளன என்று நிதியமைச்சர் ரவி கருணா நாயக்க மற்றும் கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.





புதுவருடத்துக்குத்தேவையான அத்தியாவசியப் பொருள்கள் மக்களுக்குத் தடையின்றிக் கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில், அமைச்சர்கள் ரிஷாத் பதியுதீன் மற்றும் ரவி கருணாநாயக்க ஆகியோர் இணைந்து புறக்கோட்டைப் பகுதியில் ஆய்வு நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர்.

புறக்கோட்டை சந்தை மற்றும் ஐந்தாம் குறுக்குத் தெரு உள்ளிட்ட மொத்த விற்பனைச் சந்தைப் பகுதிகளை அவர்கள் மேற்பார்வை செய்தனர்.

இந்தத் திடீர் விஜயத்தை அடுத்து ஊடகவியலாளர்களைச் சந்தித்த அமைச்சர் ரிஷாத் பதியுதீன், அத்தியாவசியப் பொருள்கள் தேவைக்கு மேலதிகமாகவே சந்தையில் இருக்கின்றன. அரிசி கையிருப்பு வழக்கத்தைவிட உயர்த்தப் பட்டுள்ளது. அடுத்த இரண்டு மாதங்களுக்குத் தேவையான அளவு பொருள்கள் சந்தையில் உள்ளன என்று தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அறிவுறுத்தலின் பேரிலேயே நாம் இந்தத் திடீர் விஜயத்தை மேற்கொண்டோம். தேவையான அளவு உணவு மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருள்கள் சந்தையில் இருப்பதை நீங்களே பார்த்துத் தெரிந்து கொள்ள முடியும். பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகக் கூறப்படுவது உண்மைக்குப் புறம்பானது என்று அமைச்சர் ரவி கருணாநாயக்க கூறினார்.

அரசின் ஆகக் குறைந்த சில்லறை விலையை விடக் குறைந்த விலையில் அத்தியாவசியப் பொருள்கள் சில விற்பனை செய்யப்படுகின்றன என்றும் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பே இல்லை என்றும் தவறான கருத்துக்களைப் பரப்பி அதன் மூலம் அதிக இலாபம் பெற முயற்சிக்கும் நபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# புத்திசாலித்தனமாக வாக்குகளை மக்கள் பயன்படுத்துதல் அவசியம்

## இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அறிவுரை

கொழும்பு, ஏப்.09

நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்ய மக்கள் தமது வாக்குகளை பயன்படுத்தும் போது புத்திசாலித்தனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஊருபொக்க, கின்னெலிய பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

முதிர்ச்சியான அரசியல்வாதிகள் நாடாளுமன்றத்தில் சிறந்த முறையில் செயற்படுவார்களேயானால், நாடாளுமன்றத்தில் தற்போது காணப்படும் பிரச்சினை இருக்காது.

இதனால், மக்கள் சிறந்த, சேவை மனப்பான்மை கொண்டவர்களை நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்ய வேண்டும்.-என்று மேலும் தெரிவித்தார். (ஐ)

# நாளை மின் தடை

யாழ்ப்பாணம்,ஏப்.09

நாளை திங்கட்கிழமை காலை 8.30மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை கொடிகாமம் கச்சாய் வீதி பிரதேசத்தில் மின்தடை ஏற்படும்என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# குடி நன்னீர் விநியோகம் நிறுத்தம் கரவெட்டி பயனாளிகள் நெருக்கடி!

யாழ்ப்பாணம், ஏப்.09

கரவெட்டிப் பிரதேச மக்களுக்கு அத்துலு குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த குடிதண்ணீர் விநியோகம் கடந்த ஒரு மாத காலமாக இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் பயனாளிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போது கடும் வறட்சியான காலநிலை காணப்படும் நிலையில் குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதில் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்த விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்காது இருப்பது வேதனை தருகிறது என்றும் இதற்குரிய நடவடிக்கைகளை உரியவர்கள் எடுக்க வேண்டும் என்றும் பாவனையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பும்

லயன் பூமாதேவி மகாதேவா



எமது குடும்ப தீபம் லயன் பூமாதேவி மகாதேவா அவர்களின் 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய நிகழ்வு நாளை (10.04.2017) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

– குடும்பத்தினர்

கல்லூரி வீதி, கந்தரோடை, சுன்னாகம்.

(C/317)



## திருமணத்துக்கு பட்டுச் சேலை அணிவது ஏன்?

பட்டுத் துணிகளுக்கும், பட்டுக்கும் இயற்கையாகவே ஒரு குணம் உண்டு. எளிதில் சில நல்ல வகையான கதிர்களை தக்க வைத்துக் கொள்ளும் சக்தியும், தீய கதிர் வீச்சுகள் (நோயாளிகளின் சுவாசம், ஓசோன் படலத்தில் இருந்து வரும் அசுத்த கதிர்கள்) போன்றவற்றை தடுத்து, உள்ளிருக்கும் உடலுக்கு வலிமை அளிப்பதும் ஆகும்.

திருமண வீட்டுக்கு பலதரப்பட்டோர் வருகின்றனர். அதில் யார் எப்படி என்று தெரியாது. எனவே தான் மணப்பெண்ணுக்கு ஆரோக்கியமான வாழ்வு அமைய வேண்டும் என்பதற்காகவும், தொற்று நோய்கள் பரவக் கூடாது என்பதற்காகவுமே பட்டுச் சேலை அணிகின்றனர்.

# பெண்களின் கண்ணீருக்கு பின்னால்...!

பெண்ணின் கண்ணீர் என்பது ஆணுக்கு வேண்டுமானால் காரியங்களைச் சாதித்துக் கொள்ளும் கருவி போலவும், எதிரே இருப்பவரை வீழ்த்தும் ஆயுதம் போலவும் இருக்கலாம்.

பெண்ணைப் பொறுத்தவரையில் அவளின் கண்ணீர் என்பது அவளுடைய உண்மையின் வெளிப்பாடு. அவள் மனதின் உணர்ச்சிகளை வெளிப்படுத்த அவளுக்குத் தெரிந்த செயற்பாடு.

இந்த சமுதாயத்தை பொறுத்தவரை, கண்ணீர் பெண்களுக்கு ஓர் ஆயுதம் என பரவலாக கூறப்படுகிறது. ஆனால் அந்த ஆயுதத்தை வைத்து பெண்கள் எத்தனை எதிரிகளை வீழ்த்தியிருக்கிறார்கள்? எத்தனை உறவுகளை தொலைத்திருக்கிறார்கள்? எத்தனை உறவுகளிடம் மண்டியிட்டு இருக்கிறார்கள்? என்பதை பெண்களின் கண்ணீர் மட்டுமே சொல்லும்.

ஒரு பெண் தனது கண்ணீரின் மூலம் அனைத்தையும் நிறைவேற்றிக்கொள்கிறாள் என்றால், அது வெறும் கண்ணீர் சார்ந்த விடயமாக இருக்காது. அவளது உணர்வு சார்ந்த விடயமாகவே இருக்கும்.

தனது கண்ணீரை யார் முன் சிந்த வேண்டும் என்பதில் கூட பெண்கள் வரையறை வைத்திருப்பார்கள். ஒரு ஆணின் முன்னால் அழக்கூடாது என தனது மனதை இறுக்கமாக்கி கொண்டால், அதன்பின்னர் அந்த இறுக்கம் நலிவடைவது இயலாத காரியம்.

தமிழ் இலக்கிய மரபில் எட்டு மெய்ப்பாடுகள் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளன. அவை நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை ஆகியவை.

இந்த எட்டு வகையான வெளிப்பாடுகளிலும் அவள் துளியேனும் கண்ணீராகத் துளிர்த்துவிடுவாள். பெண்ணுக்கு அவளுடைய எந்த உணர்வாக இருந்தாலும் அதன் அடிப்படையான உண்மையைக் கண்ணீராகவே வெளிப்படுத்தத் தெரிகிறது.






## எப்படிப்பட்ட ஆண்களை பெண்களுக்கு பிடிப்பதில்லை தெரியுமா

பெண்களிடம் இதெல்லாம் பிடிக்காது என ஆண்களும், ஆண்களிடம் இதெல்லாம் பிடிக்காது என பெண்களும் காலம் காலமாகக் கூறிவருகிறார்கள்.

சில வகை ஆண்களைத் தங்களுக்கு அறவே பிடிக்காது என 10 வகைகளைப் பெண்களைப் பட்டியலிட்டுள்ளனர்.

**கெஞ்சும் நபர்**

சில ஆண்கள் எதற்கெடுத்தாலும் கெஞ்சுவார்கள். இவ்வாறான ஆண்களைப் பெண்களுக்குப் பிடிப்பதில்லை.

**நான்தான் சரி**

எது செய்தாலும், கூறினாலும் நான் செய்தது தான் சரி. நீ செய்தது தவறு என்று ஒருதலைப் பட்சமாகப் பேசும் ஆண்களைப் பெண்களுக்குப் பிடிப்பதில்லை.

**வெற்றியில் மிதப்பவர்**

பெண்களுக்கு வெற்றியாளர்களை பிடிக்கும். ஆனால், எப்போது பார்த்தாலும் அந்த வெற்றியின் மிதப்பிலே உலாவரும் ஆண்களைப் பெண்களுக்குப் பிடிப்பதில்லையாம்.

**நான் 'ரொம்ப பிஸி'**

பெண்கள் தங்களுக்கு பிடித்த ஆண்கள், தங்களுடன் நேரம் செலவழிக்க வேண்டும் என்று விரும்புவர்கள். இதற்கு நேர்மாறாக எப்போது பார்த்தாலும் நான் 'பிஸி' என்று காட்டிக் கொள்ளும் ஆண்களைப் பெண்களுக்குப் பிடிப்பதில்லை.

**ஆணாதிக்கம்**

பெண்களை தரக்குறைவாகப் பேசும் அதே சமயம், ஆண்கள்தான் வலிமையானவர்கள். தங்களால் தான் எதுவும் செய்ய முடியும் என்று நெஞ்சை நிமிர்த்தும் ஆண்களைப் பெண்களுக்குப் பிடிப்பதில்லை.

**பொறாமை**

பொறாமை குணம் உள்ள ஆண்களைப் பெண்களுக்குச் சுத்தமாக பிடிப்பதில்லையாம். சொந்தம் கொண்டாடும் நபர் தனக்கு மட்டும் தான் உன் மீது உரிமை இருக்கிறது. என்று கூறும் ஆண்களைப் பெண்களுக்கு பிடிப்பதில்லை.

**நாடோடி**

எதிர்கால திட்டங்கள் இன்றி நாடோடி போல ஊர் சுற்று வதை விரும்பும் நபர்களை பெண்களுக்கு பிடிப்பதில்லையாம்.


**தற்பெருமை**

நான் எல்லாம் அப்படி எனத் தன்னை பற்றி தானே பெருமையாகப் பேசிக்கொள்ளும் நபர்களைப் பெண்களுக்கு பிடிப்பதில்லை.

**மன்னித்துக்கொள்ளுங்கள்**

ஏதாவது ஒன்றை முந்திக் கொண்டு செய்துவிட்டு, பிறகு அதற்காக மன்னிப்பு கேட்கும் ஆண்களையும் பெண்களுக்குப் பிடிப்பதில்லை.

# உறங்கும் நிலையை வைத்து உங்கள் குணாதிசயங்களை தெரிந்து கொள்ளுங்கள்!!



பெண்கள் தூங்கும் நிலையை வைத்தே அவர்களின் குணாதிசயங்களை சொல்லி விடலாம்.

★தாயின் கருப்பையில் குழந்தை இருப்பது போன்று கை, கால்களை சுருக்கியபடி தூங்கும் பழக்கம் கொண்டவர்கள் மிகவும் சாந்தமாகவும், எளிதில் உணர்ச்சிவசப்படக் கூடியவர்களாகவும் இருப்பார்கள்.

★இடதுபுறம் அல்லது வலதுபுறமாக கையை கீழே இறக்கி, ஒரு பக்கமாக உறங்கும் பழக்கம் கொண்டவர்கள், பிறரிடம் எளிதில் நட்பாகப் பழகும் தன்மை கொண்டவராக இருப்பார்கள். ஆனால் இவர்கள் அதிகம் ஏமாறுபவர்களாக இருப்பார்கள்.

★இடதுபுறம் அல்லது வலதுபுறம் திரும்பி, கையை முகத்தின் அருகில் வைத்துக் கொண்டு உறங்கும் பழக்கம் உடையவர்கள், பிறர் மீது அதிக குறை கூறுபவர்களாக இருப்பார்கள். மேலும் இவர்களுக்கு தொழில் தொடர்பான சிந்தனைகள் அதிகமாக இருக்கும்.

★தனது கை மற்றும் கால்களை நீட்டி நேராக நிமிர்ந்து உறங்குபவர்கள், நாவடக்கம் கொண்ட நல்ல குணம் கொண்டவராக இருப்பார்கள்.

★கை, கால்களை தாறுமாறாக நீட்டித் உறங்கும் பழக்கம் கொண்டவர்கள், பெருந்தன்மை மிக்க பணிவான குணம் பெற்றவர்களாக இருப்பார்கள். மேலும், இவர்கள் பெரியவர்களுக்கு மதிப்பு கொடுத்து நடந்து கொள்வார்கள்.

# இலங்கையின் இறைமையைப் பாதுகாப்பது சீனாவின் கடமை!

## அந்நாட்டின் உயர் அரசியல் ஆலோசகர் கூறுகிறார்

கொழும்பு, ஏப். 09

இலங்கையுடனான60ஆண்டுகால உறவுகளைப் பலப்படுத்தும் வகையில், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவவும், அதன் சுதந்திரம் மற்றும் இறைமையைப் பாதுகாக்கவும்சீனாகடமைப்பட்டுள்ளது என்று சீனாவின் உயர் அரசியல் ஆலோசகர் உறுதியளித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சீன மக்கள் அரசியல் ஆலோசனைச் சபைக்கான தேசிய குழுவின் தலைவர் யூ செங் ஷெங் தமது குழுவினருடன், நேற்றுமுன் தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போதே சீனாவின் உயர் அரசியல் ஆலோசகர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற இந்தச்சந்திப்பின்




போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையுடன் உண்மையான உறவைத் தொடர்ந்து வலுப்படுத்துவதற்கு சீனா தயாராக இருக்கிறது.

இல்ங்கையில் முன்னெடுக்கப்படும் சீனாவின் எல்லா முதலீட்டு உடன்பாடுகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களும், இலங்கையின் அரசமைப்புக்கு உட்பட்டனவாகவும், இலங்கையின் இறைமை மற்றும் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் வகையிலும் அமைந்திருப்பனவாகவும் இருக்கும்.


எந்தவொரு கட்டத்திலும், சீனாவும்சீனமக்களும்இலங்கை அரசுக்குத்தமது முழுமையான ஆதரவை வழங்குவதற்கும், மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்தின் கீழ் நட்புறவைப் பலப்படுத்திக் கொள்வதற்கும், அர்ப்பணிப்புடன் உள்ளனர்.- என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது. இலங்கையில் தீவிரவாதத்தை அழிப்பதற்கு சீனா வழங்கிய உதவிகளுக்காகவும், இலங்கையின் அபிவிருத்திக்காக சீனா வழங்கி வரும் உதவிகளுக்காகவும் ஜனாதிபதி மைத்திரி நன்றியைத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கைக்கு வந்துள்ள, சீனமக்கள் அரசியல் ஆலோசனைச் சபைக்கான தேசிய குழுவின் தலைவர் யூசெங் ஷெங்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இணைந்து, கொழும்பு தேசிய மருத்துவமனையில் புதிய வெளிநோயாளர் பிரிவுக் கட்டடத்துக்கான அடிக்கல்லையும் நட்டு வைத்தனர்.

சீனாவின் உதவியுடன் கட்டப்படும் 9 மாடிகளைக் கொண்ட வெளிநோயாளர் பிரிவு, ஆசியாவின் மிகப் பெரியதும், இலங்கையின் பிரதானமானதுமான தேசிய மருத்துவமனையில் இடநெருக்கடியைக் குறைக்கும். 100 மில்லியன் டொலர் செலவில் கட்டப்படும் இந்தப் புதிய கட்டட நிர்மாணப் பணிகள் மூன்றரை ஆண்டுகளில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பிரதமர் ரணிலைச் சந்தித்தார் சீனாவின் உயர்மட்ட ஆலோசகர்



கொழும்பு, ஏப். 09


இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சீன மக்கள் அரசியல் ஆலோசனைச்சபைக்கான தேசிய குழுவின்தலைவர் யூ செங் ஷெங் நேற்று முன் தினம் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

அலரி மாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

சீன அரசியல் உயர் மட்ட அரசியல் ஆலோசகரான யூசெங் ஷெங்குடன்வந்திருந்த உயர் அதிகாரிகள் குழுவும் இந்தப் பேச்சுகளில் பங்கேற்றுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுடன், அமைச்சர்கள் ரவி கருணாநாயக்க, மலிக் சமரவிக்கிரம, சாகல ரத்நாயக்க, டி.எம். சுவாமிநாதன், ஏரான் விக்கிரமரத்ன, அனோமா கமகே உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளும் இந்தப் பேச்சுக்களில் கலந்து கொண்டனர்.

## அமைதியைக் கட்டியெழுப்புதல் குறித்த இலங்கை - ஐ.நா. பேச்சுகள் நிறைவு!



கொழும்பு, ஏப். 09

அமைதியைக்கட்டியெழுப்புதல் தொடர்பாக ஐ.நாவுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான ஐந்தாவது கூட்டம் நேற்று முன்தினம் முடிவுக்கு வந்துள்ளது.

இலங்கைத் தரப்பில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும், ஐ.நா. தரப்பில் இலங்கைக்கான ஐ.நாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி உனா மக்கோலியும் இந்தக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கியிருந்தனர்.

இலங்கையில் அமைதியைக் கட்டியெழுப்பும்நிகழ்ச்சித்திட்டம்ஒன்றை இலங்கை அரசுடன் இணைந்து ஐ.நா. நடைமுறைப்படுத்தி வருகிறது. இந்த அமைதியைக்கட்டியெழுப்பும் திட்டம் தொடர்பான மீளாய்வுகளை மேற்கொள்ளும் வகையிலேயே இந்தக் கூட்டம் இடம்பெற்றுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட திட்ட ஆவணங்கள் அனைத்தும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்று ஐ.நா.வின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி உனாமக்கோலி தெரிவித்துள்ளார்.

## இந்திய கொச்சி துறைமுகத்தில் இலங்கைப் போர்க் கப்பல்கள்!



### இரு நாட்டுப் படையினரும் கூட்டுப் பயிற்சி

கொழும்பு, ஏப். 09

இலங்கை கடற்படையின் இரண்டு ஆழ்கடல் ரோந்துக் கப்பல்கள் நான்கு நாள்கள் பயணமாக இந்தியாவின் கொச்சி துறைமுகத்துக்குச் சென்றுள்ளன என்று இந்திய கடற்படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எஸ்.எல்.என்.எஸ். சமுத்ர என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பலும், எஸ்.எல்.என்.எஸ். சுரணிமல என்ற ஏவுகணை விரைவுத் தாக்குதல் கப்பலுமே கொச்சி துறைமுகத்துக்குச் சென்றுள்ளன.

இந்தக் கப்பல்களின் கட்டளை அதிகாரிகளான கப்டன் ஜெகத் பிரியசாந்த பிரேமரத்ன, கப்டன் றோகித அபேசிங்க மற்றும் புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராகக் கடமையாற்றும் கப்டன் ஹேவகே ஆகியோர், இந்தியக் கடற்படையின் தென்பிராந்திய கட்டளைத் தளபதி வைஸ் அட்மிரல் கார்கேயைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

அத்துடன், தலைமை அதிகாரி றியர் அட்மிரல் நட் கர்னி மற்றும் இந்தியக் கடற்படையின் கடற்பயிற்சிக்கான கட்டளை அதிகாரி றியர் அட்மிரல் ஹம்பிஹோலி ஆகியோரையும் இலங்கைக் கடற்படை அதிகாரிகள் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர்.

கொச்சி சென்றுள்ள இலங்கைக் கடற்படைக் கப்பல்களுடன் இணைந்து இந்தியக் கடற்படையினர் பல்வேறு பயிற்சி மற்றும் நிகழ்வுகளில் கூட்டாக பங்கேற்கின்றனர்.

இன்று இரண்டு நாடுகளின் கடற்படையினரும் இணைந்து கூட்டுப் பயிற்சி ஒன்றை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படைக்கு 1954 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தியா பயிற்சிகளை அளித்து வருகிறது. அதேவேளை, சிறப்பு உதவித்திட்டத்தின் கீழ், 1987 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தியக் கடற்படையினருக்கு இலங்கை பயிற்சி வசதிகளை அளித்துள்ளது. இரண்டு நாடுகளின்கடற்படைகளும், கூட்டுப் பயிற்சிஒத்திகைகள், துறைமுக வருகைகள், கடல் எல்லையில் ஒருங்கிணைந்த ரோந்து போன்றவற்றில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பெண்களுக்கான வேலைவாய்ப்பை அதிகரிக்க ஆஸ்திரேலியா உதவி!

கொழும்பு, ஏப். 09

இலங்கையில் பெண்களுக்கான வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கு, சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து 15 மில்லியன் டொலர் உதவியை வழங்க ஆஸ்திரேலியா முன்வந்துள்ளது.

அடுத்த நான்கு ஆண்டுகளில் உள்ளூர் தனியார் நிறுவனங்கள் பெண் பணியாளர்களைப் பணிக்கு அமர்த்திக் கொள்வதற்கான, 'வேலைத் திட்டத்தில் பெண்கள்' என்ற திட்டத்தின் கீழ் இந்த நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில், தனியார் துறையின்பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையிலும், பெண்களை வலுப்படுத்தும் வகையிலும் இந்தத் திட்டத்துக்கு ஆஸ்திரேலியா உதவும் என்று அந்த நாட்டின் சர்வதேச அபிவிருத்தி மற்றும் பசுபிக் அமைச்சர் கொன்சீற்றா பியரா வென்ரி வெல்ஸ் தெரிவித்துள்ளார்.

'இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் அவர், நேற்று முன்தினம் ஆஸ்திரேலிய தூதரகத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பேசிய போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பெண்களை வேலைக்கு அமர்த்தும் நிறுவனங்களுடன் இணைந்து செயற்படவும், ஆண்களுக்கு இணையாகப் பெண்களுக்கும் வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் அவர்களின் ஆற்றலை அதிகரிக்கவும் நாம் பணியாற்றுவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?



துர்முகி வருஷம் 2017 ஆம் ஆண்டு பங்குனித்திங்கள் 27 ஆம் நாள் திரயோதசித் திதி காலை 9.30 வரை பின்னர் சதுர்த்தசி. நட்சத்திரம்: உத்தரம் பி.இ. 1.45 வரை. பின்னர் அத்தம். அமிர்தசித்தயோகம் முழுவதும். ராகுகாலம்: மாலை 4.47 முதல் 6.19 வரை. சுபநேரம்: பகல் 9.04 முதல் 10.34 வரை. இன்று பங்குனி உத்தரம். திவசம் செய்யவேண்டிய திதி: பங்குனிமாத வளர்பிறை சதுர்த்தசி. பிறந்த நட்சத்திர வழிபாடு: உத்தரம்.

சந்திராட்டமநாள்: அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3 ஆகிய நட்சத்திரங்களில் உதயமானோர் நற்கருமங்களில் ஈடுபாடு கொள்வதை இன்று தவிர்க்கவும்.

## 09.04.2017 இல் இருந்து 15.04.2017 வரை



**மேஷம்:** இனிமையான வாரம். பொருளாதாரம் மேன்மை அடையும். தொழிலில் முன்னேற்றமும், பணப்புழக்கமும் நன்றாக இருக்கும். சகோதர வழி உதவிகள் கிடைக்கும். பணி புரியும் இடத்தில் மதிப்பும், செல்வாக்கும் அதிகரிக்கும். வியாபாரத்தில் அந்நியர் முதலீடு, ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கும். இதுவரை தொழில் இல்லாமல் இருந்தவர்களுக்கு தொழில் வாய்ப்புகள் அமையும்.



**ரிஷபம்:** யோகமான வாரம். பணபலம் அதிகரிக்கும். வேலைக்குக் காத்திருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பு அமையும். சிலருக்கு அரசு வழியால் வீடு, காணி என்பன கிடைக்கும். மாணவர்கள் உயர் கல்வி பயில வெளிநாடு செல்ல வாய்ப்புகள் உருவாகும். பெண்களுக்குத் திருமண யோகம் உண்டாகும். வியாபாரத்தில் புதிய நுணுக்க முறைகளைக் கையாண்டு நிறைய லாபத்தைப் பெறுவார்கள். சிலருக்கு உத்தியோக உயர்வுகள் கிடைத்து வெளிநாடு செல்லும் சந்தர்ப்பம் உண்டாகும். கொடுக்கல், வாங்கல் சுமுகமாக நடக்கும்.



**மிதுனம்:** கவலையான வாரம். பணவரவு குறையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். வியாபாரத்தில் வருமானம் குறைவடையும். தொழிலில் பிரச்சினைகள் உருவாகும். உத்தியோகத்தர்களுக்கு கடின உழைப்பும், அலைச்சல்களும் அதிகமாகும். உடன் பிறந்தவர்களின் ஆதரவு குறையும். உறவினர்கள், நண்பர்கள் பாராமுகமாக நடந்து கொள்வார்கள். பெண்களுக்கு திருமண வாய்ப்புகள் நழுவிப் போகும். கொடுக்கல், வாங்கலில் பிரச்சினைகள் உருவாகும்.




**கடகம்:** விருத்தியான வாரம். பொருளாதாரம் சீராக இருக்கும். எதிரிகள் கூட நண்பர்களாக மாறுவார்கள். வியாபாரம் நல் விருத்தியடையும். மாணவர்கள் கல்வியில் விருத்தியடைவார்கள். உத்தியோகத்தர்கள் மேன்மையும், ஆதாயமும் பெறுவார்கள். வீடு கட்ட நினைப்பவர்களுக்கு பொருத்தமான வாரம் ஆகும். வாகன வசதிகளும் உண்டாகும். சிலருக்கு கைவிட்டுப் போன சொத்துகள் வந்துசேரும்.



**சிம்மம்:** உயர்வான வாரம். பணம் பல வழிகளாலும் வந்துசேரும். சிலருக்கு வீடு கட்டும் யோகமும், புதிய வாகனம் வாங்கும் யோகமும் அமையும். எதிரிகளால் ஏற்பட்டு வந்த குழப்பம் நீங்கும். பூர்வீக சொத்து சம்பந்தமான வழக்குகள் சுலபமாகத் தீர்வடையும். பிரிந்திருந்த குடும்பங்கள் மீண்டும் ஒன்று சேர வாய்ப்புள்ளது. பக்கபலமான நண்பர்களின் உதவி கிட்டும். மாணவர்கள் சிலருக்கு வெளிநாட்டுக் கல்வி வாய்ப்புக் கிட்டும்.



**கன்னி:** நன்மையான வாரம். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். முதலீடு இல்லாத தொழில் நிறுவனங்களின் ஊழியர்களுக்கு ஆதாயம் கிட்டும். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். அந்நிய நாட்டுத் தொழில் முயற்சிகள் நல்ல பலனைத் தரும். பெண்களின் திருமண முயற்சிகள் நல்ல முடிவைத் தரும். மாணவர்கள் கல்வியில் ஊக்கம் காட்டுவார்கள். உத்தியோகத்தர்களுக்கு உயர் அதிகாரிகளின் அனுசரணையால் எதிர்பாராத நன்மைகள் கிடைக்கும்.



**துலாம்:** யோசனையான வாரம். தனவரவு குறையும். குடும்பத்தில் சச்சரவுகள் உண்டாகும். நண்பர்களுடன் வீண் விரோதம் உண்டாகும். மனைவி வழி உறவினரால் தொல்லைகள் உண்டாகும். செய்தொழிலில் ஆதாயம் உண்டாகும். பழைய முதலீடுகளால் பெருநஷ்டம் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு பிரச்சினைகள் தேடிவரும். எதிலும் அவதானம் தேவை. சிலர் செய்யும் தொழிலை விட்டுவிட நேரும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல்கள் உண்டாகும்.



**விருச்சிகம்:** சிறப்பான வாரம். பணம் தாராளமாகப் புழங்கும். நீண்டநாள் கனவு நனவாகும். சுயதொழிலில் முயற்சிகள் நல்ல பலனைத் தரும். வீடு வாங்க உகந்த வாரமாகும். சிலருக்கு திருமணத்தடை நீங்கி திருமணம் நடக்கும். இவர்களின் முயற்சியும், நண்பர்களின் ஒத்துழைப்பும் நற்பலனைத் தரும். அரச உத்தியோகம் பார்ப்பவர்கள் பதவி உயர்வு, சம்பள உயர்வு பெறுவார்கள். பூர்வீக சொத்து சம்பந்தமான பிரச்சினை முடிவுக்கு வரும்.



**தனுசு:** சம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். செய்யும் தொழிலில் சில பாதிப்புகள் உண்டாகும். மனக்குழப்பம் நீடிக்கும். உடல் நலம் குன்றும். குடும்பத்தில் சில பிரச்சினைகள் உண்டாகும். உத்தியோகத்தர்கள் தொழிலில் கவனம் எடுக்க வேண்டும். பயணத்தின் போது கவனம் தேவை. எந்தக் காரியத்தையும் செயற்படுத்த பலமுறை அலைய வேண்டிவரும். திருமண காரியங்கள் தடை, தாமதங்களுடன் ஒப்பேறும்.



**மகரம்:** நன்மையான வாரம். வியாபாரம் சம்பந்தமாக வெளியூர்ப்பயணம் செல்ல வேண்டிவரும். பெண்கள் சுயதொழிலில் முன்னேற்றம் அடைவார்கள். சகோதர உறவு வலுவடையும். பிரிந்திருந்தவர்கள் மீண்டும் இணைவார்கள். கலைஞர்களுக்கு எதிர்பார்த்தபடி வாய்ப்புகள் வந்துசேரும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். திட்டமிட்ட பயணங்கள் வெற்றியைத் தரும்.



**கும்பம்:** அலைச்சல் மிகுந்த வாரம். சிலர் வேலை தேடி அலைவார்கள். கடன் வாங்க அலைவார்கள். சிலர் கொடுத்த பணத்தை மீளப் பெறுவதற்கு அலைந்து திரிவார்கள். சொந்த வீடு வாங்க எண்ணிய சிலர் தரகரின் உதவியை நாடுவார்கள். உடல்நிலை பாதிப்படைந்த சிலர் மருத்துவ உதவியை நாடுவார்கள். கலைஞர்கள் வருமான வாய்ப்புகளைத் தேடி அலைவார்கள்.



**மீனம்:** சம பலன்கள் உள்ள வாரம். நினைக்கும் கருமங்கள் நிறைவேறத் தாமதமாகும். உற்றார், உறவினர், நண்பர்கள் ஓரளவு உதவுவார்கள். வேலை தேடுபவர்களுக்கு கடும் முயற்சியின் பின் வேலை கிடைக்கும். விளையாட்டுத் துறையில் ஆர்வம் காட்டுவார்கள். யாருக்கும் எதையும் கொடுப்பதோ, வாங்குவதோ கூடாது. தொழிலில் பொறுப்பும், அலைச்சல்களும் அதிகமாகும்.

# காணாமல் ஆக்கப்பட்டோரது நிலை என்ன...?




இலங்கை, தனது நாட்டில் பலவந்தமாகக் காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான கொடூரமான சம்பவங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும்வரை, பல ஆண்டுகளாகக் காத்திருக்கும், ஒரு லட்சம் வரையான காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு நீதி வழங்கும்வரை நாட்டில் இடம்பெறும் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வரமுடியாது.

-இவ்வாறு அனைத்துலக மன்னிப்புச் சபையால் வெளியிடப்பட்ட புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'நீதி மட்டுமே எம்முடைய காயங்களை ஆற்றும்' என்ற அனைத்துலக மன்னிப்புச் சபையின் பொதுச் செயலர் சலீல் செற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. போரின் போது இடம்பெற்ற பல்வேறு வடுக்களையும் இந்த உலகம் மறந்த போதிலும் பாதிக்கப்பட்ட மக்கள் வடுக்களுடன் வாழ்கின்றனர் என்றும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமக்கு நீதியும் உண்மையும் கிடைக்க வேண்டும் என்பதற்காகப் பல ஆண்டுகளைச் செலவிட்டு வரும் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் தொடர்பாக, குறிப்பாக பெரும்பாலான பெண்களின் நிலை தொடர்பாக அனைத்துலக மன்னிப்புச் சபையால் வெளியிடப்பட்டுள்ள புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் தமக்கு நீதி வேண்டிப் போராடும் போது பல்வேறு தடைகளைச் சந்தித்து வருகின்றனர். குறிப்பாக தமது அன்புக்குரியவர்கள் எங்கிருக்கின்றனர் என்பது தொடர்பான பிழையான தகவல்களைப் பெற்றிருக்கின்றனர். அத்துடன் இவர்களுக்கு எதிராக பல்வேறு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விசாரணைகள் மேலும் காலந் தாழ்த்தப்படுதல் போன்ற பல்வேறு தடைகளை காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் சந்தித்து வருகின்றனர்.

'பலவந்தமாக காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் தமது அன்புக்குரியவர்கள் திரும்பி வரமாட்டார்களா என்னும் ஏக்கத்துடன் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தமக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காகப் பல ஆண்டுகளாகக் காத்திருக்கின்றனர். சிலர் பல பத்தாண்டுகளாகவும் நீதி கிடைக்கும் என்னும் நம்பிக்கையுடன் காத்திருக்கின்றனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்படும்வரை, இவர்களின் காயங்களை ஆற்றுவதற்கும் எதிர்காலத்தில் மேலும் வாக்குறுதிகளை வழங்குவதற்கும் இலங்கையால் எவ்வித நகர்வையும் வெற்றிகரமாக மேற்கொள்ள முடியாது' என்று அனைத்துலக மன்னிப்புச் சபையின் பொதுச் செயலர் சலீல் செற்றி குறிப்பிட்டுள்ளார்.

பலவந்தமாக காணாமல் போதல்களுடன் தொடர்புடைய குற்றங்களைக் குறைப்பதாக அனைத்துலக சமூகம் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியுள்ள நிலையில், மனிதாபிமானத்துக்கு எதிரான இந்தக் குற்றச் செயலானது இலங்கையில் திட்டமிட்ட மற்றும் பரவலாக இடம்பெற்றுவருகிறது. இவ்வாறானவழக்குகள் தொடர்பாக விசாரணை செய்வதிலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்னும் உண்மையைக் கூறுவதிலும் சந்தேகிக்கப்படும் குற்றவாளிகளுக்கு எதிராகத் தண்டனை விதிப்பதிலும் இலங்கை அரசு தோல்வியடைந்துள்ளது.

இலங்கையில் இடம்பெறும் பலவந்தக் காணாமல் போதல் சம்பவங்களுக்கு பயங்கரவாதத் தடுப்புச்சட்டமே காரணமாகும். இத்தடைச் சட்டம் வெளித் தொடர்புகளற்ற, இரகசிய தடுப்பு முகாம்களை வைத்திருப்பதற்கு அனுமதிக்கிறது. இந்தச் சட்டம் மக்கள் மனித உரிமை மீறல்களால் அதிகம் பாதிக்கப்படுவதற்கும் குறிப்பாக சித்திரவதை மற்றும் பலவந்தக் கடத்தல்கள் உட்படப் பல்வேறு மீறல்களுக்கும் ஆளாவதற்கு வழிவகுக்கிறது.

'பாதிக்கப்பட்ட மக்கள் வடுக்களில் இருந்து மீளெழுவதற்கான மீளிணக்க முயற்சிகளை இலங்கை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ளது.



இந்த மக்களின் கோரிக்கைகளை அதிகாரிகள் செவிசாய்ப்பதுடன் அவற்றை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கையையும் முன்னெடுக்க வேண்டும். நாட்டில் குற்றச்செயல்களை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்பதை தற்போதைய அரசு உணர்ந்து அதற்கான சில நகர்வுகளை முன்னெடுத்து வருகிற போதிலும் பாதிக்கப்பட்ட மக்கள் மேலும் காத்திருப்பதற்கு அரசு வழிவகுக்கக் கூடாது' என சலீல் செற்றி குறிப்பிட்டுள்ளார்.

'பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்கனவே நீண்ட காலமாகக் காத்திருக்கிறார்கள். கடந்த கால மீறல்களிலிருந்து வெற்றிகரமாக மீளவேண்டுமாயின், பாதிக்கப்பட்ட மக்களால் முன்வைக்கப்படும் நீதி, உண்மை போன்றவற்றை இலங்கை நிலைநாட்டுவதுடன், இவ்வாறான மீறல் சம்பவங்கள் இனி மேலும் இடம்பெறாது என்பதற்கான உறுதியையும் வழங்க வேண்டும்' என சலீல் செற்றி தெரிவித்துள்ளார்.

அனைத்துலக மன்னிப்புச் சபையால் தற்போது வெளியிடப்பட்டுள்ள புதிய அறிக்கையில் சந்தியா எக்னெலிகொட தொடர்பான வழக்கும் விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவரது கணவரான பிரகீத் 24 ஜனவரி 2010 அன்று வீட்டிலிருந்து புறப்பட்ட பின்னர் இதுவரை வீடு திரும்பவில்லை.

பிரகீத் எக்னெலிகொட அரசியல் சார் கேலிச்சித்திர வடிவமைப்பாளராகச் செயற்பட்டார். அப்போதைய அரசால் இழைக்கப்பட்ட பல்வேறு ஊழல் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்தும் பல்வேறு கேலிச்சித்திரங்களை இவர் துணிச்சலுடன் வெளியிட்டிருந்தார்.

சந்தியா எக்னெலிகொட தனது கணவர் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு விடாமுயற்சியுடன் செயற்பட்டு வருவதுடன் இலங்கை இராணுவத்தினரே தனது கணவர் பலவந்தமாகக் காணாமற் போனமைக்குக் காரணமாக இருக்கலாம் எனவும் கருதுகிறார். இது தொடர்பாக சந்தியா எக்னெலிகொட முறைப்பாடு செய்திருந்ததன் காரணமாக குறைந்தது 90 தடவைகள் வரை இவர் நீதிமன்றத்துக்குச் சென்றுள்ளார்.

இவர் நீதிமன்றத்துக்குச் செல்லும் ஒவ்வொரு தடவையும் தொந்தரவுக்கு ஆளாகியுள்ளார். கடந்த ஆண்டு ஹோமகமவிலுள்ள நீதிமன்றத்துக்குச் சென்ற போது பௌத்த தேசிய அமைப்பான பொது பல சேனாவின் முக்கிய உறுப்பினர் ஒருவரும் வேறு பௌத்த பிக்குகளும் தனக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்றும் அனைத்துலக மன்னிப்புச்சபையிடம் சந்தியா எக்னெலிகொட தெரிவித்துள்ளார். இந்த அமைப்பால் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளில் சந்தியா ஒரு தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர் எனச் சித்திரிக்கப்பட்டுள்ளார்.

பிரகீத் எக்னெலிகொட கடத்தப்படவில்லை எனவும் இவர் நாட்டைவிட்டுத் தப்பிச்சென்றுவிட்டார் என்றும் முன்னாள் சட்டமா அதிபர், 2011இல் சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா. ஆணைக்குழுவிடம் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக நீதிமன்றில் கேள்வியெழுப்பிய போது, பிரகீத் எக்னெலிகொட வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றுள்ளார் என்னும் தகவலைத் தனக்கு வழங்கியது யார் என்பதை மறந்துவிட்டார் என்று அவர் தெரிவித்திருந்தார்.

தனது கணவர் காணாமலாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பல தடவைகள் எழுத்து மூலமாக இலங்கைத் தலைவர்களுக்கு சந்தியா தெரிவித்துள்ளதுடன் பல்வேறு ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டுள்ளார். இவரது இந்த வழக்கானது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிடமும் சமர்ப்பிக்கப்பட்டது. பிரகீத் இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்று 2015 இல் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது. ஆனால், அதன் பின்னர் இது தொடர்பில் எவ்வித முன்னேற்றமும் எட்டப்படவில்லை.

1980களிலிருந்து இலங்கையில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பலவந்தமாக காணாமல் போன சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று அனைத்துலக மன்னிப்புச் சபை மதிப்பிட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களில் சிங்கள இளைஞர்களும் அடங்குகின்றனர். 1989 தொடக்கம் 1990 வரையான காலப் பகுதியில் இடம்பெற்ற இடதுசாரித்துவ கிளர்ச்சியின் போது இலங்கை அரசால் பல சிங்கள இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர். பலர் காணாமல் போயினர்.

இதேபோன்று தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இலங்கைப் பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் ஆயுதக்குழுக்களால் பல தமிழ் மக்கள் கடத்தப்பட்டும், படுகொலை செய்யப்பட்டும் உள்ளனர். இவ்வாறு காணாமல் போன மற்றும் படுகொலை செய்யப்பட்டவர்களுள் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், தொழிலாளர்கள், ஊடகவியலாளர்கள், அரசை விமர்சிப்பவர்கள் மற்றும் முன்னணிச் சமூகத் தலைவர்கள் ஆகியோரும் அடங்குவர்.

காணாமல் போன சம்பவங்கள் தொடர்பாக 65 ஆயிரம் வரையான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கடந்த ஜூன் மாதம் தெரிவித்திருந்தார். இந்த எண்ணிக்கையானது ஒரு லட்சம் வரை உயர்வடையலாம் என்று அனைத்துலக மன்னிப்புச்சபை மதிப்பிட்டுள்ளது.

கடந்த காலத்தில் ஏற்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக உண்மை, நீதி மற்றும் உறுதிப்பாட்டை வழங்குதல் போன்றன தொடர்பில் பொறிமுறை ஒன்றை உருவாக்குவதாக இலங்கை அரசால் 2015 ஒக்ரோபர் மாதம் வாக்குறுதி வழங்கப்பட்டது.

பலவந்த காணாமல் போதல்களில் இருந்து அனைத்து மக்களையும் பாதுகாப்பதற்கான அனைத்துலக சாசனத்தில் கைச்சாத்திடுவது தொடர்பான சட்டமூலம் ஒன்று கடந்த ஆண்டு இலங்கை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. ஆனால் இலங்கைக் குற்றவியல் நீதிமன்றத்தில் பலவந்தமாக காணாமல் போதலை குற்றமாக்குவதன் மூலம் இந்தச் சாசனத்தை அமுல்படுத்துதல் தொடர்பாக இன்னமும் விவாதிக்கப்படவில்லை.

'காணாமல் போனவர்களுக்கான அலுவலகம்' ஒன்றை அமைத்தல் தொடர்பான சட்டமூலம் ஒன்று 2016 இல் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. ஆனால், இந்தச் சட்டமூலம் தொடர்பாக பாதிக்கப்பட்ட மக்களுடனும் சிவில் சமூகத்துடனும் ஆலோசிப்பதற்கு இலங்கை அரசு தவறி விட்டது. இதனைச் சட்டமாக்குவதற்கு இலங்கை ஜனாதிபதி இன்னமும் கையொப்பம் இடவில்லை.

நீதி, உண்மை, உறுதிப்பாட்டை வழங்குதல் தொடர்பான பொறிமுறைகளை உருவாக்குவது தொடர்பில் பொது மக்களுடன் ஆலோசிக்கப்பட்ட போது இது தொடர்பில் ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இதில் பெரும்பாலானவை காணாமல் போனவர்களின் குடும்பங்களிடம் இருந்து வழங்கப்பட்டன. ஆனால், இவற்றைக் கண்டறிவதற்கும் இலங்கை அரசால் உருவாக்கப்பட்ட செயலணியிடம் இவற்றைச் சமர்ப்பிப்பதிலும் அதிகாரிகள் பெரிதளவில் ஆர்வம் காண்பிக்கவில்லை. ■

வழிமூலம் - சர்வதேச மன்னிப்புச் சபை
மொழியாக்கம் - நித்தியபாரதி




பொன்.வேணு கிருஷ்ணா

No I am become death, the destroyer of worlds

என்கிற பகவத் கீதையின் வரிகளை நினைவுகூர்ந்து பரிசோதனைச் செய்தியினை வெளியிட்டார் ஒப்பன்ஹைமர். இன்றைக்கு முழுமையான இராணுவ அரசாக பரிணமிக்கும் அமெரிக்காவின் பயணத்திற்கு அன்றைய அணுகுண்டுப் பரிசோதனை மிகப்பெரிய அடிக்கல் நடும் விழாவாக இருந்தது.

வேறுவழியில்லாமல் மிகப்பெரிய தயக்கத்துடனேயே இரண்டாம் உலகப் போரின் இறுதிக் கட்டத்தில் ஜப்பான் மீது அமெரிக்கா அணுகுண்டு வீசியதாக காலம் காலமாக உலக மக்களிடையே பரப்புரை செய்யப்பட்டு வருகிறது. ஆனால், அதற்குப் பல ஆண்டுகள் முன்னாலேயே, தன்னுடைய உலக வல்லரசுக் கனவுக்காக அணுகுண்டு தொடர்பான ஆய்வினை தொடங்கி விட்டது அமெரிக்கா. இரண்டாம் உலகப்போர் முடிவுற்ற இந்த 70 ஆண்டுகளில், அமெரிக்கா தன்னுடைய அரசியலை உலக அரங்கில் எப்படியெல்லாம் நடத்தியிருக்கிறது என்கிற வரலாறு ஏறத்தாழ பெருவாரியான மக்களுக்கு சொல்லப்படாத கதைகள் தான். அவற்றைத் தமிழில் ஆவணப் படுத்த வேண்டுமென்ற ஆவலில் எழுதப்படுகிற தொடர்தான் இது. இதற்காக ஒலிவர் ஸ்டோன் எழுதிய "Untold stories of United States" என்கிற புத்தகத்தையும், அதனையொட்டி அவர் இயக்கிய தொலைக்காட்சித் தொடர்களையும், திரைப்படங்களையும், இன்னும் ஏராளமான கட்டுரைகளையும், வரலாற்று ஆவணங்களையும் மூலமாக வைத்துக்கொண்டு எழுதப்படுகிற தொடரிது.


**இரண்டாம் உலகப்போர்:**

அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் ஜேர்மனிய நாசிஸத்தையும், இத்தாலிய பாசிஸத்தையும், ஜப்பானிய இராணுவமயத்தையும் ஒழித்துக்கட்டிய ஒரு "நல்லபோர்" என்றுதான் இரண்டாம் உலகப்போர் குறித்து வரலாறாகச் சொல்லப்பட்டு வருகிறது. ஆனால், 3 கோடி சோவியத் மக்களும், 1-2 கோடி சீன மக்களும் 60 லட்சம் யூதர்களும், 60 லட்சம் ஜேர்மனியர்களும், 30 லட்சம் யூதரல்லாத போலந்து மக்களும், 25 லட்சம் ஜப்பானியர்களும், 15 லட்சம் யூகோஸ்லாவியர்களும், 2.5-5 லட்சம் பிற நாட்டவர்களும் (ஆஸ்திரியா, பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஹங்கேரி, ரோமேனியா, அமெரிக்கா) உயிரிழந்த மிகமோசமான போர்தான் இரண்டாம் உலகப்போர். முதல் உலகப்போர் போன்றல்லாமல், மெதுவாகவும் படிப்படியாகவும் துவங்கியது இரண்டாம் உலகப்போர்.

1931 இல், ஜப்பானின் குவாண்டங் படைகள் சீனாவின் மஞ்சூரியா பகுதியில் குண்டுகள் பொழிந்து சீனாவை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன. அதே வேளையில், முதல் உலகப் போரின் தோல்விக்குப் பழிதீர்க்கும் விதமாக, ஐரோப்பாவில் ஹிட்லரின் நாஜி ஜேர்மனி ஒரு போர் பூதமாக உருவெடுத்துக் கொண்டிருந்தது. 1935 இல் இத்தாலிய பாசிஸ்ட் முசோலினியின் ஆணைப்படி, எதியோப்பியாவை ஆக்கிரமித்தது இத்தாலி. ஜேர்மனி ஐரோப்பாவிலும், ஜப்பான் சீனாவிலும், இத்தாலி ஆபிரிக்காவிலும் நிகழ்த்திய ஆக்கிரமிப்புப் போர்களைக் கண்டு பலம் வாய்ந்த பிரிட்டன், அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் நாடுகள் எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. இதனை நன்கு அறிந்து கொண்ட ஹிட்லர், ரைன்லாந்தின் மீது படையெடுத்தார். (ரைன்லாந்து என்பது ஜேர்மனிக்கு மேற்கில் மத்திய ஐரோப்பாவிலிருக்கும் ரைன் நதியைச் சுற்றியுள்ள பகுதிகள்). முதல் உலகப் போரின் முடிவில், ரைன்லாந்திற்குள் நுழையக் கூடாது என்று விதிக்கப் பட்டிருந்த தடையினையும் மீறி ஆக்கிரமிப்பை நடத்தியிருந்தது ஜேர்மனி.

*"ரைன்லாந்திற்குள் படையெடுத்த அந்த 48 மணி நேரம்தான் என்னுடைய வாழ்க்கையிலேயே பதற்றமான நேரம். பிரான்ஸ் மட்டும் அப்போது சிறு எதிர்ப்பு காட்டியிருந்தால், எங்களது வாலைச்சுருட்டிக் கொண்டு ஓடியிருப்போம்" என்று பின்னாளில் அதனை ஹிட்லர் நினைவு கூர்ந்திருக்கிறார்.*

ஸ்பெயின் உள்நாட்டுப் போரின் போதும் இதேதான் நடந்தது. குடியரசு நாடாக மாறியிருந்த ஸ்பெயினில், சில மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்தத் துவங்கியது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு. அதன் காரணமாக,



அமெரிக்க அரசியலில் உயர்பொறுப்பில் இருப்பவர்களிடமும், மிகப் பெரிய கார்பரேட் நிறுவன முதலாளிகளிடமும் வெறுப்பை சம்பாதித்தது புதிய ஸ்பெயின் அரசு.

1936 ஜூன் மாதத்தில், ஸ்பெயின் மக்கள் குடியரசை கைப்பற்றி இராணுவ ஆட்சியமைத்த ஜெனரல் பிரான்கோவிற்கு அமெரிக்கா மறைமுக ஆதரவையும், ஹிட்லரும் முசோலினியும் பல்லாயிரக்கணக்கான படைகளை அனுப்பி நேரடி ஆதரவையும் வழங்கினர்.

நிலைமையினை சீர்செய்ய, சோவியத்தின் சார்பாக ஆயுதங்களையும் ஆலோசகர்களையும் ஸ்பெயின் அனுப்பி வைத்தார் சோவியத் அதிபர் ஸ்டாலின். ஆனால் பிரான்ஸோ, இங்கிலாந்தோ, அமெரிக்காவோ எவ்வித உதவியும் செய்யாமல் அமைதிகாத்தன. ரூசுவெல்ட் தலைமையிலான அமெரிக்க அரசு, ஸ்பெயினில் யாருக்கும் உதவக் கூடாது என்ற உத்தரவிட்டது. அதைமீறி, ஜெனரல் மோட்டார்ஸ், பாயர்ஸ்டோன் மற்றும் அமெரிக்காவின் பெரிய கார்பரேட் நிறுவனங்கள் பலவும் ஸ்பெயினின் பாசிஸ இராணுவத்திற்கு டிரக்குகள், டயர்கள், மற்றும் இதர போர் ஆயுதங்கள் வழங்கி உதவின. டெக்சகொ எண்ணெய் நிறுவனம் ஒரு படி மேலே சென்று, ஸ்பெயினின் பிரான்கோ அரசிற்கு தேவையான அளவு எரிபொருளைக் கடனாகத் தருவதாகவும், கடனை எப்போது வேண்டுமானாலும் திருப்பி செலுத்தலாம் என்றும் அறிவித்தது. விவரமறிந்த ரூசுவெல்ட், டெக்சகொ எண்ணெய் நிறுவனத்துக்கு அபராதம் விதித்ததும், பின்னாளில் அதே நிறுவனம் ஹிட்லருக்குத் தொடர்ந்து எண்ணெய் வழங்கியதும் வரலாறு.

அமெரிக்காவிலிருந்து 2800 பேர் கொண்ட கம்யூனிஸ்ட் போராளிக்குழு ஒன்று ஸ்பெயின் சென்று பாசிஸ பிராங்கோ இராணுவத்தை எதிர்த்துப் போராடியது. ஆனால், அமெரிக்க பெருமுதலாளிகள், ஹிட்லரின் இராணுவம், பாசிஸ பிரான்கோ இராணு வம் போன்ற ஆயுத, பணப் பலத்தை எதிர்த்து நிற்க முடியாமல் 1939 இல் ஸ்பெயின் குடியரசு வீழ்ந்தது. ஜனநாயகமும், குடியரசும் நிலைக்க வேண்டுமென்று விரும்பிய 1 லட்சம் ஸ்பெயின் நாட்டு மக்களையும், உதவ வந்த 5000 அயல்நாட்டு தன்னார்வலர்களையும் கொன்று புதைத்து, அமைதியைத் திரும்பவிடாமல் பார்த்துக் கொண்டது பிரான்கோவின் பாசிஸ இராணுவம்.

ஸ்பெயின் உள்நாட்டுபோரின் போது அமெரிக்கா எடுத்த முடிவு மிகத் தவறானது என்று பின்னாளில் 1939 இல் அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்டே கபினெட்கூட்டத்தில் தெரிவித்திருந்தார். ஸ்பெயின் போரிலிருந்தும், தனது பலத்தை பெருக்கிக் கொண்டது ஜேர்மனி இராணுவம்.

ஹிட்லரின் நாசிஸப் படைக்கு எதிராக ஒன்றுதிரள வேண்டுமென்று ஸ்டாலின் பல வருடங்களாக விடுத்த வேண்டுகோளை நிராகரித்துக் கொண்டே வந்தன மேற்குலக நாடுகள்.

1937 இல் வலிமை வாய்ந்த ஜப்பானியப் படைகள் சீனாவின் ஒவ்வொரு நகரையும் ஆக்கிரமித்துக்கொண்டே முழுவீச்சுடன் போராக மாற்றியிருந்தது. 1937 டிசெம்பர், சீனாவின் நேன்சிங் பகுதியைப் பிடித்து, 2-3 லட்சம் அப்பாவி மக்களை கொன்ற தோடல்லாமல், பல்லாயிரக்கணக்கான பெண்களைப் பாலியல் வன்கொடுமையும் செய்தது ஜப்பானிய இராணுவம். விரைவில், 20 கோடி மக்கள் வாழ்ந்த கிழக்குச் சீனாவை முழுவதுமாக தன்வசப்படுத்தி விட்டது ஜப்பான்.

*1938 இல் ஆஸ்திரியா, செக்கஸ்லோவாக்கியாவின் ஒரு பகுதி என்று தனது ஆக்கிரமிப்பைத் தொடர்ந்தது ஹிட்லரின் ஜேர்மனி. 1939 மார்ச் மாதத்தில் செக்கஸ்லோவாக்கியாவை முழுமையாக தனதாக்கியது ஹிட்லரின் ஜேர்மனி. ஒவ்வொரு நாடாக ஆக்கிரமித்துக் கொண்டே, ஜேர்மனியென்னும் போர் பூதமொன்று தன்னை நோக்கி வருவதை உணர்ந்தது சோவியத் யூனியன். வேகமாக முன்னேறிக் கொண்டிருந்த சோவியத்தின் பொருளாதாரத்தை பாதுகாப்பதற்கும், போரினால் ஏற்படப்போகின்ற பேரழிவினைத் தடுக்கவும், தன்னால் இயன்றவரை போரினைத் தடுக்கவே முயன்றார் ஸ்டாலின். போரில்லா சமூகத்தை அமைக்க, பிரிட்டன், அமெரிக்க உள்ளிட்ட மேற்குலக நாடுகள் எவையும், ஓர் அமைதி ஒப்பந்தத்திற்கு வரத்தயாராக இல்லை. அதனால், தன்னை நெருங்கி வந்து கொண்டிருந்த ஜேர்மனியிடமே, சோவியத் ஒரு ஒப்பந்தத்தை ஒருங்கிணைத்து கையெழுத்திட்டது. ஜேர்மனியோ, சோவியத்தோ ஒருவரை ஒருவர் ஆக்கிரமிக்கக் கூடாது என்பது தான் அவ் ஒப்பந்தத்தின் சாராம்சம்.*

ஒப்பந்தம் போட்ட இரண்டே வாரத்திற்குள், அதனை மீறிக்கொண்டு போலந்திற்குள் நுழைந்தன ஹிட்லரின் படைகள். பிரிட்டனும், பிரான்ஸும் விழித்துக் கொண்டு, போலந்துடன் இணைந்து ஹிட்லரை எதிர்த்து நின்றன. சோவியத்தும் போலந்திற்குள் நுழைந்து, தன்னுடைய எதிர்ப்பினைக் காட்டி, ஸ்டோனியா, லத்வியா, லித்துவேனியா மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகளில் நுழைந்தது.

**இரண்டாம் உலகப்போரும் ஏறத்தாழ தொடங்கிற்று.**

எதையும் கண்டுகொள்ளாமல், தன்னுடைய ஆக்கிரமிப்பை டென்மார்க், நோர்வே, போலந்து, பெல்ஜியம் என தொடர்ந்தது ஹிட்லரின் ஜேர்மனி. அந்நாடுகளின் தேசிய இராணுவங்கள் எல்லாம் பலம்பொருந்திய ஜேர்மன் இராணுவத்துடன் மோதமுடியாமல் பின்வாங்கின. மிக அருகில் இருந்த பிரான்ஸும் அவர்களுக்கு உதவ முன்வரவில்லை.

மேற்கு ஐரோப்பாவில் எல்லா நாடுகளையும் பிடித்த பின்னர் ஜேர்மனியின் பார்வை இங்கிலாந்தின் பக்கம் திரும்பியது. இங்கிலாந்தைப் பிடித்துவிட்டாலோ, பணியவைத்துவிட்டாலோ, அதன் பின்னர் சோவியத்தை மிரட்டுவது எளிதாகிவிடும் என்பது ஹிட்லரின் கணக்கு. இங்கிலாந்தைத் தாக்கியதற்கு இதனைவிடவும் முக்கியமான மற்றுமொரு காரணமுமிருந்தது. இங்கிலாந்தை பிடித்துவிட்டால், இந்தியா உட்பட அதன்வசமுள்ள ஒட்டுமொத்த காலனிகளும் தன்வசமாகிவிடும் என்றும் கணக்குப் போட்டது ஜேர்மனி.

ஆனால், வான்வழியாக பிரிட்டனைத் தாக்குவதா அல்லது கடற்படையினை வீழ்த்துவதா, அல்லது பிரிட்டன் நகரங்களை குண்டுபோட்டு அழிப்பதா என்பதில் ஹிட்லருக்கு இருந்த குழப்பங்களால், பிரிட்டனை வெற்றி கொள்ள முடியாமல் திரும்ப வேண்டியதாயிற்று.

அமெரிக்கா இப்போரிலிருந்து தள்ளியே இருக்க விரும்பியது. 1940 இல் நடந்த தேர்தலில் மூன்றாவது முறையாக போட்டியிட முடிவு செய்த ரூஸ்வெல்ட்,

*"அமெரிக்காவிலிருந்து ஒருவர் கூட அயல்நாட்டுப் போர்களுக்கு அனுப்பப்படமாட்டார்கள்"*

என்ற வாக்குறுதியையே அளித்தார்.

(கேள்வி தொடரும்...)

# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.



111

## யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த சமாதானப் பேச்சுகள்

### விடுதலைப் புலிகள் விடுத்த காலக்கெடு

அன்றைய வரலாற்றுச் சூழ்நிலையின் சகல பரிமாணங்களையும் மிகவும் கவனமாகப் பரிசீலனை செய்து பார்த்த பின்பு, அரசு தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளும் பொருட்டு ஒரு காலக்கெடுவை விதிக்கப் புலிகளின் தலைமை முடிவெடுத்தது. விடுதலைப் புலிகள் அடைந்துள்ள விரக்தியையும் ஏமாற்றத்தையும் சந்திரிகா அம்மையாருக்கு எடுத்து விளக்கிய பிரபாகரன், ஒரு காலக்கெடுவை விதித்து, அந்தக் கால இடைவெளிக்குள் அரசு தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளாது போனால் பேச்சுகளை இடை நிறுத்தும் 'வேதனைக்குரிய முடிவை' விடுதலைப் புலிகள் எடுப்பார்கள் என எச்சரித்தார். சந்திரிகாவுக்குக்கீழ்க்கண்ட கடிதத்தைப் பிரபாகரன் எழுதினார்.

*தலைமைச் செயலகம்*
*தமிழீழ விடுதலைப் புலிகள்*
*யாழ்ப்பாணம்*
*16.03.1995*

*கனம். சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா,*
*சிறிலங்காவின் ஜனாதிபதி*
*கொழும்பு*

*அன்பின் ஜனாதிபதி அவர்கட்கு,*

*1995 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9 ஆம் நாள் திகதியிடப்பட்ட உங்களது கடிதத்துக்கு மிகவும் நன்றி.*

*ஒரு நடுநிலையான மத்தியஸ்தர் குறித்து நீங்கள் தெரிவித்த யோசனை தொடர்பாக, லண்டன் அனைத்துலகச் செயலகம் வெளியிட்ட பத்திரிகை அறிக்கையில் முரண்பாடுகள் இருக்கின்றன என உங்களது கடிதத்தின் முற்பகுதியில் குறிப்பிட்டுள்ளீர்கள். இந்த விடயத்தில், நான் உங்களுக்குத் தனிப்பட்ட முறையில் அனுப்பிய கடிதத்தை மேற்கோள் காட்டப் பயன்படுத்துவதே பொருத்தமாக இருக்குமெனக் கருதுகிறேன்.*

*சமாதானப் பேச்சுகளைமுன்னெடுப்பதற்கு அமைதியான சூழ்நிலையும் இயல்புநிலையும் தோன்றுவது அத்தியாவசியமென்பதை நாம் தொடக்கத்திலிருந்தே வலியுறுத்தி வந்தோம் என்பதை நீங்கள் நன்கறிவீர்கள். சில முக்கிய காரணங்களுக்காகவே நாம் இந்த நிலைப்பாட்டை எடுத்தோம்.*

*மிகவும் சிக்கல நிறைந்த இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பேச்சுகளை முன்னெடுக்க நீண்டகாலம் பிடிக்கும் என்பதால், ஒரு நிரந்தரமான போர் நிறுத்தம் மூலம் ஒரு நிலையான, சமாதானச் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என்பது எமது கருத்தாகும். நிலையற்ற போர் நிறுத்தங்களாலும், அவை மீறப்பட்டமையாலும் முன்னைய பேச்சுகள் முறிவடைந்தும் போர் மீள ஆரம்பிக்கப்பட்டதையும் நீங்கள் நன்கறிவீர்கள். எனவே, இந்த விடயத்தில் நாம் கொண்டுள்ள கருத்தை நீங்கள் பாரதூரமாக எடுக்கவில்லை என்பது எமக்குக் கவலையைத் தருகிறது. போர் நிறுத்தத்தை அதன் முழுமையான அர்த்தத்தில் ஏற்க மறுத்து, 'பகை நடவடிக்கை நிறுத்தம்' என்ற கோட்பாட்டின் அடிப்படையில் ஒரு தற்காலிக மோதல் தவிர்ப்பையே நீங்கள் விரும்புகின்றமையிலிருந்து உங்களது நிலைப்பாடு எமக்குத் தெளிவாகிறது. பகை நிறுத்த உடன்பாட்டின் விதிகளை விரிவுபடுத்திச் செயல்முறைத் திட்டம் ஒன்றை உருவாக்குவதிலும் உங்களது அரசு அக்கறை காட்டவில்லை. இவற்றிலிருந்து, சமாதானச் சூழ்நிலையை நிலைப்படுத்திப் பலப்படுத்த உங்களது அரசு அக்கறை காட்டவில்லை என்பது நன்கு புலனாகிறது.*

*தமிழரின் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்னைய அரசு, ஈவிரக்கமற்ற இராணுவ அணுகுமுறையைக் கடைப்பிடித்தது என்பதும், அந்த அரசு முன்னெடுத்த இனவாத அடக்குமுறைக் கொள்கைகளின் விளைவாக வடக்குக் கிழக்கில் குடிமக்களின் இயல்பான வாழ்நிலை பாரதூரமாகப் பாதிக்கப்பட்டது என்பதையும் நீங்கள் நிச்சயம் அறிந்திருப்பீர்கள். தமிழர் தாயகத்தில் இராணுவ ஆக்கிரமிப்புக்கு வசதி செய்யும் வகையில், முன்னைய அரசால் திணிக்கப்பட்ட பொருளாதாரமுற்றுகைகள், தடைகள், கட்டுப்பாடுகள் காரணமாக எமது மக்கள் பெரும் துன்பத்துக்கும் இடர்பாடுகளுக்கும் ஆளாகினர்; அவர்களது சமூகப் பொருளாதார வாழ்வும் சீர்குலைக்கப்பட்டது. சமாதானத்துக்கு ஆணை பெற்று ஆட்சிப்பீடம் ஏறிய புதிய அரசு, எமது மக்களின் துன்பங்களைத் துடைத்து இயல்புநிலையும் அமைதியும் நிலவும் ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்குமென விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் நம்பினார்கள். இந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே, எமது மக்கள் எதிர்கொண்டு நிற்கும் அவசரமான நாளாந்த வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு முதற் கட்டப் பேச்சுகள் முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென நாம் வற்புறுத்தினோம். ஆரம்பப் பேச்சுகளின் போது எமது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்னவென்பதைத் தெளிவுபடுத்தி, அவற்றுக்குத் தீர்வுகாணுமாறு அரசாங்கத்தை வேண்டினோம். இந்தப் பிரச்சினைகள் விடுதலைப் புலிகளின் கோரிக்கைகள் அல்ல என்றும், மாறாக, இவை ஒடுக்கப்படும் எமது மக்கள் எதிர்கொள்ளும் பாரதூரமான மனிதாபிமானப் பிரச்சினைகள் என்றும் நாம் விளக்கினோம். போரால் பாதிப்புக்கு உள்ளாகிய பகுதிகளில் அமைதியையும் இயல்புநிலையையும் உருவாக்குவதாயின் எமது மக்கள் எதிர்கொள்ளும் அத்தியாவசிய வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு முதலில் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினோம்.*

*'நாளாந்த வாழ்க்கையில் எமது மக்கள் அனுபவிக்கும் இடர்பாடுகளை நீக்குவதாக' உங்களது அரசு ஆரம்பக் கட்டப் பேச்சுகளின் போது உறுதியளித்தது. எனினும், காலப்போக்கில், பேச்சுகள் தொடர்ந்து சென்றபோது, மக்களின் அவசர வாழ்க்கைப் பிரச்சினைகளைக் கை நழுவவிட்டு, இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அரசியல் பிரச்சினைக்கு முக்கியம் கொடுக்க உங்களது அரசு முனைந்தது. இது பற்றி நாம் எமது கடிதங்களில் சுட்டிக் காட்டியிருந்தோம். இராணுவத் தலைமைப்பீடத்தைத் திருப்திப்படுத்தும் நோக்கத்துக்காகவே எமது மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்க்க அரசு பின்னடிப்பதாகக் குறிப்பிட்டுக் காட்டிய நாம், குடிமக்களின்வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு மேலாக இராணுவத்தின் கேந்திரநலன்களுக்கு முன்னுரிமை கொடுத்தால் சமாதான முயற்சிகள் பாரதூரமாகப் பாதிக்கப்படுமெனவும் எச்சரிக்கை விடுத்தோம். விடுதலைப் புலிகள் முன்வைக்கும் கோரிக்கைகள் வழங்கப்பட்டால் பாரதூரமான இராணுவ விளைவுகள் ஏற்படும் என உங்களது கடைசிக் கடிதத்தில் தெரிவித்திருந்தீர்கள். இதிலிருந்து இராணுவ நலனுக்கே நீங்கள் முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள் என்ற எமது சந்தேகம் உறுதியாகிறது. பூநகரி இராணுவ முகாமை அகற்றி யாழ்ப்பாணத்துக்கு ஒரு தரைப் பாதையைத் திறப்பது, அத்தியாவசியப் பொருள்கள் மீதான தடையை நீக்குவது, மீன்பிடி மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது போன்ற எமது மக்களின் தேவைகளை நிறைவு செய்யவும் எமது கோரிக்கைகள் தேசியப் பாதுகாப்புப் பிரச்சினைகள் என்பதால் விட்டுக் கொடுக்க முடியாதவை என்பது உங்களது நிலைப்பாடு. இன்னொரு வகையில் சொல்லப்போனால், தமிழ் மக்களின் சமூகப் பொருளாதார வாழ்வு மீது இராணுவத்தால் திணிக்கப்பட்ட தடைகளும் கட்டுப்பாடுகளும் தேசியப் பாதுகாப்பைப் பேணுவதற்கு அவசியமானவை என நீங்கள் நியாயப்படுத்த முனைகிறீர்கள்.*

*எமது மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் இந்த முக்கிய விடயத்தில் நீங்கள் எடுத்துள்ள நிலைப்பாடு எமக்கு ஆழமான வேதனையையும் ஏமாற்றத்தையும் தருகிறது. ஒரு மக்கள் சமூகத்தின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகக் கருதும் உங்களது பிறழ்வுபட்ட பார்வை இராணுவவாதத்தையும் பேரினவாதத்தையும் வெளிப்படுத்துவதாக உள்ளது.*

*தமிழ் மக்களைப் பீடித்து நிற்கும் மிகவும் அவசரமான வாழ்க்கைப் பிரச்சினைகளை விட்டுக் கொடுக்க முடியாத பாதுகாப்புப் பிரச்சினைகளாகச் சித்திரித்து, அவற்றுக்குத் தீர்வு காண மறுக்கும் உங்களது நிலைப்பாடு ஓர் உண்மையை எமக்குப் புலப்படுத்துகிறது. அதாவது, தமிழ் மக்கள் மீது இராணுவ, பொருளாதார நெருக்குவாரங்களைத் தொடர்ந்து இறுக்கி, அதனைப் பேச்சு மேசையில் பேரம் பேசும் துருப்பாக வைத்து அரசியல் லாபம் பெற முனைகிறீர்கள். இதனால் தான் மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளை ஒட்டுமொத்த அரசியல் தீர்வுடன் தொடர்புபடுத்தக் கங்கணம் கட்டி நிற்கிறீர்கள். இந்த நிலைப்பாட்டை நாம் ஒரு பொழுதும் ஏற்கப்போவதில்லை. எமது மக்கள் எதிர்கொள்ளும் நாளாந்த வாழ்க்கைப் பிரச்சினைகள், இன முரண்பாட்டால் எழுந்த அரசியல் சிக்கல்கள் அல்ல. வரையறுக்கப்பட்ட கேந்திரக் குறிக்கோள்களை அடைவதற்காக இராணுவத்தால் உருவாக்கப்பட்ட பிரச்சினைகள் இவை. எமது மக்கள் மீது திணிக்கப்பட்ட இந்தத் தடைகளும் கட்டுப்பாடுகளும் முந்திய அரசால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ அடக்குமுறை நடவடிக்கைகள் என்பதே எமது கருத்தாகும். இவை அநீதியானவை. மனிதாபிமானமற்றவை. இந்தப் பிரச்சினைகள் மனிதாபிமானத்தின் அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டியவை; பிளவுபட்டு நிற்கும் இரு தேசங்கள் மத்தியில் நல்லெண்ணத்தையும் உண்மையான சமாதானத்தையும் கட்டியெழுப்பும் உன்னத இலட்சியத்தின் அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டியவை.*

*கடந்த ஆறு மாத காலமாக உங்களுக்கு எழுதிய பல கடிதங்களிலும், நேரடிப் பேச்சுகளிலும் எமது மக்களின் அவசரமான ஜீவாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதையே நாம் தொடர்ச்சியாக வற்புறுத்தி வந்திருக்கிறோம். இதனால், இனப் பிரச்சினைக்கு அடிப்படையான அரசியற் சிக்கல்களைத் தட்டிக் கழித்து விட நாம் முயற்சிப்பதாகத் தவறாக எடை போடக் கூடாது. அரசியல் பிரச்சினைகள் பற்றிப் பேசுவதற்கு நாம் எப்பொழுதும் மறுத்ததில்லை. எமது மக்களின் தேசிய அபிலாஷைகளைத் தீர்ப்பதற்கு உகந்ததான ஓர் அரசியல் கட்டமைப்புப் பற்றியும் நாம் யோசனை தெரிவித்தோம். தற்போதைய பேச்சுகள் முடங்கியமைக்கும், அரசியல் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. 'இராணுவ விளைவுகள்' ஏற்படலாமென அஞ்சி, உடனடியான அவசரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உங்களது அரசு தயக்கம் காட்டுவதாலேயே பேச்சுகள் தடைப்பட்டு நிற்கின்றன.*

*உண்மையான உறுதிப்பாடு இருக்குமானால் உங்களால் இலகுவில் தீர்த்து வைக்கக் கூடிய எமது மக்களின் நாளாந்த வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்க்காது கடும் போக்கை உங்களது அரசு கடைப்பிடிக்கிறது. அப்படியானால், மிகவும் சிக்கலானதும், கடினமானதுமான தேசிய இனப் பிரச்சினையை உங்களது அரசாங்கத்தால் தீர்த்து வைக்க முடியுமா என்ற சந்தேகம் எமக்கு எழுகிறது. ஆகவே, சமாதான இலட்சியத்துக்காக உங்களது முடிவுகளை மீள பரிசீலனை செய்யுமாறு நாம் உங்களை மீண்டும் வேண்டிக் கொள்கிறோம். 1995 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் நாளுக்கு முன்னராக உங்களிடமிருந்து சாதகமான பதில் எதுவும் கிடைக்காத பட்சத்தில், இந்தச் சமாதான நடைமுறையைத் தொடர்வதா இல்லையா என்பது பற்றி வேதனைக்குரிய ஒரு முடிவை எடுப்பதற்கு நாம் நிர்ப்பந்திக்கப்படுவோம்.*

*உங்களிடமிருந்து விரைவான பதிலை எதிர்பார்க்கிறோம்.*

*நன்றியுடன்*
*உங்கள் நேர்மையுள்ள*
*வே. பிரபாகரன்*
*தலைவர்*
*தமிழீழ விடுதலைப் புலிகள்*

(தொடரும்...)



# யாழ்ப்பாணம் நீ

# அருள்மிகு ஸ்ரீ ஜெய நீராவி வீரக

# மகா கும்பாபிஷேகப்

## அருளாசிச் செய்தி



யாழ். நீராவியடி வீரகத்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று நடைபெறுவது மகிழ்ச்சியைத் தருகின்றது. வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென் னியும் தந்த ஓங்கார ரூபரான ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமா னுடைய மகா கும்பாபி ஷேகம் மிகச் சிறப்பாக நிறைவேறி நன்மைகள் பலவற்றை நல்க வேண்டுமென்று அருளாசிகள் நல்கி வாழ்த்துகின்றோம். அத்துடன் இந்தத் திருப் பணியில் ஈடுபட்ட நீராவிப்பதி வாழும் மெய்யடியார் பெருமக்களும் ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளரும் மற்றும் உதவிகள் செய்த உத்தமர்களும் எல்லா நலன்களும் பெற்று இவ்வுலகில் சீரோடுஞ் சிறப்போடும் வாழ்ந்து விநாயகப் பெருமான் திவ்ய பேரருளால் வேரோடு வினை நீக்கப்பெற்று நல்வாழ்விலே திளைக்க உளமாரப் பிரார்த்தித்து ஆசீர்வதித்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,**
ஆதீனகுரு முதல்வர், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

## சமூகப் பணிகளும் வளரட்டும்!




யாழ். நீராவியடி அருள்மிகு ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் திருக்கோவில் மகா கும்பாபிகேப் பெருவிழா நடைபெறுவதையிட்டு மிகவும் மகிழ்வடைகின்றோம்.

இந்து நிறுவனங்களையும், இந்து ஆலயங்களையும் ஸ்தாபித்தல், பாதுகாத்தல் மற்றும் பேணுதல் என்பது இந்து மாமன்றத் தின் குறிக்கோள்களில் ஒன்றாகும். அந்த வகையில் ஆலய புனருத்தாபனமும் அதை யொட்டி நடைபெறும் மகா கும்பாபிஷேகமும் வரவேற்கத்தக்கன.

ஆலயங்களில் சமயப் பணிகளுக்கு மேலாக சமூகப் பணி களையும் ஆற்ற வேண்டுமென்பதே எமது விருப்பமாகும். இதன் ஓர் அங்கமாக நீராவியடி மாணவர்கள் மற்றும் இளைஞர்களைத் திரட்டி சிவத் தொண்டர் அணியினை நிறுவுதல் மற்றும் அறநெறிப் பாடசாலைகளை அமைத்து நடத்துதல் என்பன வரவேற்கத்தக்கது. இவ்வாறான சமூகப் பணிகளுக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் உறுதுணையாக இருப்பதுடன் தேவையான அனுசரணைகளையும் வழங்கும். இவ் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகப் பெருவிழா சீரும் சிறப்புமாக நடைபெற பிரார்த்திக்கின்றேன்.

**கந்தையா நீலகண்டன்,**
தலைவர், அகில இலங்கை இந்துமாமன்றம்.

## வேரோடு வினை களைவான்!




யாழ்ப்பாணம் நீராவியடி அருள்மிகு ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு இன்று குடமுழுக்கு எனப் படுகின்ற மகா கும்பாபிஷேகப் பெருஞ் சாந்தி விழா நடைபெறுகின்றது.

வேரோடு வினைகளையும் விநாயகப் பெருமானின் கும்பாபிஷேக மலருக்கு ஆசிச் செய்தி வழங்குகின்ற பெரும் பாக்கியம் கிடைத் ததையிட்டு பேருவகையடைகின்றோம். நீராவியடிப்பதி வாழ்கின்ற அடியார்கள் பெரும் புண்ணியஞ் செய்த பாக்கியசா்லிகள் ஆவர்.

ஓர் ஆலயக் கும்பாபிஷேகம் காண்பதென்பது இலே சான காரியமல்ல. அதற்குப் பூர்வ ஜென்ம புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

இன்று நிகழும் இக்கும்பாபிஷேகம் இனிதே நடந்து எம்பெருமானுடைய பரிபூரண கிருபாகடாட்சம் அடியார்கள் அனைவருக்கும் கிடைக்க விநாயகரை வேண்டுகின்றோம்.

தெய்வத்தமிழ்ச்சுடர் இராசைய்ா ஸ்ரீதரன்





## வீரகத்தி விநாயகர் அருள் வேண்டுகிறோம்!



ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாயகப் பெருமானுடைய திருக்கோயில் திருக் குடமுழுக்குப் பெருவிழா இன்று அந்தப் பெருமானின் திருவரு ளாலே நடைபெறவுள்ளது. அவ்வேளை ஒரு வாழ்த்துரை வழங்குமாறு கேட்டுள்ளனர். பெருமானுடைய திருக்குடமுழுக்குப் பெருவிழாவுக்கு நாம் என்ன வாழ்த்துரை கூறுவது?

ஆனால், அவனருளாலே அவன் தாள்வணங்கி அவன் புகழ் பாடலாம். அவனை வாழ்த்துவது மணிவாசகப் பெருமான் கூறியமை போல " தேவர்கள் வாழ்த்துவதும் தாம் வாழ" என்பதற்கமைய அவன் தாள்களை நாம் வாழ வாழ்த்த எண்ணலாம்.

பிராமணரைக் கொன்ற பழி 'பிரம்மஹத்தி தோஷம்' எனப்படும். போரிலே வீரர்களைக் கொன்ற பழி 'வீரஹத்தி தோஷம்' எனப்படும். இராவணனைக் கொன்ற காரணத்தால் இராமபிரானுக்கு ஏற்பட்ட வீரஹத்தி தோஷத்தைத் தீர்த்து வைத்த விநாயகப் பெருமானே நீராவியடி திருக்கோயிலிலே வீற்றிருக்கின்றார். அவருடைய திருக்கோயில் புதுப்பொலிவு பெறவுள்ளது.

நாம் நினைக்கின்ற செயல்களைத் தொடங்கி வைப்பவனும் அவனே, அவற்றை முடித்து வைப்பவனும் அவனே. எதைச் செய்வதாயினும் பிள்ளையார் சுழி இட்டுத்தான் தொடங்குகிறோம். அச்சுழியை இடும்போது ஒரு கணம் நாம் என்ன செய்யப் போகிறோம், எப்படிச் செய்யப் போகிறோம் என்பவை தொடர்பான ஓர் எண்ணக்கரு நம் மனதிலே உண்டாகிவிடும். இறைநினைவு நம்மை செயல் முடிவுக்கு இட்டுச் செல்லும் என்பதற்குப் பிள்ளையார் சுழியே துணை. நாம் நினைத்தவற்றை நிறைவேற்றிவைக்கும் வீரஹத்தி விநாயகப் பெருமானை மனதிலே நினைந்து, திருக்கோயிற் காரியங்கள் யாவும் நலமே நடைபெற அப்பெருமானின் அருள் நோக்கை வேண்டுகிறேன்.

**அ.சண்முகதாஸ்,** வாழ்நாள் பேராசிரியர்.

## விநாயகர் பாதம் ப



விந
னின் பு
மானஸ்ரீ
கத்தி வ
மகா
பெரு
உரிய
னெடுத்
நிறைவி விநாயகப்
நல்லாசியை பெற வி
அனைவரும் செய்து
பாக்கியமேயாகும்.

மகத்தான விநாயக
திருவருட்பொலிவு திக்
பாரம்பரிய சம்பிரதாயங்
கும்பாபிஷேகத்தை நட
நம்பிக்கைப் பொறுப்பா
டுக்களைத் தெரிவிப்பே
ஸ்ரீ ஜெய நீராவி வீரக
பெருமானின் பாதம் ப
துக்களையும் தெரிவித்
றேன்.

பொ.வாகீசன்
மாநகர சபை

NEW SCIENCE WORLD
கணித, உயிரியல் பிரிவுகளுக்கான தமிழ் மொழி மூல English Medium வகுப்புகள். விஞ்ஞானப் பிரிவுக்கான தனித்துவமான நிறுவனம்.
NEW SCIENCE WORLD
நாவலர் வீதி - பிறவுண் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்

சித்ரி




யாழ். காலணியகம் YARL TRADES CENTER 021 222 3152
Agents for: Bata
யாழ். பாட்டா
Yarl Bata
11,Modern Market
Hospital Road, Jaffna

சிறி மதனா
நகை மாளிகை
ஓடர் நகைகள் 22 கரட்டில் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்
155M, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
021 2227772

# நீராவியடி
# ரகத்தி விநாயகர் திருக்கோவில்
# ் பெருவிழா - 09.04.2017





## அருள் வேண்டுகிறோம்

ஓம் அன்பே சிவம்

பூதரின் பரம்பரையில் வந்தவர்களின் விடா முயற்சியால் பல கட்டங்களைக் கடந்து தற்பொழுது ஐந்து நிலை இராஜகோபுரத்துடன் ஆன ஆகம முறைக்குட்பட்ட கோவிலாகி கும்பாபிஷேகம் நடைபெறும் அருள் கிட்டியுள்ளது.

இந்த ஆலயத்தைச் சூழவுள்ள பல ஆலயங்களின் மணி ஓசைகளின் அதிர்வலைகளால் இந்த ஆலயமும் சக்தி ஊட்டப்படுவதுடன் அந்தப் பிரதேசத்தில் வாழும் மக்களும் ஓங்கார ரீங்காரமாம் பிரபஞ்ச சக்தியைப் பெற்று அமைதியான - மகிழ்வான - ஆரோக்கிய மான வாழ்வு வாழும் நிலையிலுள்ளனர்.

இவ்வாறான அற்புத சக்தியைப் பெற்றுள்ள பூமாதேவி மேல் அமைந்துள்ள ஆலயத்தின் கும்பாபிஷேகத்தில் கலந்துகொள்ளும் அனைத்து சைவ பக்தர்களுக்கும் ஸ்ரீஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய மூலவரின் அருள் கிடைக்க வேண்டி அவர் திருப்பாதம் பணிந்து வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனம்.**



## பெரும் கருணை கிட்டட்டும்!



மெய்யன்போடு தியானிப்பவர்களுக்கு அறிவுக்கறிவாய் நின்று அருள்பவர் விநாயகப் பெருமானவர். நாதம், விந்து சேர்ந்த வடிவிலமைந்த 'உ' என்ற பிள்ளையார் சுழியில் அவனை வைத்துத் தியானித்து தொடங்குகின்ற கருமங்கள் முட்டின்றி நிறைவேறுவது நம் முன்னோர் கண்ட அனுபவ ஞானமாகும். அவர் கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவனாவான்.

இவ்வுண்மையை உணர்ந்து இந்தியா காரைக்காலில் இருந்து வேதாரணியம் வழியாக நீராவிப்பதியில் குடியேறிய பெருநிலக் கிழாரும், வணிகருமான பூதர் என்பவர் வீரகத்தி விநாயகரை தம் வதிவிடத்தில் ஸ்தாபித்தார் என்பது கர்ணபரம்பரைச் செய்தி.

இத்தகைய பெருமைபெற்ற விநாயகர் பெருமானுடைய ஜீர்ணோத்தாரன மகா கும்பாபிஷேகம் இன்று பங்குனி உத்தரத் தன்று நடைபெறத் திருவருள் கூடியுள்ளது.

இப்பணியை இவ்வாலய ஸ்தாபகர் வழித் தோன்றலான ஸ்ரீமான் வை.இரகுநாதமுதலியார் முன்னின்று நடத்துவது அப் பெருமானின் பெருங்கருணையே.

பெருஞ்சாந்தி விழாக்கண்டு பேரருட் பிரகாசமாய் விளங்கும் விநாயப் பெருமானின் பெருங்கருணை அனைவர்க்கும் கிடைக்க அப்பெருமானை நினைந்து ஆசிகூறி அமைகின்றோம்.

**சி.சக்திகிரீவன்**, செயலாளர்,
இந்து சமயப் பேரவை,யாழ்ப்பாணம்.

## பெரு வளர்ச்சி காணட்டும்!



இலங்கைத் திருநாட்டின் யாழ்ப்பாணத் தீப கர்ப்பத்தின் தலைநகராக விளங்கும் யாழ்.நகரின் வட புலத்தே நீராவியடிப் பகுதியில் தென் இந்தியாவில் இருந்து வேதாரணியம் வழியாக வந்து குடியேறிய பெரும் நிலக்கிழாரும் வணிகருமான பூதர் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்ட ஜெய ஸ்ரீ நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம் சிறு மண் குடிசையில் ஸ்தாபிக்கப்பட்டு இன்று பஞ்சதள கோபுரத்துடன் வளர்ச்சி கண்டுள்ளது. அவ்வாறு வளர்ச்சி காண்பதற்கு அது சைவத்தையும் தமிழையும் காக்கும் நன் நகரில் அமைந்துள்ளதே என்றால் மிகையாகாது.

தன்னைத் தேடி வந்து வழிபடும் அடியார்க்கு எல்லாம் அருள் கொடுக்கும் இவ் ஆலயம் இன்று பல பரம்பரையினரைக் கடந்து வளர்ந்து கொண்டிருக்கின்றது.

இவ் ஆலய வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிய ஆலய நிர்வாகிகள், அடியார்கள் அனைவரையும் வாழ்த்துவதோடு விநாயகப் பெருமானின் இஷ்ட சித்திகள் அனைவருக்கும் கிடைக்க வேண்டிய நிற்கின்றேன்.

**திருமதி விஜயகலா மகேஸ்வரன்,**
சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர்.

## ர் பாதம் பணிவோம்!



விநாயகப் பெருமானின் புகழ் மிக்க ஆலயமான ஸ்ரீ ஜெயநீராவி வீரகத்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகப் பெரு விழாவை மிக உரிய முறையில் முன்னெடுத்ருப்பதும், அதன்
விநாயகப் பெருமானின்
யை பெற விருப்பதும் நாம்
ரும் செய்து கொண்ட பெரும்
மயாகும்.
தான விநாயகப் பெருமானின்
பொலிவு திக்கெட்டும் பரவி நிற்க
சம்பிரதாயங்களுடன் அம்மகா
ஷேகத்தை நடத்தும் இவ்வாலய
கப் பொறுப்பாளருக்கும் பாராட்
த் தெரிவிப்பதோடு, அருள்மிகு
நீராவி வீரகத்தி விநாயகப்
னின் பாதம் பணிந்து நல் வாழ்த்
ாயும் தெரிவித்துக் கொள்கின்

**பொ.வாகீசன்**,ஆணையாளர்,
மாநகர சபை,யாழ்ப்பாணம்.

சூரியன் களஞ்சியம்
207, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்.

S.S.Tharan Fancy
அழகு சாதனப் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள், அன்பளிப்புப் பொருள்கள்.
S.S. தரன் பான்சி
Fancy Goods,School Items, DSI Bata & Presentation Items.
இல. 37, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.
No.37. Modern Market (Inside), Jaffna.

யாழ் பான்சி மஹால்
Yarl Fancy Mahal
Wholesala & Retail Delers in All Kainds of Bage
& FANCY ITEMS
இல.07, பெரியகடை, யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 8403
No.07, Grand Bazaar, Jaffna.

KAJI VIDEO
கஜி வீடியோ
தற்போது புதிய முகவரியில் கஜி வீடியோ
486A, K.K.S. Road, Jaffna
021 222 9316

ற்றி ஹாட்வெயார்
அன் ஸ்ரோர்ஸ்

Golden Eagle KT (Pvt) Ltd.
Cleaning Services
Maintenance services
Security services
Real estate
201/6, 201/7, Navalar Road, Jaffna
Phone : 021 -222 5102
Fax : 021 - 222 1290

ஆறுமுகம் ரெக்ஸ்ரைல்ஸ்
இல. 20, பெரியகடை
யாழ்ப்பாணம்
021 2222740

Rini Ads
riniads2007@gmail.com
04,Clock Tower Lane, Jaffna.
0212229212, 0776669950
Digital printing
Digital Name Boards
Digital Light Boards
3D Sign Boards
sign Cutting Stickers

காலைக்கதிர்
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவான் 18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## டுவிட்டர் பக்கத்தில் திருத்தந்தை

எல்லோருக்கும் - குறிப்பாக தேவையில் இருக்கும் நம் சகோதர, சகோதரிகளுக்கு நம்மை அர்ப்பணிப்பதன் வழியாகக் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை நாம் பின்பற்றுவோம் என்ற வார்த்தைகள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் டுவிட்டர் பக்கத்தில் வெளியாகியுள்ளன.

## ஒன்றிப்பு நோக்கிச் செல்லும் பாதையே நம்பிக்கையான வருங்காலத்தைக் கொடுக்க இயலும்

இருப்பவர் இல்லாதவரிடையே நிலவும் இடைவெளி அதிகரித்துவரும் இன்றைய சுழலில் மனித குலம் ஒன்றிப்பு நோக்கிச் செல்லும் பாதையே அமைதியான மற்றும் நம்பிக்கையான வருங்காலத்தைக் கொடுக்க இயலும் என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ்.



## நாவாந்துறைப் பங்கில் இயேசுவின் பின்னால் பறபாஸ்

# 13 ஆண்டுகளின் பின்னர் பங்குத்தந்தை அன்ரனிபாலா அடிகளாரின் வழிகாட்டலில்!





தவக்கால சிறப்பு ஆற்றுகையாக நாவாந்துறைப் பங்கில் - இயேசுவின் பின்னால் பறபாஸ் - என்னும் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி 13 ஆண்டுகளின் பின்னர் பங்குத் தந்தை அன்ரனி பாலா அடிகளாரின் வழிகாட்டலில் மண்ணின் மைந்தன் கலைஞர் எம்.என். பாலச்சந்திரன் அவர்களின் நெறிப்படுத்தலில் அண்மையில் சிறப்புற மேடையேற்றப்பட்டது.

பங்குத்தந்தை அன்ரனி பாலா அடிகளார் காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழுக்கு கருத்துத் தெரிவிக்கையில், 1978 ஆம் ஆண்டு 'பறபாஸ்' என்ற பெயரில் நாவாந்துறையில் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி மேடை ஏற்றப்பட்டது. அதன் பின்னர் 2004 ஆம் ஆண்டு கல்வாரி கண்ட கடவுள் என்னும் பெயரில் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி மேடை ஏற்றப்பட்டது என்றார்.

சிறப்புரை வழங்கிய மண்ணின் மைந்தன் செபமாலைத் தாசர் சபையைச் சேர்ந்த ஏ.ஸ்ரீபன் அடிகளார் இது போன்ற நிகழ்வுகள் பங்கு மக்களை ஒன்றுபடுத்தி விசுவாசத்தில் உறுதிப்படுத்துகிறது என்றார்.

எழுத்துருவாக்கம் - தயாரிப்பு - நெறியாள்கை என்பவற்றை மேற்கொண்ட மண்ணின் மைந்தன் கலைஞர் எம்.என். பாலச்சந்திரன் அவர்கள், யாழ். ஆயர் பெயரால் யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் கலாநிதி ப.யோசவ்தாஸ் ஜெபரட்ணம் அடிகளாரால் பொன்னாடை போர்த்தி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

## கியூடெக் - கரித்தாஸ் நிறுவனமும் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வில்



சுகாதார வாரத்தை முன்னிட்டு மார்ச் மாதத்தில் யாழ். பிரதேசம் முழுவதும் சுகாதார வார விழிப்பூட்டலை கியூடெக் - கரித்தாஸ் நிறுவன இயக்குநர் எஸ்.இயூஜீன் பிரான்சிஸ் அடிகளாரின் பணிப்புரையில் யாழ். மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் தலைமையில் டெங்கு ஒழிப்புக்கான விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டது. யாழ். மாநகரசபை உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர் மற்றும் சுகாதாரப் பகுதியினருடன் ஒன்றிணைந்து கியூடெக் - கரித்தாஸ் நிறுவன உத்தியோகத்தர்களும் தொண்டர்களும் ஒன்றிணைந்து பொது இடங்கள் மற்றும் குடியிருப்பு இல்லங்கள் தோறும் டெங்கு ஒழிப்பு பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

## கல்வி இராஜாங்க அமைச்சரும் யாழ். ஆயரும் சந்திப்பு



யாழ்ப்பாணம் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகைக்கும் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் அவர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்தில் நடைபெற்றது. இதன் போது வட மாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பாக முன்னெடுக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

## உண்மையின் எண்ணங்கள்

### புனித வாரத்தில் இறைவனின் கொடைகளை அசைபோடஅழைக்கும் திருத்தந்தை

இன்று ஒருநாள் தொலைக்காட்சி வானொலி செய்தித்தாள் என்ற எதையும் நாடாமல் 5 அல்லது 10 நிமிடங்கள் தனித்திருந்து இறைவன் வழங்கிய கொடைகளை, வாக்குறுதிகளை அ... உங்களை அழைக்கிறேன் என்று தி...ரான்சிஸ் அவர்கள் சிறப்பு அழைப்பு ...ர். தீமைகள் நம்மைச் சூழும்போது ...ன பற்றுறுதியை நினைவு கூர்ந்தால் ...ழ முடியும். இறைவன் நமக்காக ...ம் அதிசயங்களுக்கு நம் மனதைத் ...திருக்க நம்பிக்கை உதவுகிறது என ...் தெரிவித்துள்ளார். புனித வாரத்தில் ...த்தந்தை பிரான்சிஸ் அவர்களின் ...ற்று முயற்சிப்போமா?

## மக்கள் தொடர்புத் துறையில் கிறிஸ்தவராகப் பணியாற்றுவது சவால் நிறைந்தது

மக்கள் தொடர்புத்துறையில் கிறிஸ்தவராகப் பணியாற்றுவது சவால் நிறைந்தது என்று ஆசிய கிறிஸ்தவ செய்தியாளர்கள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

சிக்னீஸ் என்ற உலக கத்தோலிக்க மக்கள் தொடர்பு கழகம் மலேஷியாவில் நடத்திய கூட்டத்தில் கலந்து கொண்ட 13 ஆசிய நாடுகளின் ஏறக்குறைய இருபது செய்தியாளர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

மலேஷிய கிறிஸ்தவ சபைகள் அவையின் மையத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய, பாகிஸ்தான் நாட்டு கத்தோலிக்க செய்தியாளர் ஒருவர் பொதுவில் கத்தோலிக்க இதழ்களை விற்கும் போதும் அடக்கு முறை பற்றிய நிகழ்வுகளை வெளியிடும் போதும் தனது பெயரைக் குறிப்பிட முடிவதில்லை என்று கூறினார்.

சிறுபான்மை மதங்களைச் சார்ந்த ஊடகத்துறையினர் தங்களின் பணிகளை ஆற்றுகையில் தடைகளை எதிர்கொள்கின்றனர் எனவும் அந்தச் செய்தியாளர் தெரிவித்தார். கிறிஸ்தவராக இருப்பதால் மக்கள் தொடர்புத் துறையில் பெரும் சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று செய்தியாளர்கள் இந்தக் கூட்டத்தில் பிரஸ்தாபித்தனர்.



## பிரித்தானிய இளவரசருடன் திருத்தந்தை

யாற்றுகின்றவர்கள் ஒப்புரவு மற்றும் சந்திப்பு கலாசாரத்தை ஊக்குவிக்க வேண்டும்

வேல்ஸ் இளவரசர் சார்ள்ஸ் மற்றும் அவரின் துணைவியார் கமில்லா ஆகிய இருவரையும் வத்திக்கானின் ஆறாம் பவுல் அறையில் சந்தித்து உரையாடினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

திருத்தந்தையைச் சந்தித்த .பின் திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்களையும் இந்த அரசகுலத் தம்பதியினர் சந்தித்து உரையாடினர்.

சுற்றுச் சூழல் விவகாரம் குறித்து இந்தச் சந்திப்புக்களில் கருத்துப் பரிமாற்றங்கள் இடம் பெற்றன என்று திருப்பீடச் செய்தித் தொடர்பகம் கூறியது.

அரசகுலத்தம்பதியினரோடு வந்திருந்த, பிரித்தானிய வெளியுறவு அமைச்சகத்தின் ஐரோப்பா மற்றும் ஆசிய விவகார அலுவலக அமைச்சர் சேர்ஆலன்டுன்கன் அவர்களும் இந்தச் சந்திப்புகளில் கலந்து கொண்டார்.

ஊடகத்துறையில் பணியாற்றுவோர் ஒப்புரவு மற்றும் சந்திப்பு கலாசாரத்தை ஊக்குவிக்கும் கருவிகளாகச் செயற்படுமாறு ஊடக சுதந்திரம் என்ற தலைப்பில் நடைபெற்ற ஐரோப்பிய கூட்டமொன்றில் திருப்பீட உயர் அதிகாரி ஒருவர் கேட்டுக் கொண்டார். ஊடகத்துறையினர் உட்பட எல்லாருக்குமே வாழ்வு எப்பொழுதும் எளிதாக அமைவதில்லை எனவும் ஆயுத மோதல்கள் போன்ற கடினமான சுழல்கள் பற்றி செய்திகள் கொடுக்கும்போது ஊடகத்துறையினர் சவால்களை எதிர்கொள்கின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஊடகங்களில் பணியாற்றுகின்றவர்கள் பொது நலனைக் கட்டியெழுப்புவதற்கும் ஒப்புரவுப் பாதையை ஊக்குவிப்பதற்கும் உதவுபவர்களாகப் பணியாற்றுமாறு திருத்தந்தை கேட்டுக் கொண்டுள்ளமையையும் அவர் குறிப்பிட்டுப் பேசினார்.

பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர், 891 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0777165147, info@tcnlnet.com

● முருகபூபதி - ஆஸ்திரேலியா

# இலங்கையில் பாரதி

21

இலக்கியம் மக்களிலிருந்து, சமுதாயத்திலிருந்து, வாழ்விலிருந்து பிரிந்து மனோரம்மிய கற்பனைகளில் புதைந்து நிற்கவேண்டும் என்ற போலித்தனத்தை எதிர்த்து எரிசரமாக முன்வந்த நாம், இலக்கியம் மக்களை, அவர்களின் வாழ்வை, வாழ்க்கைப்போராட்டத்தைப் பிரதிபலிக்கவும், அதை முன்னெடுத்துச்செல்லவும் வேண்டும் என்றோம். இலக்கியத்தின் சமூகக் கடப்பாட்டையும் எழுத்தாளனின் சமுதாயப் பிரக்ஞையையும் வலியுறுத்தினோம்.

''இன ஒதுக்குதலையும் இனப்பாகுபாட்டையும் எதிர்த்து முகிழ்ந்த தமிழ்த்தேசியத்தின் ஜனநாயக அம்சக்கூறுகளுக்கு நாங்கள் எப்பொழுதும் ஊசலாட்டமற்ற ஆதரவைத் தெரிவித்து வந்திருக்கிறோம். ஆனால், அதே நேரத்தில் இனப்பாகுபாட்டை எதிர்த்த போராட்டம் சமூக ஒடுக்குமுறைகளை எதிர்த்த பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்தினதும், சமுதாய மாற்றத்திற்கான தேசிய - ஜனநாயக இயக்கத்தினதும் வரம்புக்குள் நடைபெறவேண்டும் என்றும், இந்த தேசிய - சர்வதேசியப்பேரியக்கத்தின் ஒரு கூறாக அது அமைய வேண்டும் என்றும் வலியுறுத்தி வந்துள்ளோம்.''



மேற்குறிப்பிட்ட வரிகளை இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 1996 ஆம் ஆண்டு ஜூலை மாதம் கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடத்திய இலக்கியப் பேரரங்கில் வெளியிட்ட புதுமை இலக்கியம் சிறப்பு மலரில் சங்கத்தின் பொதுச் செயலாளர் பிரேம்ஜி ஞானசுந்தரன் எழுதியிருந்தார்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 1954 ஆம் ஆண்டு கொழும்பில் உதயமாகியது. இலங்கையில் வடக்கு, கிழக்கு உட்பட தென்னிலங்கையிலும் மலையகத்திலும் அதன் கிளைகள் இயங்கின. ஐந்து தசாப்த காலம் செயலூக்கமுடன் பல்வேறு கலை, இலக்கியப்பணிகளை முன்னெடுத்த இச்சங்கம் காலப்போக்கில் செயலிழந்தமை துர்ப்பாக்கியமாகும். இதிலிருந்த மூத்த உறுப்பினர்களின் மறைவு, சில உறுப்பினர்களது புலப்பெயர்வு முதலான இன்னபிற காரணங்களினால் அதன் பணிகள் முடங்கிப்போனாலும், இலங்கையில் அரைநூற்றாண்டு காலம் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கும் தமிழ்த்தேசிய சிந்தனைகளுக்கும், இன ஒற்றுமைக்கும் உந்து சக்தியாகவே விளங்கியது.

இச்சங்கம் மேற்கொண்ட பல அரிய செயல்களை இளங்கீரன் எழுதிய அதன் வரலாற்று நூலிலிருந்தும் (ஈழத்து முற்போக்கு இலக்கியமும்



இயக்கமும்) புதுமை இலக்கியம் இதழ்கள் மற்றும் சிறப்பு மலர்களிலிருந்தும் அறிந்து கொள்ள முடியும்.

1956 ஆம் ஆண்டு இலங்கையில் நாடளாவிய ரீதியில் பாரதி விழாக்களை நடத்தியிருக்கும் இச்சங்கத்தில் கே.கணேஷ், அ.ந. கந்தசாமி, சி.வி.வேலுப்பிள்ளை, பேராசிரியர்கள் கைலாசபதி, சிவத்தம்பி, தில்லைநாதன், நுஃமான், மௌனகுரு, சபா. ஜெயராஜா, கவிஞர்கள் பசுபதி சுபத்திரன், சில்லையூர் செல்வராஜன், இ.முருகையன், இ. சிவானந்தன், சாருமதி, மற்றும் படைப்பாளிகள் இளங்கீரன், கே. டானியல், டொமினிக் ஜீவா, சோமகாந்தன், செ.கதிர்காமநாதன், செ.கணேசலிங்கன், என்.கே.ரகுநாதன், எச்.எம்.பி. மொஹிதீன், முகம்மது சமீம், பத்மா சோமகாந்தன், மருதூர்க்கொத்தன், மருதூர்க்கனி, ஏ. இக்பால், காவலூர் இராஜதுரை, தெணியான், செ.யோகநாதன், யோ.பெனடிக்ற்பாலன், மு. கனகராஜன், சாந்தன், ராஜஸ்ரீகாந்தன், முருகபூபதி, அந்தனிஜீவா, திக்குவல்லை கமால், மேமன் கவி, ஆப்தீன், கே. விஜயன் உட்பட பலர் அங்கம் வகித்தனர். இச்சங்கத்தில் நான்கு தலைமுறைகளைச் சேர்ந்த படைப்பாளிகள் இயங்கினர். இவர்களில் சிலர் இன்று எம்மத்தியில் இல்லை. இவர்கள் அனைவரும் பாரதியின் கருத்தியல்களின் பாதிப்புக்குட்பட்டவர்களே.

இவர்களின் படைப்புகளில் பாரதி நீக்கமற நிறைந்திருந்தார். சிலர் பாரதி தொடர்பாகவே நூல்களையும் கட்டுரைகளையும், ஆய்வுகளையும் எழுதியிருக்கின்றனர்.

1954 இல் தொடங்கி இரண்டு வருடங்களில் நாடளாவிய ரீதியில் பாரதிக்கு விழா நடத்திய இச்சங்கம், பாரதி



நூற்றாண்டு காலகட்டத்திலும் நாடெங்கும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தது.

பாரதியின் பிறந்த தினம் 11-12-1882. அவரது நூற்றாண்டு காலம் ஆரம்பமானதும் 12-12-1981 ஆம் திகதி கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் பாரதி நூற்றாண்டுக் கொண்டாட்டத்திற்கான முதலாவது நிகழ்ச்சி தொடங்கியது.

இன்று கொழும்பு தமிழ்ச் சங்கமும் தனது பவளவிழாக் காலத்தைக் கொண்டாடுகிறது.

இ.மு. எ.சங்கத்தினால் அமைக்கப்பட்ட தேசியக் குழுவில், நூற்றாண்டு விழாக் குழு, நூல் கண்காட்சிக்குழு, எழுத்தாளர் ஒளிப்படக்கண்காட்சிக்குழு, மகளிர் குழு என்பனவும் உருவாக்கப்பட்டன.

தேசியக்குழுவில் எழுத்தாளர்கள் மாத்திரமன்றி, நீதியரசர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், பொதுசனத்தொண்டர்கள், பெண்ணிய செயற்பாட்டாளர்கள், கல்வித்துறை சார்ந்த அறிஞர்கள்




பலரும் இணைந்திருந்தனர்.

மேற்குறிப்பிட்ட திகதியில் பாரதிநூற்றாண்டு விழாக் குழுத்தலைவர் நீதியரசர் எச்.டபிள்யூ. தம்பையா தலைமையில் நடந்த முதல் விழாவில் யோகா பாலச்சந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இவ்விழாவில் யாழ். பல்கலைக்கழகத்தின் அன்றைய துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனும் சிங்களக் கலைக் களஞ்சியத்தை உருவாக்கிய பேராசிரியர் டி.ஈ. ஹெட்டியாராய்ச்சியும் தொடக்கவுரை நிகழ்த்தினர். சங்கத்தின் பொதுச்செயலாளர் பிரேம்ஜி ஞானசுந்தரன் நூற்றாண்டு தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் அன்றைய காலகட்டத்தின் தலைவர் பொ. சங்கரப்பிள்ளை பாரதியின் படத்தை திரை நீக்கம் செய்துவைத்தார். சங்கத்தின் வெள்ளிவிழா மலரை அதன் ஆசிரியர் சோமகாந்தன் அறிமுகம் செய்து வைக்க, மருத்துவர் திருமதி இந்திரா சிவயோகம் வெளியீட்டுரையையும் 'தினகரன்' ஆசிரியரும் உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தலைவருமான இ. சிவகுருநாதனும் இளங்கீரனும் மலர் பற்றிய ஆய்வுரையை நிகழ்த்தினர்.

கவிஞர் இ.முருகையன் தலைமையில் நடந்த கவியரங்கில் சில்லையூர் செல்வராசன், ஏ.பி.வி.கோமஸ், கலைவாதி கலீல், மேமன்கவி ஆகியோர் இடம்பெற்றனர். சொக்கன் நிகழ்ச்சிக்கு வர முடியாத நிலையில் த. கனகரத்தினம் அவரது கவிதையை சமர்ப்பித்தார்.

குறிப்பிட்ட பாரதி நூற்றாண்டு அங்குரார்ப்பண விழா இசைக்கலைஞர்கள் எஸ்.கே. பரராஜசிங்கம், எம்.ஏ. குலசீலநாதன், வசந்தி சண்முகம் ஆகியோரின் பாரதி பாடல் இன்னிசைவிருந்துடன்நிறைவு பெற்றது. சபா.ஜெயராஜா நன்றியுரை வழங்கினார்.

முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை பாரதி வெகுவாகப் பாதித்திருந்தமையால், பாரதியின் சிந்தனைகளை அடியொற்றி இதர நூற்றாண்டு ஆளுமைகளையும் நினைவு கூர்ந்த நிகழ்ச்சிகளும் அக்காலப்பகுதியில் நடந்தன.

உலகப்புகழ்பெற்ற ஓவியர் பிக்காஸோ, எழுத்தாளர் லூசுன், தமிழ்ச்சிறுகதை முன்னோடி வ.வே.சு. அய்யர், பண்டிதமணி கதிரேசன் செட்டியார் ஆகியோரின் நூற்றாண்டுகளையும் நினைவுகூர்ந்து 31-01-1982 இல் ஒரு கருத்தரங்கை தமிழ்ச்சங்க மண்டபத்தில் சங்கம் நடத்தியது.

கி. இலஷ்மண அய்யர், என். சண்முகரத்தினம், பேராசிரியர் எஸ். தில்லைநாதன், ஓவியர் செள ஆகியோர் உரையாற்றிய இக்கருத்தரங்கிற்கு சமூகப்பணியாளர் வே. கணபதிப்பிள்ளை தலைமை தாங்கினார்.

முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்யும்போது, **''இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண்விடல்''** என்னும் திருவள்ளுவர் வாக்கை கவனத்தில் எடுத்தே பணிகளை முன்னெடுத்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

யார்யாரிடம் பொறுப்புக்களை ஒப்படைக்கவேண்டும் என்பதில் தீர்க்கதரிசனமும் அனுபவமும் கொண்டிருந்தவர் செயலாளர் பிரேம்ஜி. சங்கத்தின் உறுப்பினர்களிடம் புரிந்துணர்வை பேணுவதற்காகவும் அனைவரையும் அரவணைத்து இயங்கியவர். அதனால் அவர் தான் நீண்ட காலம் சங்கத்தின் பொதுச்செயலாளராக பணியாற்றினார்.

தொடர்பாடலில் அவருக்கிருந்த அனுபவம் சங்கத்தின் பணிகளை தொடர்ச்சியாக முன்னெடுக்க வழிகோலியது. அவர் கனடாவுக்குச்சென்று அங்கு மறைந்தார். அவரதும் சங்கத்தினதும் இதர மூத்த உறுப்பினர்களினதும் மறைவும் சங்கத்திற்கு மாத்திரமல்ல ஈழத்து தமிழ்த்தேசிய இலக்கியத்திற்கும் பேரிழப்பே.

சங்கத்தின் பா. நூ. தேசியக்குழுவும் சோவியத் கலாசார இல்லமும் இணைந்து 28-02-1982 இல் மற்றும் ஒரு கருத்தரங்கை சோவியத் கலாசார இல்லத்தில் நடத்தியது.

நீதியரசர் வி. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில், பிரேம்ஜி



ஞானசுந்தரன் **''பாரதியும் ஒக்டோபர் புரட்சியும்''** என்னும் தலைப்பிலும் பேராசிரியர் கா. சிவத்தம்பி **''பாரதிக்குப்பிற்பட்ட தமிழ் இலக்கியத்தில் ஒக்டோபரின் செல்வாக்கு''** என்னும் தலைப்பிலும் உரையாற்றினர்.

கருத்தரங்கின் இறுதியில் முற்போக்கு இலக்கியத்தின் பிதாமகர் மக்ஸிம்கோர்க்கியின் வாழ்க்கையை சித்திரித்த ஆவணப்படம் காண்பிக்கப்பட்டது.

பெண்விடுதலைக்காக தனது வாழ்நாளிலேயே குரல் கொடுத்த பெண்ணியச் சிந்தனையும் கொண்டிருந்த பாரதிக்காக முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினால் அமைக்கப்பட்ட மகளிர் அமைப்பினால் 27-03-1982 ஆம் திகதி கொழும்பு கொள்ளுப்பிட்டியில் அமைந்த கல்விக்கூட்டுறவு மண்டபத்தில் முழுநாள் கருத்தரங்கு நடைபெற்றது. செல்வி என். காசிப்பிள்ளை, பத்மா சோமகாந்தன், மருத்துவர் இந்திரா சிவயோகம், வி.ரி.வி ஈஸ்வரன் ஆகியோர் உரையாற்றினர்.

கல்வி அமைச்சின் அதிகாரி கலாநிதி செல்வி சிரோன்மணி இராசரத்தினம், **பாரதியின் பாங்கையில் பெண்கள் - சிறுவர்கள்** என்ற தலைப்பிலும், சித்திரலேகா மௌனகுரு, **பாரதியும் மாதர் விடுதலையும்** என்னும் தலைப்பிலும் உரையாற்றினர்.

பிற்பகலுக்குப் பின்னர் பம்பலப்பிட்டி மிலாகிரிய சென். போல்ஸ் மண்டபத்தில் பாலம் லஷ்மணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் திருமதி வி. பி. கணேசனின் வரவேற்புரையுடன் தொடங்கின.

வெள்ளவத்தை சைவமங்கையர் கழக பாடசாலை மாணவர்களும், கொழும்பு விவேகானந்தா கல்லூரி மாணவர்களும் கலந்துகொண்ட பாரதி பாடல் இன்னிசை அரங்கும் இடம்பெற்றது.

இதனையடுத்து நடந்த கதையரங்கில் எழுத்தாளர்கள் அருண். விஜயராணி, வள்ளிநாயகி இராமலிங்கம், அன்னலட்சுமி இராஜதுரை, பத்மா சோமகாந்தன் ஆகியோர் தத்தம் கதைகளை வாசித்து சமர்ப்பித்தனர்.

(18 ஆம் பக்கம் பார்க்க)



தங்கமுலாம் பூசப்பட்ட அந்தப் புகைப்பட சட்டம் 160 மீற்றர் உயரத்திலும் 93 மீற்றர் அகலத்திலும் அமைக் கப்பட்டுள் ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

# 670 கோடி ரூபா செலவில் டுபாயில் புகைப்பட சட்டகம்

## சுற்றுலாப் பயணிகளின் வருகையை எதிர்பார்த்து

சுற்றுலாப்பயணிகளைக் கவர்வதற்காக சுமார் 670 கோடி ரூபா செலவில் டுபாய் நகரின் மத்தியில், அரைப்பகுதி ஈபிள் கோபுரத்தின் உயரத்தை ஒத்த தங்க முலாம் பூசப்பட்ட புகைப்பட சட்டகம் ஒன்றை டுபாய் அரசு அமைத்துள்ளது.


தங்க முலாம் பூசப்பட்ட அந்தப் புகைப்பட சட்டம் 160 மீற்றர் உயரத்திலும் 93 மீற்றர் அகலத்திலும் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


மேலும், நகரின் முழுத் தோற்றத்தையும் பிரதிபலிக்கும் வகையில் அந்தப் புகைப்பட சட்டகம் அமைக்கப்பட்டுள்ளது. பழைய வடக்கு டுபாய் மற்றும் புதிய தெற்கு டுபாய் உள்ளிட்ட இரு நகர்ப் பகுதிகளின் தோற்றம் முழுமையாக அந்த சட்டகத்துக்குள் புகைப்படமாக அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சுற்றுலாப்பயணிகளை ஈர்ப்பதற்காக டுபாய் மாநகர சபையால் வடிவமைக்கப்பட்டுள்ள அந்தப்புகைப்பட சட்டகத்தினூடாக வருடமொன்றுக்குச் சுமார் 20 லட்சம் சுற்றுலாப் பயணிகளை எதிர்பார்ப்பதாக மாநகர சபை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அதிசய ஆமை

## 2 தலைகள், 6 கால்கள் சீனாவில்





இரண்டு தலைகளும் 6 கால்களும் உடைய அபூர்வ ஆமை ஒன்று சீனாவிலுள்ள செல்லப் பிராணிகள் விற்பனை நிலையத்திலே கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

வட சீனாவின் சாங்க்சி மாகாணத்திலுள்ள செல்லப் பிராணிகள் விற்பனை நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த ஆமை, ஆறு கால்கள் மற்றும் 2 தலைகளுடன் இருந்தாலும் சாதாரண ஆமைகளைப் போல் உணவுகளை உட்கொண்டு இயல்பான இயக்கத்தை வெளிப்படுத்துவதாக சாங்க்சி மருத்துவம் மற்றும் வாழ்வியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும், அந்த ஆமை பிறந்து இரண்டிலிருந்து 3 மாதங்களே ஆகும். மரபியல் ஏற்பட்ட மாற்றங்களே அதன் உடற்கூறு பரிணாமிப்பதில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நண்பியைக் கரம்பிடிக்க துறவறத்தை துறந்தார் லாமா தலைவர்!

திபெத்தின் பிரபலமிக்க லாமா தலைவர், தனது நீண்ட கால நண்பியைத் திருமணம் செய்து கொண்டு துறவறத்தைத் துறந்தமை திபெத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தாயே டோர்ஜே (வயது 33) என்ற இந்த லாமா சிறு வயது முதலே துறவறத்தைக் கடைப்பிடித்து வந்தவர். திபெத்தின் மிக முக்கியமான பௌத்த பாடசாலையை ஆரம்பித்த கர்மபா லாமாவின் மறு அவதாரம் என்று தாயே டோர் ஜேவை திபெத்தியர்கள் குறிப்பிடுவர்.


இந்த நிலையில், இவ்வளவு சிறப்புக்கள் கொண்ட டோர்ஜே, தனது நீண்ட கால நண்பியான ரின்ச்சென் யேங்சம் (வயது 36) என்ற பூட்டானியப் பெண்ணை கடந்த 25ஆம் திகதி திருமணம் செய்து கொண்டார். இதற்காக டோர்ஜே துறவறத்தைத் துறந்து விட்டார் என்று டோர்ஜேயின் மடம் உத்தியோகபூர்வமாக அறிவித்தது. இதை அறிந்த திபெத்தியர்கள் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாயினர்.

தனது இந்த முடிவு பற்றிக் கருத்துத் தெரிவித்திருக்கும் டோர்ஜே, நான் எடுத்திருக்கும் இந்த முடிவு எனக்கு மட்டுமன்றி, எனது பரம்பரைக்கே மிகுந்த நன்மையைத் தரப்போகிறது என்று நம்புகிறேன். அனைவருக்கும் பலன் பெறக்கூடியவகையில் அழகான ஏதோவொன்று நடைபெறப் போகிறது என்று நம்புகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

தனது ஒன்றரை வயது முதலே தான்தான் கர்மபா லாமா என்றும், தான் விட்டுச் சென்ற பணிகளை முடிப்பதற்காக மறுபடியும் அவதாரம் எடுத்திருப்பதாகவும் கூறி வந்தவர் டோர்ஜே. அவரது மறு அவதாரத்தை உறுதிசெய்த திபெத்திய லாமாக்கள் அவரை வணங்க ஆரம்பித்தனர்.

இந்நிலையில் டோர்ஜே துறவறத்தை விட்டுவிலகி இல்லறத்துக்கு மாறியிருப்பது தம்மை ஆச்சரியத்துக்கு மட்டுமன்றி அதிர்ச்சிக்கும் உள்ளாக்குகிறது என்று கூறியுள்ளனர் திபெத்தியர்கள்!





# உலகிலேயே முதன்முதலாக கப்பல் சுரங்கப்பாதை நோர்வேயில்

உலகிலேயே முதன்முதலாக கப்பல் போக்குவரத்துக்காக 315 மில்லியன் டொலர் (ஏறக்குறைய 47 ஆயிரம் கோடி ரூபா) செலவில் சுரங்கம் ஒன்றை அமைக்க நோர்வே திட்டமிட்டுள்ளது.

நோர்வேயின் மேற்குப் பகுதியில் ஸ்டாட் தீபகற்பம் உள்ளது. இது, நோர்வேயின் மிக அபாயகரமான கடற்கரைப் பகுதியாகக் கருதப்படுகிறது.

அந்தப்பகுதியின் பௌதிக அமைவின் படி, காற்று எத்திசையில் இருந்து வீசும் என்பதை எதிர்வுகூற முடியாது. மேலும், ஒரே நேரத்தில் பல திசைகளில் இருந்தும் கடும் காற்று வீசும். இதனால், ஸ்டாடவட் என்று சொல்லப்படும் இந்தக் கடற்பகுதியின் சகல திசைகளில் இருந்தும் பேரலைகள், கடற்சுழிகள் என்பன தோன்றும்.

ஒரு நாள், இரண்டு நாள்கள் என்று அல்லாமல் ஏறக்குறைய வருடத்தின் அரைவாசி நாள்களில் இதேபோன்ற கடுமையான கால நிலையே நிலவும். இதனால், அந்தப் பகுதியூடாகப் பயணிக்க வேண்டிய கப்பல்கள் கால நிலை சீராகும் வரை பல நாள்கள் கடலிலேயே காத்திருக்க வேண்டியிருக்கும்.

இந்தக் கால விரயத்தைத் தவிர்ப்பதன் மூலம் அந்தப்பகுதி வழியான கடல் போக்குவரத்தைச் சுமுகமாக்குவதன் மூலம் தேசிய வருமானத்தை அதிகரிக்க நோர்வே எண்ணியுள்ளது. இதற்காக, அந்தப் பகுதியின் சுமார் 8 மில்லியன் தொன்கள் எடையுள்ள பாறையைக் குடைந்து இந்தச் சுரங்கம் அமைக்கப்படவுள்ளது.

ஒரு மணித்தியாலத்தில் 5 கப்பல்கள் வரை இந்தச் சுரங்கம் வழியாகப் பயணிக்க முடியும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தத்திட்டம், 2023ஆம் ஆண்டளவில் பூர்த்தியாகும் என்று நம்பப்படுகிறது.

# ஊர்வம்பு

■ குருவியார்
thamizhkaalaikathir@gmail.com

சந்தியடியில் வாத்தியாரும் ஏரம்பரும் முன்னதாகவே வந்தமர்ந்திருந்தனர். செல்லாச்சி கச்சான் கடகத்தை அவிழ்த்து, வியாபாரத்தைத் தொடங்குவதில் மும்முரமாக இருந்தாள்.

அப்போது தூரத்தில், ஜீவனும் ரூபனும் யாருடனோ பிணக்குப்படுவதைக் கண்ட ஏரம்பர், ''இவங்கள் ஏதோ பிரச்சினையைக் கொண்டு வரப்போறாங்கள்'' என்று பரபரத்தார்.

''பொறுங்கோ,அவங்கள் அப்பிடிப் பிழையாநடக்கிற பொடியள் இல்லை. அவங்கள் வந்தாப்பிறகு விசாரிச்சுப் போட்டு கதையுங்கோவன்.'' என்று சொன்னாள் செல்லாச்சி.

இதேநேரம் பிணக்கு முடித்து ஜீவனும் ரூபனும் சந்தியடிக்கு வந்து விட்டிருந்தனர். பேப்பர் தம்பியும் வரவே ஊர்வம்பு களை கட்டியது.

''யாரோடை பிரச்சினைப்பட்டனீங்கள்?''என்று கேட்டார் ஏரம்பர்.

''கடை வைச்சிருக்கிற சிவத்தார், தனக்கு ஏதோ பிரச்சினையாம். அதைப் பற்றி ஆலோசிக்க பொலிஸ்காரர் யாரையும் தெரியுமோ?'' என்று கேட்டவர். ''அதுக்குத்தான் ஜீவன் கோபப்பட்டிட்டான்.'' என்று சிரித்தபடியே நடந்ததைச் சொன்னான்.

''இதுக்கு ஏன் ஆத்திரப்படுவான், தெரியும் அல்லது தெரியாது என்று ஒன்றைச் சொல்லிப் போட்டு வரவேண்டியதுதானே'' என்றார் ஏரம்பர்.

இதற்குப் பதில் சொன்ன ஜீவன், ''பொலிஸ்காரரோடை சினேகிதம் வைச்சிருக்கவும், அவையின்ரை போன் நம்பரை விரல் நுனியிலை வைச்சிருந்து, தேவையெண்டவுடன் கூப்பிடவும், நானென்ன கள்ளர்காடையரோ?'' என்று கேட்டு விட்டு, கைபேசியில் கவனமானான்.

இதைக்கேட்டுச் சிரித்த செல்லாச்சி, ''சாதாரணமாக எங்களுக்கு ஒரு பிரச்சினையென்றால் 'எங்களைக் காப்பாற்றுங்கோ'என்று பொலிஸுக்கு அறிவிக்கிறதுதான் வழக்கம். ஆனால், இப்ப வாற கதைகளைப் பார்த்தால், பிழை விடுகிற ஆட்கள்தான், தங்களுக்குத் தெரிந்த பொலிஸாருக்கு முதலில் போன் அடிக்கினமாம்'' என்று சொன்னாள்.

''இப்படிச் சனத்தை நம்ப வைச்சிருக்கினமே தவிர, அதிலை பெரிய உண்மையிருக்கும் என்று என்னாலை நம்ப முடியாமல் இருக்கு'' என்று சொன்ன வாத்தியார், ''பேப்பர்தம்பி,நீர் என்ன சொல்லுகிறீர்?'' என்று கேட்டார்.

அதற்கு பேப்பர்தம்பி, ''இதெல்லாம் ஒருவித பெர்ஸுவேசன் (Persuasion)என்றுதான் நினைக்கிறன். அதாவது, கதையாலை நம்பவைக்கிற விசயமாகத்தான் நான் கருதுகிறன். பலவருடங்களாகப் பொலிஸ், ஆமி என்றால் நாங்கள்பயந்தேபழக்கப்பட்டிட்டம். அதை வாய்ப்பாகப் பயன்படுத்தி, பிரச்சினைவரும்போது, தொலைபேசியை எடுத்து பொலிஸிலை தங்களுக்குச் செல்வாக்கு இருக்கிற மாதிரியும், அவைக்குப் போன் செய்யிறது போலையும் நடிக்கிறவைதான் அதிகமாம். பொலிஸார் குற்றச்செயல்களை அல்லது குற்றவாளிகளைப் பற்றித் தகவல்கள் அறிய, தப்புத் தண்டா என்று திரியிற சிலரோடை கதைக்கிறது வழக்கம்தான். அதுக்காக நிலைமை மோசமாகியதாக நான் நினைக்கவில்லை.'' என்றான் பேப்பர்தம்பி.

''அப்ப கள்ளர்காடையருக்கும் பொலிஸுக்கும், தொடர்பில்லை என்று சொல்லுறியளோ?'' என்று நம்பாமல் கேட்டார் ஏரம்பர்.

''இந்தாளுக்கு சூரியன் கிழக்கிலைதான் உதிக்கிறது என்பதையே நம்பவைக்கிறது கஷ்டம். இதை எப்படி நம்பவைக்கிறது.?'' என்று கடுப்படித்தாள் செல்லாச்சி.

''அவர்நாட்டுநடப்பைத்தானே கேட்கிறார்'' என்று சொன்ன வாத்தியார், ''பொலிஸார் மீது சனத்துக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதென்றால், அவர்கள் இது பற்றி விளக்கம் ஒன்றை வெளியிடுவதுதான் நல்லது. ஆனால், அவை இதிலை கவனம் எடுப்பினமோ தெரியாது'' என்றும் சொன்னார்.

அதுவரை கைபேசியில் மூழ்கியிருந்த ஜீவன், ''தமிழகத்திலை அடுத்த முதலமைச்சராக நடிகர் ரஜினிகாந்தை ஆக்கிறதுக்கு, இந்தியப் பிரதமர் மோடி பெரும் முயற்சி எடுக்கிறாராம்'' என்று புதுக்கதை சொன்னான்.



## ரஜினியை முதலமைச்சராக்கும் மோடியின் திட்டம் பலிக்குமா?

''இவங்கள் அந்தாளை வர வேண்டாம் என்று பிரச்சினைப் படுத்தினவங்கள். இனி முதலமைச்சர் ஆகினால் எங்களுக்கு உதவுமோ தெரியாது?'' என்று அங்கலாய்த்தார் ஏரம்பர்.

''இருந்தவை எல்லோரும் உதவிசெய்து கிழிச்சிட்டினம்,இனி ரஜினி வந்துதான் இங்கை எல்லாம் .....'' என்று வார்த்தையை முடிக்காமலேயே, கோபத்தில் பொருமினாள் செல்லாச்சி.

''ரஜினிதான் பல வருடங்களாகவே அரசியலுக்கு 'வாறன், வாறன்' என்று சொல்லுறாரே தவிர, வந்தமாதிரித் தெரியவில்லை. பிறகு ஏன் நீங்கள் பதறுகிறீர்கள்?'' என்று ஏரம்பரைப் பார்த்துக் கேட்டான் ரூபன்.

''ஜீவன் சொல்வதில் விசயம் இருக்கக்கூடும்'' என்று சொன்ன வாத்தியார், கால்களை மாற்றிப் போட்டபடி.,தொடர்ந்து கதைத்தார்.

''இந்தியா முழுவதிலும், பாரதிய ஜனதாக் கட்சிக் கொடியே பறக்க வேணும் என்பதுதான் மோடியின் இலக்கு என்று கதை அடிபடுகிறது. கிட்டடியிலை வட இந்தியாவில் நடந்த தேர்தல்களின் பின்னர், அங்கு பெரும்பாலான மாநிலங்கள் பி.ஜே.பி வசமாகி விட்டன. அதனால் இப்போது தென் மாநிலங்களைக் குறிவைக்கிறார்கள் போலிருக்கிறது'' என்றார் வாத்தியார்.

''தென் மா நிலங்களில், ஆந்திராவில் மோடியின் பா.ஜ.கவுடன் கூட்டணி வைத்திருக்கும், தெலுங்கு தேசம் கட்சியின் ஆட்சி நடக்கிறது. கர்நாடகாவில் ஏற்கனவே ஐந்து வருடங்களில் மூன்று முதலமைச்சர்கள் மாற்றியாவது, மோடியின் கட்சி ஆட்சி நடத்தியிருக்கு. அதனால் அங்கு எப்பிடியாவது முட்டி மோதி ஆட்சியை மீண்டும் பிடித்து விடலாம். ஆனால், தமிழகத்தில் ஆட்சியைப் பிடிக்க பாரதிய ஜனதாக் கட்சிக்கு மூச்சு முட்டுதாம்'' என்று தமிழக நண்பர்கள் மூலம் அறிந்ததைச் சொன்னான் பேப்பர் தம்பி.

''ஆனாலும் இந்தியா முழுவதும் ஒரே கலாசாரத்தைக் கொண்டுவந்துவிட வேண்டும் என்றுதானே மோடி அரசு கங்கணம் கட்டியிருப்பதாகக் கதைக்கினம். தமிழகம் ஜல்லிக்கட்டையே கைவிடமுடியாது என்று சொன்ன பிறகு, அங்கு ஆட்சியைப் பிடிக்கிற, மோடியின் கனவு எப்பிடிப் பலிக்கும்?'' என்று கேட்டான் ரூபன்.

இதற்குப் பதில் சொன்ன பேப்பர்தம்பி, ''மற்ற மாநிலங்களில் தாங்கள் செய்யும் அரசியலுக்கும் தமிழக அரசியலுக்கும் வித்தியாசம் இருப்பதை பாரதிய ஜனதாக் கட்சி உணர்ந்திருக்கிறது. உத்தரப்பிரதேசத்தில் 'முதல்வர் வேட்பாளர் யார்?' என்பதைச் சொல்லாமலேயே ஆட்சியைப் பிடிக்க முடிகிறது. ஆட்சிக்கு வந்ததும், யோகி ஆதித்யநாத் என்ற சாமியாரை முதல்வர் ஆக்க முடிகிறது. ஆனால், தமிழகத்தில் 'இவர் தான் உங்களை ஆட்சி செய்வார்' என ஒரு முகத்தைக்காட்டாமல் தேர்தலில் வெல்வது சாத்தியமில்லை என்பதை பாரதிய ஜனதாகட்சி புரிந்துகொண்டிருக்கிறது'' என்றான்.

''அங்கே மட்டுமே.. இங்கேயும் அதுக்குத்தானே சும்மா இருந்த நீதியரசரை இழுத்துக் கொண்டு வந்து தேர்தலிலை நிப்பாட்டினவை. இப்ப 'குத்துறார், குடையிறார்' என்று குளறுகினம்'' என்று உள்குத்துக் குத்திவிட்டு, வியாபாரத்தைக் கவனித்தாள் செல்லாச்சி.

''தமிழகத்திலை ஆளும் அ.தி.மு.க. இப்ப சிதறிப்போய் இருக்கு, எதிர்க்கட்சியான தி.மு.க. குடும்பச் சண்டையிலை குழம்பிப்போய்க் கிடக்கு. ஆட்சியும் நிலையில்லாமல் இருக்கிற இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, குழம்பின குட்டையிலை மீன் பிடிக்கப் பார்க்கிறார் போலையிருக்கு மோடி'' என்று தனக்குத் தெரிந்ததைச் சொன்னார் ஏரம்பர்.

''தமிழகத்தில் பாரதிய ஜனதா வலுவாகக் காலூன்ற வேண்டுமானால், பலமான பிரமுகர் ஒருவர் தலைமை தாங்க வேண்டும், அப்படித் தலைமை தாங்கினால்தான் ஆட்சிக்கு வர முடியும் என்று நினைக்கிறாராம் பிரதமர் மோடி அந்த பிரமுகர் ரஜினிதான் என்றும் நம்புகிறாராம்.'' என்று சொன்னான் பேப்பர்தம்பி.

''ரஜினிதான் அரசியலுக்கு வரத் தயக்கம் காட்டுகிறாரே'' என்றான் ரூபன்.

''அதுக்கும் காரணம் இல்லாமல் இல்லை. 1996ஆம் ஆண்டு கருணாநிதியும் மூப்பனாரும் சேர்ந்து கூட்டணி அமைச்சுத் தேர்தலில் போட்டியிட்ட போது, ரஜினி அவர்களுக்காகக் குரல் கொடுத்தார். அந்தக் கூட்டணியும் அமோக வெற்றி பெற்றது. அந்த வெற்றிக்கு ரஜினி குரல் கொடுத்ததுதான் காரணம் என்று ஒரு நம்பிக்கை பரவியது. ஆனால், அடுத்த தேர்தலில் ரஜினியின் குரல் மதிப்பிழந்து, மீண்டும் அ.தி.மு.க. வென்று, ஜெயலலிதா முதலமைச்சரானார். ஆகசனம் வெறுத்து முதலே ஜெயலலிதாவை துரத்த வேணும் என்று முடிவெடுத்த பிறகுதான் இவர் குரல் கொடுத்தவரே தவிர, இவர் சொன்னதைக் கேட்டு சனம் வாக்களித்ததாக சொல்ல முடியாது என்று ஒரு விமர்சனம் இருக்காம். இது ரஜினியை கனக்க யோசிக்க வைக்குதாம்'' என்று சொன்னான் ஜீவன்.

''இங்கேயும் சனம் முடிவெடுத்தாப் பிறகு, அதையே தாங்கள் சொல்லித்தான் சனம் அப்பிடி செய்தது என்று மார் தட்டுறவையை பார்க்கிறம்தானே'' என்றாள் செல்லாச்சி.

''இதிலை இன்னொரு விசயமும் இருக்கு. எம்.ஜி.ஆர்., நடிகராக இருக்கும்போதே அரசியலில் இறங்கிவிட்டார். அதனால், அவரது ரசிகர்களும் ஒரே கட்சியாகவே இருந்தனர். ஆனால், இன்று ரஜினிக்கு பல கட்சிகளில் இருந்தும் ரசிகர்கள் இருக்கின்றனர். அவர்கள் அந்தக் கட்சிகளை விட்டு, இவருக்குப் பின்னால் வருவினமா என்பது கேள்விக் குறியாம்'' என்றான் ரூபன்.

அதனைத் தலையாட்டி ஏற்றுக் கொண்ட வாத்தியார், ''இப்ப ரஜினி அரசியலுக்கு வரவேணும் என்று சொல்லுகின்ற பலரும், நாடு நல்லா இருக்க வேணும் என்று நினைக்கினமோ, அல்லது இவரை வைச்சு தாங்கள் நல்லா வந்திட வேணும் என்று நினைக்கினமோ? என்று ஒரு கேள்வி இருக்கெல்லே. எம்.ஜி.ஆர். முதலமைச்சரானமை முதல் ஒரு வருடம்தானாம் ஊழலற்ற ஆட்சியைக் கொடுக்க முடிஞ்சது. அதுக்குப் பிறகு சுற்றி இருக்கிறவையை கட்டுப்படுத்த முடியாமல் போச்சுதாம். இதுவும் ரஜினியை பயமுறுத்துதோ என்னவோ'' என்றார் ஏரம்பர்.

''இங்கேயும் அதனால்தான் வெளியிலை வந்து தனிக் கட்சி நடத்த, வயசிலை மூத்தவை தயங்குகினம் போலை இருக்கு'' என்றாள் செல்லாச்சி.

''ஏற்கனவே ரஜினியிடம் கதைக்க மோடி தூதுவர்களை அனுப்பினாராம். அவர்களும் ரஜினி மனதைக் கரைக்கப் பிரயத்தனப்பட்டிச்சினமாம். ஆனால் ரஜினி, 'தமிழகத்தில் அரசியல் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது என்பது உண்மைதான். அதற்காக நான் அரசியலுக்குள் வரமுடியாது. எனக்கு அந்த எண்ணமும் இல்லை. அதற்கு என் உடலும் ஒத்துழைக்காது. இரண்டு, மூன்று படங்களை ஒத்துக் கொண்டு இருப்பதால், அவற்றை முடிக்கவே இரண்டு, மூன்று ஆண்டுகள் ஆகி விடும்' என்று சொல்லி இருக்கிறாராம்.'' என்றான் பேப்பர்தம்பி.

''இப்பிடியான ஆக்களிலை இதுதான் பிரச்சினை....வலு வீச்சா வெளிக்கிடுவினம், சரி ஏதோ பெரிசா செய்யப் போகினம் என்று நாங்கள் நினைக்கும் போது, அப்பிடியே பின்வாங்குவினம்'' என்று சொன்னாள் செல்லாச்சி.

''சரி, கடைசியா என்னதான் முடிவாம்?'' என்று கேட்டார் ஏரம்பர்.

''தமிழகத்துக்கு என்று தனித் திட்டத்தையே உருவாக்கி வைத்துள்ளதாம் பாரதிய ஜனதாக் கட்சி. அதன்படி முதலில் ரஜினியை நேரடியாகக் களத்தில் இறக்காமல், அவரை வைத்து ஒரு சேவை அமைப்பை ஏற்படுத்தச் சொல்லி இருக்கிறார்கள். கொஞ்ச நாள்களில், அந்த அமைப்பின் கீழ் ரஜினி ரசிகர் மன்றங்களை ஒன்றிணைக்கச் சொல்வார்கள். அந்த அமைப்பைக் கொஞ்சம் கொஞ்சமாக பாரதிய ஜனதாக் கட்சிக்கு ஆதரவாகக் கொண்டுவந்து, கடைசியாக கட்சியோடு இணைப்பது என்ற திட்டத்தைச் சொல்லி இருக்கிறார்களாம்'' என்று - தன்னுடைய தமிழக நண்பர்கள் சொன்னதை - சொன்னான் பேப்பர்தம்பி.

''இதுக்கு ரஜினியின் பதில்தான் என்னவாம்?'' என்று கேட்டான் ரூபன்.

''விரைவில் இமயமலை செல்லும் திட்டத்திலும் ரஜினி உள்ளாராம். அங்கு போய் வந்தபிறகுதான் எந்த முடிவையும் எடுப்பார் என்கிறார்கள், அவருக்கு நெருக்கமான திரையுலக சகாக்கள்'' என்றான் பேப்பர்தம்பி..

''ரஜினி கடைசிவரைக்கும் கழுவிற மீனிலை,நழுவிற மீனாகவே இருந்து விட்டால், மோடி என்ன செய்வாராம்?'' என்று கேட்டார் ஏரம்பர்.

''அவைக்கு எப்பிடியும் ஒரு திரையுலகப் பிரபலம்தான் தேவையாம். நடிகர்கள் கமல்ஹாசன், விஜய் என்று யாரையாவது வளைக்க நினைக்கிறார்கள். விஜய் ஏற்கெனவே, நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில் மோடியைப் பார்த்தார். பா.ஜ.க. அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன், கமல்ஹாசன் சந்தித்ததும்கூட இந்தத் திட்டத்தின் ஓர் அங்கம்தான். '' என்று விளக்கினான் பேப்பர்தம்பி.

''ஆனால், இதிலை சிக்கல் இருக்கும்போலை இருக்கே...?'' என்று சந்தேகம் எழுப்பிய ரூபன், ''மோடியின் பாரதிய ஜனதாக் கட்சி, இந்துத்துவக் கட்சி.இந்தியா முழுவதும் 'இந்துக் கலாசாரம் மட்டுமேஇருக்கவேண்டும்;காவிக் கொடியே பறக்க வேண்டும்'' என்று கனவு காண்கிற கட்சி. விஜய் மதத்தால் கிறிஸ்தவர். கமலஹாசனோ கடவுள் இல்லை என்று சொல்பவர்.இவர்களை எப்படி பாரதிய ஜனதா முன்னிறுத்த முடியும்?'' என்று கேட்டான் ரூபன்.

''இதிலை என்ன கஷ்டம். விஜயின் தாயார் இந்து.மனைவி புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்..., கமல் ஏற்கனவே மோடியின் 'தூய்மை இந்தியா' இயக்கத்தில் இருக்கிறார். ஏரியைத் தூர்வாரினார். பண முடக்க நடவடிக்கையை ஆதரித்தார். இதையெல்லாம் சொல்லி நியாயப்படுத்தலாம் என்று நினைக்கினம் போலை இருக்கு'' என்றார் வாத்தியார்.

அந்த நேரத்தில் ஜீவனின் கைபேசியில் இருந்து 'அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா' என்று நடிகர் கவுண்டமணியின் குரல் ஒலித்தது. இதைக்கேட்டு ஏரம்பரைத் தவிர மற்ற அனைவரும் வாய்விட்டுச் சிரித்தனர்.

ஏரம்பரோ கடும் யோசனையுடன் எழுந்து,வேட்டியை இறுக்கியபடியே ''இந்திய அரசியல்வாதிகள் அரசியலில் பழம் தின்று கொட்டை போட்டவங்கள். அவங்கடை சித்து விளையாட்டுகளைக் கேட்டாலே அடி வயிறு கலங்குது. ஆனால் எங்கடை அரசியல்வாதிகள், அரசியலில் இன்னும் பாலர் வகுப்பே தாண்டவில்லை போலையிருக்கு.இவங்கள் எல்லாம் சர்வதேச மட்டத்திலை புகுந்து சமராடி எங்களுக்கு எல்லாத்தையும் வென்று தருவாங்கள் என்று நம்புறம்.எங்கடை நிலைமை என்னாகப் போகுதோ.'' என்றபடியே நடக்கத்தொடங்கினார்.

மற்றவர்களும் அவரைத் தொடர்ந்தனர். மூத்தவனை நினைத்துப் பெருமூச்சு விட்டபடியே, கச்சான்கடை[illegible] கட்டத் தொடங்கினாள் செல்லாச்சி.

# தமிழ்மொழியைப் பாதுகாப்பதில் ஈழத் தமிழர்கள் கடும் பிரயத்தனம்



## கவிஞர் வைரமுத்து பெருமிதம்

கொழும்பு, ஏப்.09

தமிழ்மொழியைப் பாதுகாப்பதில் ஈழத் தமிழர்கள் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றனர் என்று கவிஞர் வைரமுத்து தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் சிறந்த பாடலாசிரியர் விருது பெற பரிந்துரைக்கப்பட்டுள்ள கவிஞர் வைரமுத்து பி.பி.சிக்குக் கருத்து வெளியிட்டபோது இந்த விடயத்தைச் சுட்டிக காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஈழத் தமிழர்கள் தமிழ் மொழியைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பெரியளவில் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் உலகெங்கிலும் புலம்பெயர்ந்துள்ள போதிலும் தமது பிள்ளைகளுக்கு தமிழைக் கற்பிப்பதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். எனினும் இந்தியர்கள் தமது தாய் மொழியைப் பாதுகாக்கத் தவறி வருகின்ற னர்.

ஈழத் தமிழர்கள் புலம்பெயர்ந்தும் அந்தத் துடிப்போடு செயற்படும் போது, தமிழ்நாட்டில் உள்ளவர்கள் தமிழை வளர்க்க ஆர்வம் காட்டுவதில்லை என்பது கவலையளிக் கிறது.

தற்கொலை எண்ணத்தைத் தடுக்கும் நோக்குடன் எழுதப்பட்ட எனது பாடலுக்கு விருது கிடைத்துள்ளமை மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தியாவிலுள்ள 22 தேசிய மொழிகளில் திரைப்பாடலை பொறுத்தவரை தமிழ்மொழியே முன்னிற்கின்றமை பெருமையளிக்கிறது.-என்றார்.

தர்மதுரை படத்தில் இடம்பெற்றுள்ள பாடலுக்கு - இந்த விருதுக்கு கவிஞர் வைரமுத்து பரிந்துரைக்கப்பட்டுள்ளார். இதன்மூலம் இதே விருதுக்காக ஏழாவது முறையாக வைரமுத்து பரிந்துரைக்கப்பட்டுள்ளார் என்பது சிறப்பம்சமாகும். (ஐ)

# ஜனாதிபதியின் மகனுக்கு ரஷ்யாவில் விசேட கௌரவம்





கொழும்பு, ஏப்.09

சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமராகச் செயற்பட்ட காலப் பகுதியில் அவரது மகன் அநுர பண்டாரவுக்கு ரஷ்யாவில் விசேட கௌரவம் கிடைத்தது.

இந்த நிலையில், 43 வருடங்களின் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகன் தஹாம் சிறிசேனவுக்கு ரஷ்யாவில் சிறந்த கௌரவம் கிடைத்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அண்மைய ரஷ்ய விஜயத்தின் போதே இந்த கௌரவம் கிடைத்துள்ளது.

1974ஆம் ஆண்டு சிறிமாவே பண்டாரநாயக்க அப்போதைய ரஷ்ய தலைவர் லியோனிட் என்பவரின் அழைப்பில் ரஷ்யாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டி ருந்தார்.

அன்று அந்த விஜயத்தின் போது முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவுடன் அவரது மகன் அநுர பண்டாரநாயக்கவும் இணைந்திருந்தார்.

ஜே.ஆர்.ஜயவர்த்தன, ரணசிங்க பிரேமதாஸ, டீ.பி.விஜேதுங்க, சந்திரிகா குமாரதுங்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய ஜனாதிபதிகள் ஒரு போதும் ரஷ்யாவுக்கான உத்தியோகபூர்வ விஜயங்களை மேற்கொள்ளவில்லை.

முன்னாள் ஜனாதிபதி தனது பதவிக் காலங்களில் இரண்டு முறை ரஷ்யாவுக்கு சென்ற போதிலும், அதனை உத்தியோகபூர்வ விஜயமாகக் கருதவில்லை. அந்த விஜயங்கள் உத்தியோகபூர்வ அழைப்பால் மேற்கொள்ளப்பட்டதல்ல. இந்த விஜயங்களின் போது ரஷ்யாவின் கீழ்மட்ட அதிகாரிகளை மஹிந்த சந்தித்திருந்தார்.

ரஷ்ய அரசால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு விடுக்கப்பட்ட அழைப்புக்கு அமைய அங்கு சென்ற அவர் மற்றும் அவரது குடும்பத்துக்கு உயர் கௌரவம் மற்றும் வரவேற்பு வழங்கப்பட்டுள்ளது.

47 மோட்டார் வாகனங்கள் மற்றும் 9 மோட்டார் சைக்கிள் பேரணியுடனான மற்றும் இராணுவ அணிவகுப்புடனான வரவேற்பு மைத்திரிக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகன் தஹாம் சிறிசேனவுக்கும், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கும் இடையில் சந்திப்பு ஒன்றும் இடம் பெற்றுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தாய், இரு பிள்ளைகள் சடலங்களாக மீட்பு!

அனுராதபுரம் விஹாரகலன்சிய பிரதேசத்தில் இருந்து மூன்று சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பெண்ணொருவர் மற்றும் இரண்டு சிறுவர்களின் சடலங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் தாயின் சடலமும், வீட்டின் கிணற்றில் இருந்து இரண்டு பிள்ளைகளின் சடலமும் மீட்கப்பட்டுள்ளன.

கடற்படை வீரர் ஒருவரின் மனைவி மற்றும் இரு பிள்ளைகளே இவ்வாறு உயிரிழந்தவர்கள் என்று பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

குடும்பப் பிரச்சினை காரணமாக இரு பிள்ளைகளையும் கிணற்றில் வீசிக் கொலை செய்துவிட்டு, தாயும் தற்கொலை செய்து கொண்டுள்ளார் என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு கூறியுள்ளது. ஒன்றரை மற்றும் நான்கு வயதுடைய இரு சிறுமிகளே உயிரிழந்தவர்களாவர். (ஐ)

# பாக்கு பாவனைக்கும் இனிமேல் தடை

கொழும்பு, ஏப்.09

உணவுச் சட்டத்தின் கீழ் எதிர்காலத்தில் 'பாக்கு' பாவனையை நீக்குவதற்குப் புதிய சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

புகையிலை போன்று பாக்கும் புற்றுநோய் ஏற்படக் காரணியாக அமைவதால் இவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்ட அமைச்சர் இதனைத் தெரிவித்திருந்தார். (ஐ)

# இலங்கையில் பாரதி

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பட்டிமன்றமும் நடைபெற்றது. "பாரதி விளைந்த பெண்விடுதலை யும் நவீன மாதர் சுதந்திர இயக்கமும் ஒன்றா...?" என்ற தலைப்பில், திருமதிகள் லலிதா நடராஜா, அன்ன பூரணம் பேரின்பராசா, செல்வி திருச்சந்திரன், புவனேஸ்வரி அருணாசலம், செல்வி வள்ளிநாயகி கணபதிப்பிள்ளை ஆகியோர் வாதிட்டனர்.

அதனைத்தொடர்ந்து, பேராசிரியர் கைலாசபதி சிறப்புரையாற்றினார்.

19-06-1982 ஆம் திகதி, கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் அன்றைய துணை அதிபரும் இலக்கிய விமர்சகருமான சபா. ஜெயராசா தலைமையில் நடந்த நிகழ்ச்சியில் "பாரதிக்குப்பின்னர்..." என்ற தலைப்பில் இளங்கீரன் உரையாற்றினார்.

01-08-1982 ஆம் திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடத்திய விழாவில் தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியின் அன்றைய மாநிலச்செயலாளரும் 'ஜனசக்தி' பத்திரிகையின் ஆசிரியருமாக இருந்த தா. பாண்டியனும் பேராசிரியர் கைலாசபதியும் சிறப்புரையாற்றினர்.

18-09-1982 ஆம் திகதி கொழும்பு சட்டக்கல்லூரியில் பாரதி நூற்றாண்டு விழா, நீதியரசர் எம். எம். அப்துல் காதர் தலைமையில் நடந்தது. 'மகாகவி பாரதி தேசியக் கவிஞனா...? தமிழ் எழுச்சிக் கவிஞனா...?' என்ற தலைப்பில் நடந்த விவாத அரங்கில், இளங்கீரன், பொ. கிருஷ்ணசாமி, கனக. மனோகரன், முத்துமீரான், ஹக்கீம் ஆகியோர் உரையாற்றினர்.

சில்லையூர் செல்வராசன் தலைமையில் கவியரங்கும், பாரதி பாடல் இசையரங்கும் இடம்பெற்ற இந் நிகழ்ச்சியிலும் பேராசிரியர் கைலாசபதி உரையாற்றினார்.

தலைநகரில் இவ்வாறு முன்னெடுக்கப்பட்ட பாரதி நூற்றாண்டு விழாக்கள் இலங்கையின் ஏனைய பாகங்களிலும் சங்கத்தினாலும் சங்கத்தின் அனுசரணையுடனும் நடத்தப்பட்டன.

வவுனியா, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கண்டி, நீர்கொழும்பு, சிலாபம் முதலான நகரங்களிலும் பாரதி எழுச்சியுடன் பேசப்பட்டார்.

மேற்குறித்த நிகழ்ச்சிகளில் பங்குபற்றியிருப்பவர்களின் பெயர்களை நினைத்துப்பார்க்கும்பொழுது, அவர்களில் சிலர் இன்று எம்மத்தியில் இல்லை என்பதும், சிலர் கலை, இலக்கியம் மற்றும் அரசியலில் பிரபல்யம் பெற்றிருப்பதும் புலனாகின்றது.

1981 முதல் 1982 இறுதிவரையில் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பாரதி நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி இயங்கிய பேராசிரியர் கைலாசபதி 1982 இறுதியில் டிசம்பர் மாதம் எவருமே எதிர்பாராத நிலையில் திடீரென்று மறைந்தார்.

பாரதி நூற்றாண்டில் நாம் செய்தவை என்ன...? செய்யவேண்டியவை என்ன...? என்பது பற்றியெல்லாம் விரிவாக பல பத்திகளை எழுதியிருக்கும் கைலாசபதி, எம்மிடம் விட்டுச்சென்றிருக்கும் பாரதி இயல் ஆய்வு நூல்கள்: இரு மகாகவிகள், பாரதி நூல்களும் பாடபேத ஆராய்ச்சியும், பாரதி ஆய்வுகள்.

இன்றும் இந்த நூல்கள் இலக்கிய மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பாடநூல்களாகவே திகழுகின்றன.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இலங்கையில் இலக்கிய ரீதியில் ஏற்படுத்திய தாக்கம் விதந்து போற்றுதலுக்குரியது. அந்தத் தாக்கத்தின் ஊடாக பாரதியை பன்முகப் பார்வையிலும் தரிசிக்க முடிந்திருக்கிறது.

( தொடரும்)

# சரசாலை சனசமூக நிலைய கட்டட திறப்பு விழா இன்று

சாவகச்சேரி, ஏப்.09

சரசாலை வடக்கு சனசமூக நிலைய புதிய கட்டடத் திறப்பு விழா இன்று ஞாயிறு பிற்பகல் 2.30 மணிக்கு, நிலையத்தின் தலைவர் பே.கந்தசாமி தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக சதாசிவம் இராமநாதனும் சிறப்பு விருந்தினர்களாக சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெ.செல்வராணி, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வடமாகாண ஓய்வு நிலைப் பணிப்பாளர் திருமதி ஜீ. விமலேஸ்வரி ஆகியோரும் கலந்து கொள்வர். (இ)

# ஆய்வரங்கம்

கொக்குவில், ஏப்.09

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில், மகத்தான ஒக்ரோபர் சோஷலிசப் புரட்சியின் நூற்றாண்டை முன்னெடுக்கும் முகமாக நடத்தப்படும்-

ஆய்வரங்குத் தொடரின் நான்காவது ஆய்வரங்கு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் கொக்குவில் சந்தி, தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும். (இ)

# சுவீடனில் தீவிரவாதத் தாக்குதல்: 5 பேர் சாவு; 12 பேர் படுகாயம்!

ஸ்டாக்ஹோம், ஏப். 09

சுவீடன் தலைநகர் ஸ்டாக்ஹோமில் தீவிரவாதிகள் லொறி மூலம் மேற்கொண்ட தாக்குதலில் 5 பேர் உயிரிழந்துள்ளனர்; பலர் படுகாயம் அடைந்துள்ளனர்.

ஸ்டாக்ஹோமின் புறநகர்ப் பகுதியில் பிரபல வர்த்தக மையம் உள்ளது. எப்போதும் பரபரப்பாகக் காணப்படும் அந்தப் பகுதியில் நேற்று முன்தினம் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்துள்ளது. அங்கு ஒரு சரக்கு லொறி பொருள்களை விநியோகம் செய்வதற்காகச் சென்றுள்ளது.




அப்போது லொறியை வழிமறித்த முகமூடி அணிந்த மர்ம நபர், ஓட்டுநரை கீழே தள்ளிவிட்டு, அந்த லொறியை கடத்திச் சென்றுள்ளார். அதில் மேலும் 2 பேர் ஏறியுள்ளனர். வேகமாக லொறியை ஓட்டிய மர்ம நபர், நடைபாதையில் ஏறி பாதசாரிகள் மீது மோதினார். இதில் 5 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்; 12இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

உடனடியாகச் சம்பவம் இடம் பெற்ற பகுதிக்கு பொலிஸார் விரைந்து சென்றுள்ளனர். அப்போது லொறியில் இருந்து கீழே இறங்கிய மர்ம நபர்கள், துப்பாக்கியால் சுட்டபடி மத்திய ரயில் நிலையத்துக்குள் புகுந்து மறைந்துள்ளனர்.

சந்தேகத்தின்பேரில் 2 பேரை பொலிஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர். மேலும் ஒருவர் அப்பகுதியில் மறைந்திருக்கக் கூடும் என்று தெரிவித்துள்ளனர். அவரைத் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் கருதி ஸ்டாக்ஹோம் மத்திய ரயில் நிலையம் மூடப்பட்டுள்ளது. அந்த ரயில் நிலையம் முழுவதும் சோதனை நடத்தப்பட்டு வருகிறது. நகரின் முக்கிய ரயில் நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து சுவீடன் பிரதமர் ஸ்டீபன் லோஃபன் தெரிவிக்கையில்-

ஸ்டாக்ஹோம் நகர் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதுதொடர்பாக 2 பேரைக் கைது செய்து விசாரணை நடத்தி வருகிறோம் என்று தெரிவித்துள்ளார்.


**பிரதமர் மோடி கண்டனம்:**

சுவீடன் தாக்குதல் சம்பவத்துக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தெரிவிக்கையில்- தாக்குதலில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த துயரமான நேரத்தில் சுவீடனுக்கு இந்தியா துணை நிற்கும்.- என்று கூறியுள்ளார்.

பிரிட்டிஷ் தலைநகர் லண்டனில் உள்ள நாடாளுமன்ற வளாகம் அருகே கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி ஒரு தீவிரவாதி காரை மோதி 6 பேரை படுகொலை செய்ததமை குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானில் 10 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை!



இஸ்லாமாபாத், ஏப். 09

பாகிஸ்தானில் கடந்த மாதம் 15 பேர் உடல் சிதறிப் பலியான தற்கொலைப்படை தாக்குதலுடன் தொடர்புடைய 10 தீவிரவாதிகளைப் பொலிஸார் நேற்று சுட்டுக் கொன்றனர்.

பாகிஸ்தானின் லாகூர் நகரில் கடந்த மாதம் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் 6 பொலிஸார் உட்பட 15 பேர் உடல் சிதறிப் பலியாகினர்.

இந்தத் தற்கொலைத் தாக்குதலுக்கு ஜமாத்-உல்-அஹ்ரார் என்ற அமைப்பு பொறுப்பேற்றுக் கொண்டது.

இந்தக் கோரத் தாக்குதலில் தொடர்புடையவர்களைத் தீவிரமாகத் தேடிவந்த தீவிரவாதத் தடுப்பு பிரிவு பொலிஸார், சி.சிடி.வி கமெரா மூலம், அவ்வமைப்பின் முக்கிய நபரான அன்வருல் ஹக்கை கைது செய்து அவர் மூலமாக மற்றைய தீவிரவாதிகளை நெருங்கினார்.

இந்நிலையில், லாகூர் அருகே உள்ள மனாவன் என்ற இடத்தில் ஆயுதங்களுடன் பதுங்கியிருந்த தீவிரவாதிகளை நேற்றுக் காலை சுற்றிவளைத்த பொலிஸார், அவர்கள் மீது சரமாரியாகத் தாக்குதல்களைத் தொடுத்துள்ளனர். பதிலுக்குத் தீவிரவாதிகளும் பொலிஸாரை நோக்கி துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். பொலிஸாரின் இந்த அதிரடித் தாக்குதலில் 10 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களும் அங்கிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த வாரம் பஞ்சாப் மாநில தலைநகரான லாகூருக்கு உட்பட்ட பகுதியில் மக்கள் தொகை கணக்கெடுப்பில் அதிகாரிகள் ஈடுபட்டு வந்தனர். அதன்போது தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப் படை தாக்குதலில், இராணுவ வீரர்கள் நான்கு பேர் உட்பட ஆறு பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக 15 பேரை சந்தேகத்தின் பெயரில் கைது செய்து விசாரித்து வருகின்றோம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## புளோரிடா விடுதியில் சீன ஜனாதிபதிக்கு விருந்து கொடுத்தார் டொனால்ட் ட்ரம்ப்!



புளோரிடா மாகாணத்தில் உள்ள ஜனாதிபதி ட்ரம்புக்கு சொந்தமான மார் எ லாகோ விடுதியில் ட்ரம்ப் தம்பதியர், சீன ஜனாதிபதிக்கு விருந்து அளித்து கௌரவித்துள்ளனர்.

சீன ஜனாதிபதி ஜின்பிங், அரசு உத்தியோகபூர்வ விஜயமாக அமெரிக்கா சென்றுள்ளார்.

புளோரிடா மாகாணத்தில் உள்ள ஜனாதிபதி ட்ரம்புக்கு சொந்தமான மார் எ லாகோ விடுதிக்குச் சென்ற அவரையும், அவரது மனைவி பெங் லியுவானையும் ஜனாதிபதி ட்ரம்பும், அவரது மனைவி மெலானியாவும் வரவேற்றுள்ளனர்.

அத்துடன், ட்ரம்ப் தம்பதியர், ஜின்பிங் தம்பதியருக்கு இரவு விருந்து அளித்து கௌரவித்துள்ளனர்.

அப்போது பேசிய ட்ரம்ப் நாங்கள் ஏற்கனவே நீண்ட ஆலோசனை நடத்தினோம். இதில் நான் எதையும் பெற்று விடவில்லை. ஆனால், நாங்கள் நல்ல நட்புறவை வளர்த்துக் கொண்டிருக்கிறோம். காலப்போக்கில் நாங்கள் அபாரமான நட்புறவை அடையப் போகிறோம். அதற்கு நான் ஆவலாக இருக்கிறேன்.- என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை, தனது 2 ஆவது நாள் பேச்சின் போது, ஜின்பிங், ட்ரம்புடன் இருதரப்பு உறவை வலுப்படுத்தும் அம்சங்கள், சிரியா விவகாரம் உள்ளிட்ட உலகளாவிய பிரச்சினைகள் குறித்து விரிவாக விவாதிப்பார் எனத் தகவல்கள் கூறுகின்றன.

மேலும், சீனாவுக்கு வருமாறு ட்ரம்புக்கு ஜின்பிங் விடுத்த அழைப்பை அவர் ஏற்றுக் கொண்டுள்ளார் என்றும் தகவல்கள் கூறுகின்றன.


## சிரிய விமானப்படைத் தளத்தில் ஏவுகணை தாக்குதல்: செயற்கைக்கோள் புகைப்படம் வெளியானது!

பாகிஸ்தானில் வட மேற்கு சிரியா விமானப்படைத் தளத்தில் அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, தாக்குதலுக்குப் பின் எடுக்கப்பட்ட செயற்கைக் கோள் புகைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சிரியா ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்தின் ஆட்சிக்கு எதிராகப் போராட்டம் நடத்தி வரும் புரட்சிப் படையினரின் பதுங்குமிடத்தின்மீது அந்நாட்டின் விமானப்படை இரசாயன ஆயுதங்களை வீசி நடத்திய தாக்குதலில் சுமார் 100 பேர் உயிரிழந்தனர்.

சர்வதேச மனித உரிமைகளை மீறிய வகையில நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலுக்கு உலகில் உள்ள பல முக்கிய நாடுகள் கண்டனம் தெரிவித்திருந்தன. குறிப்பாக, அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை போன்றவை மிகக் காரசாரமான கண்டன அறிக்கைகளை வெளியிட்டிருந்தன.

இதற்கிடையில், இந்த தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட சிரியா நாட்டு விமானப்படை தளத்தின் மீது நேற்றுமுன்தினம் அமெரிக்கா பயங்கரமான ஏவுகணைகளை வீசி



தாக்குதல் நடத்தியது.

சிரியாவின் ஈவிரக்கமற்ற மனித உரிமை மீறலைக் கண்டிக்கும் வகையில் இந்த அதிரடித் தாக்குதலை நடத்துமாறு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் உத்தரவிட்டிருந்தார். இதையடுத்து, ஹோம்ஸ் மாகாணத்தில் உள்ள ஷைராத் விமானப்படைத் தளத்தின்மீது அமெரிக்க போர் விமானங்கள் 59 ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தின. இந்நிலையில், தாக்குதலுக்குப் பின் சிரிய விமானப்படைத் தளத்தில் எடுக்கப்பட்ட செயற்கைக் கோள் புகைப்படம் வெளியிடப்பட்டுள்ளது.

# ஆர்.கே.நகர் தேர்தல் ரத்தாகுமா?




சென்னை, ஏப். 09

ஆர்.கே.நகரில் வாக்காளர்களுக்கு பணம் வழங்கப் பட்டமை மற்றும் அமைச்சர் வீட்டில் வருமான வரித்துறை சோதனை நடத்தியமை போன்ற சம்பவங்களை அடுத்து, தலைமைச் செயலகத்தில் சிறப்பு தலைமைத் தேர்தல் அதிகாரி விக்ரம் பாத்ரா தலைமையில் ஆலோசனை நடத்தப்பட்டது. அத்துடன் இது தொடர்பாக, தேர்தல் ஆணையத்துக்கு அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஆர்.கே. நகர் தேர்தல் இடம்பெறுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ஆர்.கே.நகர் இடைத்தேர்தல் எதிர்வரும் 12 ஆம் திகதி இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அ.தி.மு.க. அம்மா கட்சி சார்பில் போட்டியிடும் தினகரனுக்கு ஆதரவாக வாக்காளர்களுக்கு பணம் வழங்கப்படுகிறது என்று அ.தி.மு.க. புரட்சித் தலைவி அம்மா, தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் ஏற்கெனவே தேர்தல் ஆணையத்தில் முறைப்பாடுகள் அளித்தன.

முறைகேடு தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்ததால், தேர்தலைக்கண்காணிக்கவும், செலவினங்கள் தொடர்பாக உத்தரவுகளை வழங்கவும், தேர்தல் ஆணைய செலவினப் பிரிவு இயக்குநர் விக்ரம் பாத்ரா சிறப்புத் தலைமை தேர்தல் அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

கடந்த வியாழக்கிழமை சென்னைக்குச் சென்ற அவர், பிற்பகலே ஆர்.கே.நகர் தொகுதிக்குச் சென்று, பார்வையாளர்கள், காவல்துறை அதிகாரிகள், நுண் பார்வையாளர்கள், வருமான வரித்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இந்நிலையில், அ.தி.மு.க. அம்மா கட்சி வேட்பாளர் தினகரன் ஆதரவாளரும், தமிழக சுகாதாரத்துறை அமைச்சருமான விஜயபாஸ்கர் வீடு, எம்.எல்.ஏக்கள் விடுதியில் உள்ள அவரது அறை உள்ளிட்ட 30 இற்கும் மேற்பட்ட இடங்களில் வருமான வரித்துறையினர் நேற்றுமுன்தினம் அதிகாலை முதல் சோதனை நடத்தினர். விஜயபாஸ்கர் உதவியாளர் வீட்டில் 2.2 கோடி ரூபாவும், எம்.எல்.ஏ விடுதி அறையில் 1.80 லட்சம் ரூபாவும் கைப்பற்றப்பட்டன.

எழும்பூரில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் விஜயபாஸ்கர் கடந்த சில தினங்களுக்கு முன் தங்கியிருந்துள்ளார். அந்த விடுதி அறையில் இருந்தும் பரிசு டோக்கன் உள்ளிட்ட பல்வேறு ஆவணங்களை வருமான வரித்துறையினர் கைப்பற்றினர்.

இதனால், பெரும் பரபரப்பு ஏற்பட்டது. கைப்பற்றப்பட்ட பணத்துக்கும் தேர்தலுக்கும் உள்ள தொடர்பு குறித்து பல்வேறு கட்சிகள் சந்தேகத்தை கிளப்பின.

இந்நிலையில், தலைமைச் செயலகத்தில் நேற்றுமுன் தினம் பகல் 12.45 மணிக்கு, சிறப்புத் தலைமை தேர்தல் அதிகாரி விக்ரம் பாத்ரா தலைமையில் அவசர ஆலோசனைக் கூட்டம் இடம்பெற்றுள்ளது. அதில், தலைமை தேர்தல் அதிகாரி ராஜேஷ் லக்கானி, மாவட்ட தேர்தல் அதிகாரி கார்த்திகேயன், காவல்துறை ஆணையர் கரன் சின்கா, தேர்தல் நடத்தும் அலுவலர் பிரவீண் நாயர், தேர்தல் பார்வையாளர்கள் பங்கேற்றனர்.

ஒரு மணி நேரம் நீடித்த இந்த ஆலோசனைக் கூட்டத்தில், வாக்குப் பதிவு நாள் வரை எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. பின்னர், விக்ரம் பாத்ரா தொகுதிக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

தேர்தல் முறைகேடுகள் தொடர்பாக ஏற்கனவே பல்வேறு கட்சிகள் அளித்த புகார்கள் மீதும் பண விநியோகம் தொடர்பாகவும் அதிகாரிகள் விசாரணை நடத்தி அறிக்கை தயாரித்துள்ளனர். இது தொடர்பான அறிக்கை, வீடியோ ஆதாரங்களும் நேற்றுமுன்தினம் தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பப்பட்டன என்று தேர்தல் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

**தேர்தல் ரத்தாகுமா?**

வாக்காளர்களுக்கு பணம் வழங்கப்பட்டமை, அ.தி.மு.க வின் இருதரப்புக்கும் இடையிலான மோதல், வருமான வரித்துறை சோதனை போன்ற சம்பவங்களின் அடிப்படையில் தேர்தலை ரத்துச் செய்ய வேண்டும் என இடதுசாரிக் கட்சி கோரி வருகிறது. தி.மு.க. நடத்தியே ஆக வேண்டும் எனத் தெரிவித்துள் எது. ஓ.பி.எஸ். அணியினர் ஆணையம் முடிவெடுக்கும்என தெரிவித்துள்ளனர். இந்நிலையில், தேர்தல் ரத்து செய்யப்படுமா? தள்ளி வைக்கப்படுமா? அல்லதுவேட்பாளர் தகுதி நீக்கம் என்ற அறிவிப்பு வெளியிடுமா? போன்ற கேள்விகள்தமிழக மக்கள் மத்தியில் எழுந்துள்ளன.

## தமிழகம் முழுவதும் 55 இடங்களில் வருமான வரித்துறை சோதனை!

### நடிகர் சரத்குமார் வீட்டில் 10 லட்சம் பறிமுதல்



சென்னை, ஏப். 09

தமிழக சுகாதாரத்துறை அமைச்சர்சி.விஜயபாஸ்கரின் வீடு, அலுவலகம், எம்.எல்.ஏ. விடுதி, அவரது நண்பர்கள், உறவினர்களுக்கு சொந்தமான இடங்கள், சமத்துவ மக்கள் கட்சித் தலைவர் சரத் குமாரின் வீடு உட்பட தமிழகம் முழுவதும் 55 இடங்களில் நேற்று முன்தினம் இராணுவப் படை பாதுகாப்புடன் வருமான வரித்துறை சோதனைநடத்தியுள்ளது.

இதில், கணக்கில் காட்டப்படாத 4.5 கோடி ரூபா ரொக்கப் பணமும், 89 கோடி ரூபா சட்டவிரோத பணப் பரிவர்த்தனைநடந்ததற்கான ஆவணங்கள்என்பனகைப்பற்றப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.

சென்னை ஆர்.கே.நகர் தொகுதியில்வாக்காளர்களைக் கவரும் வகையில் அரசியல் கட்சியினர் அதிக அளவில் பணம், பரிசுப் பொருள்களை விநியோகிப்பதாக தொடர்ந்து முறைப்பாடுகள் கூறப்படுகின்றன. பணம் விநியோகிப்பவர்களைக்கண்காணிக்கவருமான வரித் துறையின் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் திட்டமிட்டனர்.

இதையடுத்து,கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தினர். கடந்த ஒரு மாதமாக முக்கியமான தொலைபேசி உரையாடல்கள், பணப் பரிவர்த்தனை, தொழில் முதலீடு உள்ளிட்டவற்றை உன்னிப் பாகக் கண்காணித்தனர்.

வருமான வரி புலனாய்வு பிரிவு அதிகாரிகளால் ஏற்கனவே கைது செய்யப்பட்ட சேகர் ரெட்டி, சீனி வாசலு, விஜயபாஸ்கரின் நண்பர் பிரேம்குமார் உள்ளிட்டோர் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையிலும் வியூகம் அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நடிகர் சரத்குமார் வீட்டில் இருந்து 10 லட்சம்ரூபாவை வருமானவரித் துறை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## அ.தி.மு.கவின் இரு அணிகளுக்கு இடையே இரகசிய உடன்பாடு உள்ளது!

### பொன்.ராதாகிருஷ்ணன் குற்றச்சாட்டு



சென்னை, ஏப். 09

அ.தி.மு.கவின் இரு அணிகளுக்கும் இடையில் இரகசிய உடன்பாடு உள்ளது என்று பொன்.இராதாகிருஷ்ணன் குற்றச்சாட்டியுள்ளார்.

ஆர்.கே.நகரில் பா.ஜ.க. வேட்பாளர் கங்கை அமரனை ஆதரித்து நேற்று முன்தினம் பிரசாரம் செய்தபோதே மத்திய இணை அமைச்சர் பொன். இராதாகிருஷ்ணன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஆர்.கே.நகரில் அ.தி.மு.கவின் இரு அணிகள் மற்றும் தி.மு.க. வேட்பாளர்கள் வாக்காளர்களுக்குப் பணம் வழங்கி வருகின்றனர்.

ஆர்.கே.நகரில் எங்கு சென்றாலும் இந்த 3 வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் பணம் கொடுப்பதை பார்க்க முடிகிறது.

இதனை தடுக்க வேண்டிய பொலிஸார் அச்சப்பட்டு அமைதியாக இருக்கின்றனர்.

தேர்தல் ஆணையத்தை பா.ஜ.க. இயக்கிவருகிறது என்று கூறுவது கண்டிக்கத்தக்கது. தேர்தல் ஆணையத்தின் மீது நாங்களே குற்றம் சாட்டி வருகிறோம். அ.தி.மு.கவுக்கு தேர்தல் ஆணையம் தடை விதித்துள்ளது.

ஆனால், இரு அணிகளும் அ.தி.மு.க. கொடியைப் பயன்படுத்தி வருகின்றனர். ஆனால், எவரும் முறைப்பாடு தெரிவிக்கவில்லை. இரு அணிகளுக்கும் இடையே இரகசிய உடன்பாடு இருப்பதையே இது காட்டுகிறது. மக்களை ஏமாற்றுவதற்காக இவர்கள் நாடகம் நடத்துகிறார்கள்.

தமிழக அமைச்சர் விஜயபாஸ்கர், நடிகர் சரத்குமார் உள்ளிட்டோரின் வீடுகளில் வருமான வரித்துறையினர் சோதனை நடத்தியதற்கு மத்திய அரசு காரணம் அல்ல.

வருமானவரித்துறையினர் தங்களது வழக்கமான கடமையைச் செய்துள்ளனர்.

தென்னிந்தியர்கள் பற்றி இன வெறியுடன் பா.ஜ.க. முன்னாள் எம்.பி. தருண் விஜய் கருத்து எதுவும் தெரிவிக்க வில்லை.

தான் பயன்படுத்திய வார்த்தை தவறாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளதாக அவர் விளக்கம் அளித்துள்ளார். இந்தியாவில் எல்லோரும் சமமாக வாழ்கின்றோம் என்று தான் தருண் விஜய் கூறியிருக்கிறார்.-என்றும் தெரிவித்துள்ளார்.

## கமல் வீட்டில் தீ விபத்து; தனக்குப் பாதிப்பில்லை என அவர் தகவல்!

சென்னை, ஏப். 09

நடிகர் கமலின் ஈ.சி.ஆர். வீட்டில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.


இந்த நிலையில், தனக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்று கமல் டுவிட்டரில் தகவல் தெரிவித்துள்ளார்.

ஈ.சி.ஆரில் உள்ள கமல் வீட்டில் நேற்று அதிகாலை திடீர் தீவிபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்துக் குறித்து கமல் தனது டுவிட்டர் பக்கத்தில், எனது ஊழியர்களுக்கு நன்றி. எனது வீட்டில் நடந்த தீ விபத்தில் இருந்து தப்பினேன். நுரையீரல் முழுவதும் புகை. அப்படியே மூன்றாவது மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தேன். பாதுகாப்பாக இருக்கின்றேன். யாருக்கும் அடிபட வில்லை. உங்கள் அக்கறைக்கும், அன்புக்கும் நன்றி.



இப்போது தூங்கச் செல்கிறேன் என்று தெரிவித்துள்ளார் கமல்.

# கம்பீர், கிறிஸ் லின் அதிரடித் துடுப்பாட்டம்; இலகு வெற்றியை சுவீகரித்த கொல்கத்தா!



ராஜ்கோட், ஏப். 09

10ஆவது ஐ.பி.எல் தொடரின் மூன்றாவது போட்டியில் கௌதம் கம்பீர் தலைமையிலான கொல் கத்தா நைட்ரைடர்ஸ் அணி 10 விக்கெட்டுகளினால் அபார வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

குஜராத் மாநிலத்தின் சௌராஷ்டிரா கிரிக்கெட் அசோசியேஷன் மைதானத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் மற்றும் குஜராத் லயன்ஸ் ஆகிய அணிகளுக் கிடையில் நடைபெற்ற இந்தப் போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி முதலில் களத்தடுப் பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப் பெடுத்தாட களம் இறங்கிய குஜராத் லயன்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர் கள் நிறைவில் 4 விக்கெட் டுகளை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் குஜராத் லயன்ஸ் அணி சார்பில் அணித்தலைவர் சுரேஷ் ரெய்னா 7 பவுண் டரிகள் அடங்கலாக இறுதி வரை ஆட்டமிழக்காமல் 68 ஓட்டங்களையும், தமிழக வீரர் தினேஷ் கார்த்திக் 2 சிக்ஸர்கள் மற்றும் 6 பவுண் டரிகள் அடங்கலாக 25 பந்து களுக்கு 47 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து பதிலுக்கு 184 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாட களம் இறங்கிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 14.5 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி 184 ஓட்டங்களை பெற்று பத்து விக்கெட்டுகளினால் அபார வெற்றி பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் அந்த அணி சார்பில் கிறிஸ் லின் 8 சிக்ஸர்கள் மற்றும் 6 பவுண்டரிகள் அடங்கலாக 41 பந்துகளுக்கு 93 ஓட் டங்களைப் பெற்றுக் கொடுத்த அதேவேளை, அந்த அணியின் தலைவர் கௌதம் கம்பீர் 12 பவுண் டரிகள் அடங்கலாக 48 பந்து களுக்கு 76 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

இதன்மூலம் 10ஆவது ஐ.பி.எல். தொடரில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி தமது முதல் வெற்றி யைப் பதிவு செய்துள்ளது.

கொல்கத்தா அணியின் இந்த வெற்றி, இருபதுக்கு 20 போட்டிகளில் 10 விக் கெட்டுகள் வித்தியாசத்தில் மிகப்பெரிய ஓட்ட எண்ணிக் கையை கடந்து சாதனை யையும் படைத்துள்ளது.

இந்த போட்டியின் ஆட்ட நாயகனாக 8 சிக்ஸர்கள் மற்றும் 6 பவுண்டரிகள் அடங்கலாக 41 பந்துக ளுக்கு 93 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்த கிறிஸ் லின் தெரிவு செய்யப்பட் டார். குஜராத் லயன்ஸ் அணியின் நட்சத்திர சகலதுறை ஆட்டக்காரர் களான ரவீந்திர ஜடேஜா மற்றும் டூவைன் பிராவோ ஆகியோர் உபாதையினால் பாதிக்கப்பட்டுள்ளமை அந்த அணிக்கு பெரும் பின்னடைவாகக் கருதப் படுகின்றது.

அத்துடன், இதுவரையில் அவர்களின் இடங்களுக்கு மாற்றுவீரர்கள் எவரும் அறிவிக்கப்படவில்லை என்பது இங்கு சுட்டிக்காட் டத்தக்கது.

இந்தப் போட்டியில் 68 ஓட்டங்கள் குவித்த சுரேஷ் ரெய்னா, ஐ.பி.எல் போட்டி யில் அதிக ஓட்டங்கள் குவித்தவர்கள் வரிசையில் முதலிடத்தைப் பிடித்துள் ளார். இதுவரை 148 போட் டிகளில் விளையாடியுள்ள அவர், ஒரு சதம் மற்றும் 29 அரைச் சதங்களுடன் 4,166 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியின் தலைவர் விராட் கோஹ்லி 4,110 ஓட்டங்களுடன் 2 ஆவது இடத்திலும், மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவர் ரோஹித் சர்மா 3,877 ஓட்டங்களுடன் மூன்றா வது இடத்திலும் உள்ளனர்.

இதேவேளை, 10ஆவது ஐ.பி.எல் தொடரிலிருந்து உபாதையால் விலகியுள்ள முக்கிய வீரர்களுக்கான மாற்று வீரர்களை ஐ.பி.எல் அணிகள் அறிவித்துள்ளன.

டில்லி அணியின் சகல துறை வீரர் டுமினிக்கு பதிலாக ஆஸ்திரேலியா வின் வேகப்பந்து வீச்சாளர் பென் ஹில் பென்ஹாஸ் சேர்க்கப்பட்டுள்ளார்.

பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் லோகேஷ் ராகுலுக்கு பதிலாக தமிழக வீரர் ஜெக தீஷன் அணியில் இடம் பிடிப்பார் எனச் செய்திகள் வெளியாகியிருந்தபோதும், அவருக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை.

கோவாவைச் சேர்ந்த 23 வயதான அதிரடி வீரர் வினோத் அந்த அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே புனே அணி உபாதையடைந்த மிட்சல் மார்ஷ் மற்றும் அஸ்வின் ஆகியோருக்குப் பதிலாக இம்ரான் தாஹிர் மற்றும் தமிழகத்தின் வொசிங்டன் சுந்தர் ஆகியோரை அணி யில் இணைத்துக் கொண் டுள்ளது.

# பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் போட்டி; மேற்கிந்தியத் தீவுகள் அணி சாதனை வெற்றி!




கயானா, ஏப் 09

பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட் டியில் ஜாசன் முகமது அதிரடியாக அரைச்சதம் கடந்து கைகொடுக்க, மேற்கிந்தியத் தீவுகள் அணி 4 விக்கெட் வித்தியா சத்தில் சாதனை வெற் றியைப் பெற்றுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளுக் குச் சென்றுள்ள பாகிஸ் தான் அணி, மூன்று போட் டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டி கயானா வில் இடம்பெற்றது. நாண யச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி, களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

முதலில் துடுப்பெடுத் தாடிய பாகிஸ்தான் அணிக்கு அகமது ஷேஜாத், கம்ரான் அக்மல் ஜோடி நல்ல ஆரம்பத்தைக் கொடுத்தார். முதல் விக் கெட்டுக்கு 85 ஓட்டங்க ளைச் சேர்த்த போது கம் ரான் அக்மல் (47 ஓட்டங் கள்) ஆட்டம் இழந்தார். பொறுப்பாக ஆடிய ஷேஜாத் (67 ஓட்டங்கள்) அரைசதம் கடந்தார். பாபர் அஜாம் (1[illegible] ஓட்டங்கள்) ஏமாற்[illegible] அபாரமாக ஆடிய முகமது ஹபீஸ் (88 ஓட்டங்கள்), சோயப் மாலிக் (53 ஓட்டங்கள்) கைகொடுத்தனர்.

பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 5 விக்கெட் டுக்கு 308 ஓட்டங்கள் எடுத்தது. அணித்தலைவர் சர்பராஸ் அகமது (20 ஓட் டங்கள் ), இமாத் வாசிம் (6 ஓட்டங்கள்) ஆட்டம் இழக் காமல் இருந்தனர். மேற்கிந் தியத் தீவுகள் சார்பில் ஆஷ்லே நர்ஸ் 4 விக்கெட் டுகளைக் கைப்பற்றினார்.

சவாலான இலக்கை விரட்டிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு வால்டன் (7 ஓட்டங்கள்) ஏமாற்றி னார். எவின் லீவிஸ் (47 ஓட்டங்கள்) ஓரளவு கை கொடுத்தார். பொறுப்பாக ஆடிய பாவெல் (61 ஓட் டங்கள்) அரைச்சதமடித் தார். ஷாய் ஹோப் (24 ஓட் டங்கள்), கார்டர் (14 ஓட் டங்கள்), அணித்தலைவர் ஹோல்டர் (11 ஓட்டங்கள்) நிலைக்கவில்லை.

பின் அபாரமாக ஆடிய ஜாசன் முகமது, சிக்ஸர், பவுண்டரிகளாக விளாசி னார். வகாப் ரியாஸ் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய முகமது, 31 பந்தில் அரை சதமடித்தார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி 49 ஓவரில் 6 விக் கெட் இழப்புக்கு 309 ஓட் டங்கள் குவித்து வெற்றி பெற்றது.

ஜாசன் முகமது (91 ஓட் டங்கள்), நர்ஸ் (34 ஓட்டங் கள்) ஆட்டம் இழக்காமல் இருந்தனர். இந்த வெற்றி யின்மூலம், 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொட ரில் மேற்கிந்தியத் தீவுகள் 1-0 என முன்னிலை வகிக்கிறது.

இரண்டாவது போட்டி கயானாவில் இன்று இடம் பெறவுள்ளது.

பாகிஸ்தான் அணி நிர்ணயித்த 309 ஓட்டங் களை எட்டிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, ஒருநாள் போட்டி அரங்கில் முதன் முறையாக 300 அல்லது அதற்கு மேலான ஓட்டங் களைப் பெற்று வெற்றி பெற்றது. கடந்த 44 ஆண் டுகளில் 31 முறை, 300 ஓட்டங்களுக்கு மேல் சேர்க்க முடியாமல் தோல்வி அடைந்துள்ளது.

# இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் புதிய கிரிக்கெட் தொடர்!

கொழும்பு, ஏப் 09

இலங்கை வீரர்களை ஐ.சி.சி. சம்பியன் கிண்ணத் திற்கு தயார்படுத்தும் நோக்கோடு மட்டுப்படுத் தப்பட்ட ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடர் ஒன்றை இலங்கை கிரிக்கெட் வாரியம் மாகாண ரீதியாக நடத்தவுள்ளது.

இத்தொடரில் கொழும்பு, காலி, தம்புள்ளை மற்றும் கண்டி ஆகிய அணிகள் பங்கேற்கவுள்ளன.

தொடரின் முதற்கட்டப் போட்டிகளில் ஒவ்வொரு அணியும் தங்களுக் கிடையே இரு தடவைகள் மோதிக்கொள்ளவுள்ளன.

இதில், புள்ளிகள் அடிப் படையில் முதல் இரண்டு இடங்களைப்பெறும் அணி கள் எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் பலப்பரீட்சை நடாத்தவுள் ளன.

இத்தொடர் பற்றி, இலங்கை கிரிக்கெட் சபை யின் பிரதி தலைவர் கே.மதிவாணன் கருத்துத் தெரிவிக்கையில் -

நாங்கள் ஐ.சி.சி சம்பியன் கிண்ணத்தைப் பற்றி பேசிக் கொண்டுள்ளோம். தேசிய அணி வீரர்களோடு சேர்த்து கிட்டத்தட்ட 60 வீரர்கள் இத்தொடரில் களமிறங் கவுள்ளனர். நடைபெற விருக்கும் சம்பியன் கிண்ணத்திற்கான பயிற்சியாக இது இருக்க வுள்ளது.- என்று தெரிவித் துள்ளார்.

இலங்கை அணியின் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ், நிரோஷன் திக் வெல்ல, அசேல குணரத் தன மற்றும் லசித் மலிங்க ஆகிய வீரர்கள் காயம் கார ணமாகவும், இந்திய பிரிமி யர் லீக்கில் பங்கேற்பதன் காரணமாகவும் இத்தொட ரில் இணைக்கப்பட வில்லை.

இத்தொடரின் முதல் தொகுதிப் போட்டிகள் நாள் போட்டிகளாக இடம் பெற வுள்ளதோடு, தொடரின் இரண்டாம் தொகுதிப்போட் டிகள் (இறுதிப்போட்டி உட்பட) மின்னொளி விளக்குகளின் துணையுடன் நடத்தப்படவுள்ளது.

# சிவபூமி முதியோர் இல்லத்தின் பத்தாவது ஆண்டு பூர்த்திவிழா

## நேற்று உணர்வுபூர்வமாக நடைபெற்றது







சுழிபுரம், ஏப்.09

தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லத்தின் பத்தாவது ஆண்டுப் பூர்த்தி விழா நேற்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிளவில் சிவபூமி முதியோர் இல்லத்தில், சிவபூமி அறக்கட்டளைத்தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் தம்பதியினரும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.அரச அதிபர் நா. வேதநாயகன் தம்பதிகள், இளைப்பாறிய கணக்காளர் வை.ஈழலிங்கம் தம்பதிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் புளொட் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தன், வட மாகாணசபை அவைத் தலைவர் சீ.வி.கே சிவஞானம் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

ஆரம்ப நிகழ்வாக சிவபூமி ஞான வைரவர் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றல் திருமுறை வழிபாடு, வரவேற்புரை என்பன இடம்பெற்று, சைவப் பெரியார்களின் ஆசியுரைகளும் இடம்பெற்றன.

தொடர்ந்து 'தரிசனம்' ஆவண ஒளிநாடா மற்றும் சிவபூமி நிழல் சிறப்பு மலர் என்பன வெளியிட்டு வைக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து பல்வேறு கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. (ம)

# வவுனியாவில் பாடசாலை ஒன்றின் அதிபர் மீது அயல்வீட்டார் தாக்குதல்

## அதிபர் வைத்தியசாலையில், தாக்குதலாளி கைது

வவுனியா, ஏப்.09

வவுனியாவில் உள்ள பாடசாலை ஒன்றின் அதிபர் மீது நேற்று நண்பகல் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் காயமடைந்த அவர் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா தோணிக்கல் பகுதியில் வசித்துவரும் மேற்படி அதிபர் நேற்று முன்தினம் தனது வீட்டின் பின்பக்க வேலிக்கு தூண்போடும் பணியினை மேற்கொண்டுள்ளார். நேற்று அவரது வீட்டுக்கு வர்ணம் பூசப்பட்டதால் வர்ணம் வாங்குவதற்காக அவர் கடைக்குச் சென்றார் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில், நேற்றுப பிற்பகல் ஒரு மணியளவில் பின்வீட்டுக் காணி உரிமையாளர் மற்றும் அவரது நண்பர்கள் குழுவொன்று அதிபரின் வீட்டுக்குள் நுழைந்து அங்கிருந்த, அதிபரின் உறவினரான பெண் ஒருவர் மீது தாக்குதல் நடத்தினர் எனவும் அதிபர் வந்த பின்னர் அவர் மீதும் தாக்குதல் இடம்பெற்றது எனவும் தெரிய வருகின்றது.

காயமடைந்த அதிபர் ஏ. முரளிதரன் (வயது 47) உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அது தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதையடுத்து தாக்குதல் நடத்திய பின்வீட்டு உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## சுன்னாகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றரை வயதிலும் இரண்டு சிறிய பிள்ளைகள் உள்ளனர்.

தேவாலய உற்சவத்தை ஒட்டி வீட்டை அலங்கரித்துக்கொண்டிருந்த போதே இந்த அனர்த்தம் நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரவு பிள்ளைகள் படுக்கச் சென்றபின்னர் கணவனும் மனைவியும் வீட்டை அலங்கரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்திருக்கின்றனர். 'மெயின்சுவிட்ச்' பெட்டியில் ஓர் ஆணியை அடித்து, அதில் கம்பிக் கட்டுக் கம்பியைக் கட்டி இழுத்து, அருகில் சுவரில் இருந்த ஒரு 'பல்ப் ஹோல்டர்' கட்டையிலும் அதைச் சுற்றி கட்டியபடி கணவர் அந்தக் கம்பியை இழுத்திருக்கிறார் எனக் கூறப்படுகின்றது. 'பல்ப்ஹோல்டர்' கட்டையில் இருந்து மின்சார ஒழுக்கு ஏற்பட்டு அந்தக் கம்பிக் கட்டு வழியாகக் கணவரைத் தாக்க, அவரைக் காப்பாற்றச் சென்ற மனைவியும் மின்தாக்குக்கு இலக்காக, இருவரும் அந்த இடத்திலேயே வீழ்ந்து இறந்திருக்கின்றனர்.

சம்பவம் நடந்தபோது திடீரென 'ஐயோ' என்று பெரிய சத்தம் கேட்டதாகவும் –

அதைச் செவிமடுத்த அயல் பகுதி இளைஞர்களும் அயலவர்களும் 'திருடன்' என நினைத்து அப்பகுதியை நோக்கி ஓடி வந்தனர் எனவும் –

எனினும் 'ஐயோ' என்ற குளறல் ஒரு சத்தத்துடன் அடங்கி விட்டதால் வந்த இளைஞர்கள் அதிக நேரம் அவ்விடத்தில் ஆராயாது திரும்பி விட்டனர் என்றும் கூறப்பட்டது.

அதிகாலை 5, 6 மணிக்கு மேற்படி ஏழு வயதுப் பிள்ளை, ஒன்றரை வயதுப் பிள்ளையையும் கூட்டிக் கொண்டு அருகில் இருந்த சொந்தக்காரர் வீட்டுக்குச் சென்றுள்ளது.

தாயும், தந்தையும் தட்டியும் எழும்பாமல் கம்பி ஒன்றைப் பிடித்தபடி கிடக்கின்றார்கள் என அந்தப் பிள்ளை தெரிவித்த தகவலை அடுத்தே அயலவர்கள் வீட்டுக்குள் சென்றுபார்த்தபோது முதல் நாள் இரவு இடம்பெற்ற விபரீதம் தெரிய வந்ததாம்.

விசாரணையின் பின்னர் இரு சடலங்களும் உறவினர்களிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டன. (உ)

## 5ஆம் தர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

" வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் இரதோற்சவத் தினத்தன்று ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையையும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. அதனால் பரீட்சையைப் பிறிதொரு தினத்துக்கு மாற்றுமாறு பரீட்சைத் திணைக்களத்தைக் கோரியுள்ளோம்."–என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்துள்ளார். (உ)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பனை தெரிவிக்காதமையை அடுத்துச் சாத்தியமாகியது.

இந்த நிலையில் பல வருடங்களாக நீண்ட காலத் தடுப்பில் இருக்கும் தமிழ் கைதிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு, கடந்த காலங்களை விட, இன்று தமிழ் மக்களால் அதிகமாக உணரப்படுகிறது. தமிழ் மக்கள் மட்டுமல்லர், பல்வேறு ஆளும் தரப்பு, எதிர்தரப்பு அரசியல் கட்சிகளும் இந்த நிலைப்பாட்டை ஆதரிக்கின்றன.

இது தமிழ்–சிங்கள புத்தாண்டு காலம். அடுத்த மாதம் சர்வதேச வெசாக் பண்டிகை.

இவற்றைக்கருத்தில்கொண்டு, நீண்டகாலமாகத்தடுப்புக்காவலில் உள்ள தமிழ்க் கைதிகளைப் பிணை அல்லது புனர் வாழ்வு அல்லது விடுதலை ஆகியதெரிவு அடிப்படைகளில் விடுவிக்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

இந்த விடயத்தில் தொடர்ந்து விளையாட முடியாது. இவர்களுக்கு ஒரு சட்டம், அவர்களுக்கு ஒரு சட்டம் என்று இரண்டு வித சட்டங்கள், கவனிப்புகள் இந்த நாட்டில் இருக்க முடியாது. இப்படி இருந்தால், தேசிய சகவாழ்வு அமைச்சர் என்ற முறையில் இனங்களுக்கு மத்தியில் சக வாழ்வை உருவாக்குவது எப்படி?

தமிழ்க் கைதிகள் மிக நீண்ட காலமாக சிறைகளில் இருக்கிறார்கள். இதை ஏன் சொல்கிறேன் என்றால், கைதிகளுக்கு நிவாரணம் வழங்காமல் இருக்க, இந்தச் சட்ட அடிப்படைகளைக் கண்டு பிடித்துச் சொல்ல, இங்கே பலர் காத்திருக்கின்றர்கள்.

இந்தக் கைதிகளில் பலரது வாழ்வின் பெரும்பாகம் சிறைகளில் முடிந்தே விட்டது. சட்ட அடிப்படைகளை விட இந்த மனிதாபிமான அடிப்படைகளை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அடுத்தவார அமைச்சரவைக் கூட்டத்திலும் இதுபற்றி பேசவுள்ளேன். – என்றுள்ளது. (ஐ)

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் வருகின்றனர். மக்கள் கூட்டத்தைப்பார்த்து அரசாங்கம் ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்களுக்குத் தேர்தலை ஒத்திவைக்கின்றது.

"உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி நிறுவனங்களின் பணிகள் தாமதமடைந்துள்ளன. இனிமேல் நான் வரும் கூட்டங்களுக்கு மக்களை வரவழைக்க வேண்டாம்.

''வெளிநாடுகளில் நடைபெறும் கூட்டங்களில் அம்பாந்தோட்டையில் எமக்கு சிறந்த துறைமுகம் இருப்பதாகப் பிரதமர் கூறுகிறார். அங்கு வந்து தொழிற்சாலையை அமைக்குமாறும் கூறுகிறார். எனினும், இலங்கை திரும்பியது அம்பாந்தோட்டைத் துறைமுகம் மிகப் பெரிய நீச்சல் தடாகம் என்கிறார். நான் இது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். அவற்றை நான் நிர்மாணித்ததன் காரணமாகவே அவர்கள் முதலீட்டாளர்களிடம் அது பற்றிக் கூறுகின்றனர்." – எனவும் முன்னாள் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (உ)

## பாக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் ட்றோலர்களை விடுவிக்க வேண்டும் என்ற இந்தியத் தரப்பின் கோரிக்கையைச் சாதகமாகப் பரிசீலிக்கத் தாங்கள் தயாராக இருக்கின்றனர் என்ற தகவலையும் இலங்கை அதிகாரிகள் இந்திய அதிகாரிகளுக்குக் கோடி காட்டினராம்.

தமிழக ஊடகம் ஒன்று இத் தகவலை வெளியிட்டது.

இலங்கை – இந்திய அதிகாரிகளுக்கு இடையில் கடற்றொழில் சார்ந்த தொடர்பான இரண்டாவது சுற்றுப் பேச்சு நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற பின்னர் இலங்கை அதிகாரிகள் இந்தத் தகவலை வெளியிட்டனர் என அந்த ஊடகம் தெரிவித்தது.

சுமார் நூற்றியைம்பது வரையான தமிழக மீனவர்களின் படகுகள், ட்றோலர்கள் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

''இந்த விடயத்தில் எமது அமைச்சு, வடக்கு மீனவர்களின் கருத்து நிலைப்பாட்டைக் கோரியிருந்தது. அவர்கள் படகுகளை விடுவிப்பதற்கு இணக்கம் தெரிவிப்பார்கள் போல் தோன்றுகின்றது. எனினும் இது அரசியல் ரீதியான தீர்மானம் என்பதால் உயர்மட்டத்திலேயே அதனை முன்னெடுக்க வேண்டியுள்ளது." – இவ்வாறு இலங்கை அதிகாரி கூறினார் என அந்த ஊடகம் மேலும் தெரிவித்தது. (உ)

## யுத்தக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவாத நிகழ்ச்சியில் சுமந்திரனும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமாரும் பங்கு கொண்டனர். அந்த விவாதத்தின், முதல் அங்கம் நேற்றுக் காலை ஒளிபரப்பானது. அதிலேயே சுமந்திரன் இந்தத் தகவலை வெளியிட்டார்.

"யுத்தக் குற்றங்கள், மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் பற்றிய விவகாரம் இல்லாமல் போய்விடாது. அது அப்படியே தொடர்ச்சியாக இருக்கும். என்றோ ஒரு நாள் அதற்கு நீதி வழங்கவேண்டிய தேவை இருக்கும். அது தவிர்க்க முடியாத கட்டாயமாகும். – என்ற சாரப்பட சுமந்திரன் மேலும் கருத்துத் தெரிவித்தார். (உ)

## கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தயாரித்து சர்வதேசத்திடம் முன்வைப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

கடந்த வியாழனன்று நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் தீர்மானிக்கப்பட்டதாக அறிய வந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தனின் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

ஏற்கனவே ஜெனீவா மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு வழங்கப்பட்ட ஒன்றரை வருட காலப் பகுதியில் இலங்கை உருப்படியாக எதையும் செய்யவில்லை.

அதேசமயம், இப்போது மேலும் இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இந்தக் கால அவகாசத்துக்குள்தான் முன்னெடுக்கப் போகின்ற விடயங்கள் தொடர்பில் எந்த நிகழ்ச்சி நிரலையோ அல்லது கால அட்டவணையையோ இலங்கை வெளியிடவில்லை. மீண்டும் இரண்டு வருட காலத்தை உருப்படியாக ஏதும் செய்யாமல் இழுத்தடிக்க இலங்கை பயன்படுத்தலாம் எனப் பொதுவான அச்சம் தமிழ் மக்கள் மத்தியில் உள்ளது.

இந்தப் பின்புலத்திலேயே இலங்கை அரசு முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்துத் தானே ஒரு கால அட்டவணையுடனான நிகழ்ச்சி நிரலைத் தயாரித்து இலங்கை அரசிடமும், சர்வதேச சமூகத்திடமும் கையளிப்பதற்குக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு தீர்மானித்திருக்கின்றது.

இதேசமயம், வடக்கில் மக்கள் தங்களின் அன்றாடப் பிரச்சினைகளை ஒட்டிப் பல போராட்டங்களை நடத்தி வருகின்றமை குறித்தும் இந்த நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இந்தப் போராட்டங்கள், அந்த மக்களின் கோரிக்கைகள் போன்ற முழு விவரங்களும் அடங்கிய கடிதம் ஒன்றை முதலில் தயாரித்து ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கும் அனுப்புவது என்றும் –

பின்னர் அந்த விடயங்கள் குறித்து ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரை நேரில் சந்தித்து அந்த மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் குறித்துப் பேசுவது என்றும் மேற்படி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (உ)




# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டம் நீடிக்கிறது!

## பதிவை மேற்கோள்ளுமாறு அறிவுறுத்து

வவுனியாவில் நேற்று 44 ஆவது நாளாக தமது சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்ட, கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகள் தமக்குச் சாதகமான பதில் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என்றும் தெரிவித்துள்ளனர்.

கையளிக்கப்பட்ட தமது உறவினர்கள் தொடர்பில் பதில் அளிக்கக் கோரியும், அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரியும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு கோரியும் தமது போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

தாம் ஒன்றரை மாதமாகப் போராட்டத்தை முன்னெடுக்கின்ற போதும் அரசு உரிய பதிலைத் தரவில்லை எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூடக் காத்திரமான நடவடிக்கையை முன்னெடுக்க வில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பதிவுகள் இடம்பெறுவதால் அந்தப் பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் தமது போராட்ட இடத்தில் பதிவை மேற்கொள்ளுமாறும் விரைவில் விவரங்கள் அரசுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன என்றும் கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினரது சங்கத்தின் வவுனியா மாவட்ட தலைவி கா.ஜெயவனிதா தெரிவித்துள்ளார். (ஐ-100)




## பரிசுத்தப்படுத்தும் பக்தி முயற்சியின் புனிதம் காப்போம்

இயேசுவோடு பன்னிரு சீடர்களும் பந்தியில் அமர்ந்து விருந்துண்ணும் போது இயேசு கூறினார் ''உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்'' என்றார். ''ஆண்டவரே அது நானா'' சீடர்கள் கேட்டுக் கொண்டனர். அதற்கு அவர் ''என்னுடன் பாத்திரத்தில் தொட்டு உண்பவனே என்னைக் காட்டிக் கொடுப்பான்'' என்றார். ''ரபி நானோ?'' என யூதாசும் அவரிடம் கேட்க இயேசு, ''நீயே சொல்லிவிட்டாய்'' என்றார்.

நற்செய்தியில் எழுதப்பட்ட யாவும் நடந்தது. இன்றும் பல வடிவங்களில் நடக்கிறது. இதுவே சரித்திரமாக தொடர் கதையாக உண்டு மகிழ்ந்து உறவாடியவர்கள் தம் சுய நலத்துக்காகக் காட்டிக் கொடுக்கப்பட்ட பல வரலாறுகள் அரசியலிலும், சமூகத்திலும் குடும்ப உறவுகளிலும் அரங்கேறும் நிகழ்வாக கருணை காட்டுபவர்களுக்கே காட்டிக் கொடுக்கும் சம்பவங்களாகிறது. இவை ஆன்மீக நிலையில் இன்று சிந்தித்தால் எமது வாழ்விலும் காட்டிக் கொடுத்த சம்பவங்கள் காட்டிக் கொடுப்பால் துன்பப்படும் நிலைகள் பிறர்மீது பழி சொல்லி தப்பிக்காது எம் தவறுகளை உணர்ந்து ஏற்றுக் கொண்டு மன்னிப்புக்காக மனம் வருந்த புனித வாரம் எம்மை அழைக்கிறது.

''எல்லோரும் உம்மை விட்டு ஓடிப் போய் விட்டாலும் நான் ஒருபோதும் ஓடிப் போக மாட்டேன்'' என்று கூறிய சீடர் பேதுறுவுக்கு இயேசு கூறினார் ''இன்று இரவில் சேவல் கூவுமுன் மும்முறை என்னை நீ மறுதலிப்பாய் என உறுதியாக உனக்குச் சொல்கிறேன்'' என்றார் இயேசு. எமது ஆன்மீக பயணத்திலும் எமது பாவச் செயல்கள், மறுதலிப்புகளாக தவறும் பல சந்தர்ப்பங்கள் ஒரு நாளில் எத்தனை தடவை எமது தவறுகளை உணர்ந்துள்ளோம். எம்மை நாமே தண்டிக்கிறோம். தவறுகின்றோம். பிறரது பார்வையில் தெரியாவிட்டாலும் எமது மனச்சாட்சிக்கு விரோதமாக சொல்லும் செயலும் பாவ இருளை அதிகப்படுத்தும்.

பரிசுத்த வாரத்தில் இணையும் போது எம்மைத் தூய்மைப்படுத்தி இறைவனின் பாடுகளுடன் எமது வாழ்வை மாற்றிக் கொள்ள ''நானா ஆண்டவரே'' என்ற கேள்விக்கு விடை காண்போம். மனதை ஒருநிலைப்படுத்தி வாழ்வில் புதுவழி தேடி மனச்சாட்சிக்கு மதிப்பளிக்கும் எமது செயல்கள், செப, தப, தானங்களால் எம்மை புடமிடுவோம். மன்னிக்கும் மனப்பக்குவத்துடன் பிறரோடு நல்லுறவை ஏற்படுத்தி இயேசுவின் பாதை வழி அவரது வழிகாட்டலை ஏற்று இயேசு செபிக்க சென்றது போல் எமது நேரத்தை இறை உறவில் வழிபாட்டில் சிலுவைப் பயணத்தின் பங்காளராக பரிசுத்த வாரத்தைப் பக்தியோடு அர்த்தம் பெற ஒன்றிணைவோம்.

பே.யோசப்பாலா

## முக்கிய பதவிகளில் மாற்றமில்லை

### அமைச்சர் துமிந்த

கொழும்பு, ஏப்.09

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகியனவற்றின் முக்கிய பதவிகளில் மாற்றமில்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் கமத்தொழில் அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

சுதந்திரக் கட்சியிலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலும் முக்கிய பதவிகளில் மாற்றம் செய்யப்பட உள்ளது என்று ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. எனினும் இந்தச் செய்திகளில் எவ்வித உண்மையும் கிடையா.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை முழு அளவில் மறுசீரமைப்பதுடன் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை மேலும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலும் எவ்வித பிரச்சினைகளும் கிடையா.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிளவடைவதனை விரும்பும் சில நபர்கள் தங்களது கனவு நனவாகாத காரணத்தால் ஊடகங்களில் பொய்ப் பிரசாரங்களைச் செய்து வருகின்றனர்.- என்றார். (ஐ)

# வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறியுள்ளது நல்லாட்சி அரசு




கொழும்பு, ஏப்.09

அரசு வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளது என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த நாட்டின் தலைவர்கள் மற்றும் மக்களைச் சிறைச்சாலைகளில் அடைத்து வைக்க முடியாது என்பது தற்போது நிரூபணமாகியுள்ளது என்று குறிப்பிட்டுள்ள அவர் நீதிமன்றின் சுயாதீனத்தன்மைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

அரசு நியமித்துள்ள நீதிபதி ஒருவருக்கு ஒட்டுமொத்த நீதிச் சேவைக் சட்டமைப்பும் சட்டத்தரணிகளும் எதிர்ப்பை வெளியிடுகின்றனர்.

அந்த நீதிபதியை அரசால் விலக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனை எதிர்க்கிறது. உண்மையில் நாட்டை யார் ஆட்சி செய்கின்றார்கள் என்பது தெரியவில்லை.-என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)




## கிளிநொச்சியில் 48 ஆவது நாளாக...

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கிளிநொச்சியில் மேற்கொள்ளப்பட்டுவரும் போராட்டம் 48 ஆவது நாளாக நேற்றும் இடம் பெற்றது. (ஐ)

## அம்பாந்தோட்டைத் துறைமுக வழக்கு ஒத்திவைக்கப்பட்டது மே மாதத்துக்கு

கொழும்பு, ஏப்.09

அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தித் திட்டத்துக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தொடுத்துள்ள அடிப்படை உரிமைமீறல் மனுவை மே மாதம் 02 ஆம் திகதி வரை ஒத்திவைக்க உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்த மனு நேற்று முன்தினம் உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீன நிறுவனம் ஒன்றுக்கு வழங்க அமைச்சரவை வழங்கியுள்ள அனுமதியை இரத்துச் செய்யுமாறு கோரி இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அமைச்சரவை மற்றும் சைனா மெர்ச்சன்ட் போர்ட் ஹோல்ட்டிங்ஸ் நிறுவனம் உள்ளிட்ட நிறுவனங்கள் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பணம் 'சலவை செய்தல்' குற்றச்சாட்டில் நாமல் உட்பட ஐவருக்கு எதிராக வழக்கு

கொழும்பு, ஏப்.09

பணம் சலவை செய்தல் குற்றச்சாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ உட்பட ஐவருக்கு எதிராக சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கவரஸ் கோப்ரேட் நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களில் 3 கோடி ரூபா பணம் சலவை செய்யப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பிலேயே இவ்வாறு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளவர்களில் சுஜானி போகொல்லாகம, நித்யா சேனானி, இரேஷா சில்வா மற்றும் இந்திக கருணாஜீவ ஆகியோரும் அடங்குவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



காரைநகர் – கருங்காலி போசுட்டி திருவருள்மிகு ஸ்ரீ முருகமூர்த்தி ஆலய மஹாகும்பாபிஷேகம் இன்று காலை 8.17 மணிமுதல் 10.08 மணி வரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.




# சிங்கள கிறிஸ்தவ மக்கள் முள்ளிவாய்க்காலில் வழிபாடு



முள்ளிவாய்க்கால்பகுதியில் சிங்கள கிறிஸ்தவ மக்களின் சிறப்பு வழி பாட்டு நிகழ்வு ஒன்று நேற்று முன்தினம் மாலை 5.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இந்த சிறப்பு வழிபாட்டு நிகழ்வில் தென்னிலங்கையில் இருந்து சென்ற ஏராளமான சிங்கள மக்களும் முள்ளிவாய்க்கால் பகுதி பொதுமக்களும் இணைந்துபங்கேற்றிருந்தனர்.

தமிழ் மக்களுக்கு சிங்கள பேரினவாதிகளினால் காலங்காலமாக திட்டமிட்டு நடத்தப்பட்ட நீதியற்ற செயல்களுக்கு சிங்கள மக்கள் மன்னிப்பு கோரும் சிறப்பு வழிபாடாகவே இந்த நிகழ்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வழிபாட்டை நிகழ்த்திய பிரதான ஏற்பாட்டாளர்கள் முள்ளிவாய்க்கால் வணக்கத்தின் போது தெரிவித்தவை வருமாறு:-

2009 ஆம் ஆண்டு அப்போதைய அரசாங்கத்தின் அடக்குமுறைக்குள் இவ்விடத்தில் பொதுமக்கள் அகப்பட்டுள்ளனர். அப்பொழுது மக்கள் வாழ்விடங்களை இலக்கு வைத்து கொத்துகொத்தாக குண்டுகள் வீசப்பட்டன. அப்பாவிப் பொது மக்களின் உடல்கள் சிதைக்கப்பட்டு இரத்தம் ஆறாக ஓடிக் கொண்டிருந்தது.

அச்சமயம் யுத்தம் நடைபெறாத பகுதியில் இருந்த மக்களாகிய நாம் பால்சோறு உண்டு சந்தோசக் களிப்பில் இருந்துள்ளோம். அதற்காகத் தற்பொழுது முள்ளிவாய்க்காலில் மண்டியிட்டு நாங்கள் மன்னிப்பு கோருகின்றோம்.

மேலும், "விழுந்துள்ள சமூகத்தை மீண்டும் கட்டி எழுப்ப வேண்டும். அதற்காக எழுந்து நிற்கும் சமூகம் குனிய வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்று. அவ்வாறு குனிந்தால் மட்டுமே விழுந்த சமூகத்தை மீண்டும் எழுப்ப முடியும். இவ்வாறு எழுந்து நிற்கும் நாம் குனியும் போது எங்களுடைய வசதிகள் அனைத்தையும்விடுக்கவேண்டி வரலாம். அல்லது நாங்கள் தேசத்துரோகியாகக் கூடக் கருதப்படலாம்."

"எவ்வாறாயினும் நாம் குனிந்தால் மட்டுமே வீழ்ந்தவர்களை எழுப்பமுடியும். அவ்வாறு வீழ்ந்த சமூகத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக எங்களை நாங்கள் அர்ப்பணிப்போம். - என்று கூறியுள்ளனர்.

முள்ளிவாய்க்காலில் சிறப்பு வழிபாட்டை மேற்கொள்வதற்கு என்ன காரணம் என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு ஏற்பாட்டாளர்கள் பதிலளிக்கையில் –

இவ்வாறான கிறிஸ்தவ திருச்சபை வழிபாட்டை இறுதி யுத்தம் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் பகுதியில் நிகழ்த்தி அங்குள்ள பாதிக்கப்பட்ட பொதுமக்கள் முன்னிலையில் பொதுமன்னிப்புக் கோர வேண்டும் என்று பெரும்பாலான கிறிஸ்தவ சிங்கள மக்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். அதற்கமைய இந்த சிறப்பு வழிபாடு இடம்பெற்றுள்ளது."–என்றுதெரிவித்துள்ளனர்.

# கிளிநொச்சியில் கஞ்சாவுடன் இளைஞன்கைது!

கஞ்சாவுடன் சென்ற இளைஞன் ஒருவன் பரந்தன் சிவபுரம் உண்டியல் சந்திக்கு அருகில் வைத்து நேற்று மாலை கைது செய்யப்பட்டான். கிளிநொச்சி விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாகவே அவன் கைது செய்யப்பட்டான்.

அந்தப் பகுதியில் வெடிச் சத்தம் கேட்டது எனவும், விசேட அதிரடிப் படையினர் துப்பாக்கியால் வெடி வைத்தே அந்த இளைஞனைப் பிடித்திருப்பர் எனப் பிரதேச மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். எனினும், விசேட அதிரடிப் படையினர் அதை மறுத்துள்ளனர்.

மேற்படி நபர் கறுப்பு நிறப் பை ஒன்றினுள் கஞ்சாவைக் கொண்டு, நடந்து சென்று கொண்டிருந்தான். அதன்போதே விசேட அதிரடிப்படையினர் சுற்றிவளைத்தனர். அப்போது அந்த இளைஞன் வயல்வெளி ஊடாகத் தப்பிச்செல்ல முயன்றான். ஆனாலும் தாங்கள் இளைஞனை மடக்கிப் பிடித்தார்கள் என விசேட அதிரடிப் படையினர் கூறினர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து நான்கு கிலோ கஞ்சா மீட்கப்பட்டது எனவும் விசேட அதிரடிப் படை வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-70)

# வாள்வெட்டுடன் சம்பந்தப்பட்ட நால்வர் கைது

வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்கள் எனக் கருதப்படும் 4 இளைஞர்களை நேற்று முன்தினம் அதிகாலை 4 மணியளவில் கைதடிப் பகுதியில் வைத்து யாழ். பொலிஸார் கைது செய்திருக்கின்றனர்.

இவர்கள் 19 தொடக்கம் 21 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. அவர்களது வீடுகளில் வைத்தும் நண்பர்களின் வீடுகளில் வைத்தும் அவர்கள் கைது செய்யப்பட்டனர். (உ)



வண்ணை வைத்தீஸ்வர ஆலயத்தின் வருடாந்தத் தேர்த்திருவிழா நேற்று சனிக்கிழமை நடைபெற்றபோது சுவாமி தேரில் வலம் வருவதைப் படத்தில் காணலாம்.

தேவை
யாழ்.நகரில் ஸ்ரூடியோ ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை.
1.Photoshop Desinging
2.Video Editing
3. சிற்றூழியர்
அனுபவமுள்ளவர்கள் இருபாலாரும் நேரில் வரவும்.
309, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0777162339
(016)

நாகபூஷணி திருமண சேவை
நீங்கள் விரும்பும் டாக்டர், எஞ்ஜினியர், எக்கவுண்டன், சட்டத்தரணி, வங்கி உத்தியோகத்தர், ஆசிரியர், அரச உத்தியோகத்தர் மற்றும் தனியார் துறையினர் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். மிகப்பொருத்தமாக உடன் தெரிவு செய்து தரப்படும்.
ஏழு நாள்களும் திறந்திருக்கும்.
021 222 9306, 077 1387596
383/14B கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Email: nakapoosany wedding @ gmail.com
(R/014)

அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள், பொதிகள் சேவை
எமது சேவை 365 நாட்களும்
விரைவாகவும் பாதுகாப்பாகவும் 72 மணி நேரத்தில் உலகின் எப்பாகத்திலும் ஒப்படைக்கப்படும் (EXPRESS SERVICE)
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் ஏற்கப்பட்டு வெளிநாடுகளில் ஒப்படைக்கப்படும் (Door to Door Service)
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
இல.10, புதிய மாநகரசபைக் கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Call - 021 222 3536
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர்வீதி சந்தி, யாழ்ப்பாணம்.
Call - 021 222 6113

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 7/23 கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.04.2017 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.